21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

To Join Our Brokerage /
Fou your Real Estate Needs
Raja Mahendran, P.Eng.
Contact: 416.315.9397

நதி 21 | பாலம் 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2011

# ஒன்ராறியோவின் அடுத்த முதல்வர் யார்?

ஒன்ராறியோ மாகாணசபையின் 40 ஆவது தேர்தலிற்கு இன்னும் 5 நாட்களே இருக்கின்றன. இத்தேர்தலில் GTA பகுதியில் இருதமிழர் பழையவாதக்கட்சி மற்றும் புதிய ஜனநாயகக்கட்சி சார்பில் போட்டியிடுகிறார்கள். மார்க்கம் - யூனியன் வில் பகுதியில் சாண் தயாபரன் மற்றும் றூஜ் றிவர் பகுதியில் நீதன் சாண் போட்டியிருகின்றார்கள்.

றூஜ் றிவர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதல் தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே தொகுதியில் NDP சார்பாக நீதன் சாண் ஒன்ராறியோ மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

ஒன்ராறியோவில் 107 தொகுதிகளைக் கொண்ட அரசு உள்ளது. 54 தொகுதியில்





வெல்லும் கட்சியே தனி ஆட்சி அமைக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டு.

2007 ஆம் ஆண்டு ஒக்டோர்பர் 10ஆந் திகதி நடைபெற்ற ஒன்ராறியோ பொதுத்தேர்தலில் நீதன் சாண் மற்றும் சாமி அப்பாத்துரை போட்டியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுத்தேர்தலில் தமிழர்கள் போட்டி யிடுவது இது முதல் தடவையல்ல. 1995, 1999 ஆம் ஆண்டு தேர்தல்களிலும் தமிழர்கள் போட்டியிட்டுள்ளார்கள். இவ்வருடம் மே 02ஆந் திகதி ராதிகா சிற்சபைஈசன், கனேடிய பொதுத்தேர்தலில்

இந்த கட்டுரை எழுதும் கட்டத்தில் லிபரல் கட்சியும் பழமைவாதக் கட்சியிலும் கிட்டத்தட்ட ஒரேயளவான புள்ளிகளைப் பெற்று இறுக்கமான போட்டி நிலையில் உள்ளார்கள். எதிர்வரும் நாட்களில் நடைபெறும் நிகழ்வுகளும் இதுவரை முடிவு எடுக்காதவர்களின் முடிவுகளிலும் யார் வெற்றிபெற்று ஆட்சி அமைப்பார்கள் என்ற

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

## கனேடிய, இலங்கை வெளி விவகார அமைச்சர்கள் சந்திப்பு!

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் ஃபெயர்ட் (John Baird) இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் ஐ ஐக்கிய நாடுகள் சபையின் 66ஆவது தொடர் கூட்டத்தின் போது நியூயோர்க் நகரில் செப்டம்பர் 22, 2011 இல் சந்தித்தார்.

இதுவே இந்த இரண்டு அமைச்சர் களினதும் முதலாவது உத்தியோகபூர்வ மான சந்திப்பாகும். இவர்கள் இந்த சந்திப்பின் போது பல விடயங்கள் பற்றி பேசினார்கள். இவர்களுடைய பேச்சில் பொதுநலவாய நாடுகளின் விடயம், ஜனநாயகம், மனித உரிமைகள் என்பன பற்றியும் உரையாடப்பட்டது.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் இலங்கை அரசின் செய்கைகளில், அவர்கள் பொறுப்பு ஏற்காமை பற்றிய, கனேடிய அரசின் கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார். அதைவிட இலங்கை அரசின் செய்கைகள் அதிகாரத்தோரணையில் செல்வதையும் (Authoritarianism) கனேடிய அமைச்சர் சுட்டிக்காட்டினார். கனேடிய அமைச்சர், இலங்கை அரசை நாட்டில் உள்ள எல்லா மக்களையும் சேர்த்து ஒருங்கிணைத்து செயல்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
MONEY TRANSFER
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5, Markham & Eglinton, Tel:416.264.3232
3351Markham Rd., #129, Markaham & Steeles, Tel: 416.609.2022

# கனேடிய, இலங்கை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கை அரசு மனித உரிமைகள் சம்பந்த விடயத்தில் எதுவித முன்னேற்றமான நடவடிக்கைளை எடுக்காது பொதுநலவாய அமைப்பு நாடுகளின் 2013ஆம் ஆண்டில் நடைபெறும் கூட்டத்தை நடத்த முற்படுவது பற்றிய கனேடிய பிரதமரின் கரிசனையை கனேடிய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு மிகவும் தெளிவாக விளங்கப்படுத்தினார்.



இலங்கையில் நடைபெற்ற போரின் போது போரில் ஈடுபட்ட இருபகுதியினரும் நடத்திய மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை ஒரு சுதந்திரமான விசாரணை நடத்தி அதில் ஈடுபட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என உலக நாடுகள் கேட்பதை கனேடிய அரசும் வலியுறுத்துகிறது எனவும் ஜோன் ஃபெயர்ட் கூறினார்.

## பிரித்தானியாவிலிருந்து பலரின் நாடு கடத்தல் தடுக்கப்பட்டுள்ளது - சனல் 4

## பிரித்தானியாவிலிருந்து 50 இலங்கையர் நாடுகடத்தப்பட்டுள்ளனர் -இலங்கை அரசு

பிரித்தானியாவிலிருந்து இலங்கையர் பலர் கடந்த புதன்கிழமை செப்ரெம்பர் 28, 2011 மாலை இலங்கைக்கு நாடுகடத்தப்பட இருந்தார்கள். இவ்வாறு பலவந்தமாக நாடுகடத்தப்பட இருந்தவர்களை நிறுத்துவதற்காக புதன்கிழமை பகல் முழுவதும் நீதிபதி முன்னிலையில் வாதாடிய சட்டத்தரணிகளின் வாதத்திற்கு செவிசாய்த்த நீதிபதி நாடுகடத்தலை ஒத்திவைக்க கோரியுள்ளதாக சனல் 4ஐ சேர்ந்த ஜோனதன் மில்லர் புதன்கிழமை இரவு செய்தியில் தெரிவித்தார்.

இந்த தீர்ப்பின் பின்னர் நாடுகடத்துவதற்காக ஏற்கெனவே விமானத்தில் ஏற்றப்பட்டிருந்தவர்கள் இறக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். Essex இல் உள்ள Stansted விமான நிலையத்தில் நாடுகடத்தப்பட இருந்தவர்களை இறக்கிவிட்டு PV030 விமானம் 5 மணித்தியால தாமத்தின் பின்னர் புதன்கிழமை மாலை 8 மணிக்கு புறப்பட்டது.

இவ்வாறு நாடு கடத்தப்பட இருந்தவர்கள் தமது அகதிக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னரும் நாட்டில் இருந்தவர்களாவர். இவர்களுக்காக வாதாடிய சட்டத்தரணிகள் இவர்களில் பலர் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்பு உடையவர்கள். இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு துன்புறுத்தல் மற்றும் கடும் விசாரணைக்கு உள்ளாக்கபடுவார்கள் என தெரிவித்திருந்தார். இந்த விசாரணையை எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிபதி பிரித்தானியாவில் எல்லை காவல் அமைப்பு (UKBA) பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய சட்டங்களை மீறி இலங்கை அரச அதிகாரிகளுக்கு சிலருடைய இரகசிய தகவல்களை வழங்கியுள்ளனர். இதனால் அவர்களை இலங்கைக்கு அனுப்புவது பாதுகாப்பு இல்லை என கூறியிருந்தார். இதற்கு பதிலளித்த இரண்டு பிரித்தானிய அரச திணைக்களங்கள், இரண்டு புறம்பான தபாலில், நீதிபதிக்கு UKBA தவறுதலாக 14 பேருடைய தகவல்கள் இலங்கை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததை ஒப்புக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் அந்த 14 பேரும் இம்முறை நாடுகடத்தப்பட இருந்தவர்கள் பட்டியலில் இருக்கவில்லை என வாதிட்டார்கள்.

இது இவ்வாறிருக்க இலங்கை அரசின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளில் ஒருவரான Chulananda Perara ஊடகங்களுக்கு தெரிவித்த அறிக்கையின்படி நாடுகடத்தப்பட்ட இலங்கையரான 42 ஆண்களையும் 8 பெண்களையும் 100 பிரித்தானிய சட்ட அமலாக்கப்பிரிவினரையும் கொண்டு விமானம் ஒன்று பிரித்தானியாவிலிருந்து கட்டுநாயக்கா விமானநிலையத்திற்கு செப்ரெம்பர் 29, 2011, வியாழன் காலை 10:22 மணிக்கு வந்து இறங்கியதாகத் தெரிவித்துள்ளார். இந்த 50 இலங்கையரும் தற்போது புலனாய்வுப் பிரிவினரால் (CID) விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கடந்த ஆண்டு மட்டும் பிரித்தானியா அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட 235 இலங்கையர் உட்பட 555 இலங்கையர்களை நாடுகடத்தியுள்ளது.

## கனடா நாடாளுமன்றத்தில் திரையிடப்பட்ட "இலங்கையின் கொலைக்களம்"

சிறிலங்கா தூதரகம் மற்றும் சிறிலங்காவின் ஆதரவு அமைப்புக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் கனடியப் நாடாளுமன்றத்தில் சனல் 4 இன் "இலங்கையின் கொலைக்களம்" விவரணத் திரைப்படம் செப்ரெம்பர் 28, 2011 இரவு காண்பிக்கப்பட்டது.



மாலை 6 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வு இரவு 9.00 மணிவரை நீடித்தது. முதலில் இந்த நிகழ்வை ஆரம்பித்துப் பேசிய மனிதவுரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான துணை இயக்குனர் திருமதி எலைன் பியர்சன் அவர்கள் சிறீலங்கா தொடர்ச்சியாக காலத்திற்கு காலம் மேற்கொண்டு வரும் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதாக சர்வதேசத்திற்கு காட்டும் வகையில், உள்ளக விசாரணைக் குழுக்கள் பலவற்றை இதுவரை அமைத்துள்ளதென்றும், ஆனால் அந்தக் குழுக்களில் ஒன்று கூட முழுமையாக விசாரணைகளை மேற்கொண்டதான வரலாறு இல்லையென்றும், எனவே இந்த யுத்தக் குற்ற மீறல்கள் குறித்து நியாயமான சர்வதேச விசாரணை தேவையென்றும் தெரிவித்தார்.

இதேவேளை பழமைவாத கட்சியின் சார்பில் இந்த நிகழ்வை நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு முன்னின்று செயற்பட்ட பற்றிக் பிரவுண் உரையாற்றுகையில், தான் இந்த நிகழ்வை நடத்தினால் தன் மீது சட்ட நடவடிக்கை

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பிளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# Peace இல் இருந்து Piece ஆகும் பாலஸ்தீனியம்!

பாலஸ்தீனியம் ஐக்கிய நாடுகள் சபையில் தன்னை ஒரு நாடாக அங்கீகரிக்கச் சொல்லி விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்துள்ளது. இதுவரை காலமும் பாலஸ்தீனியம் ஒரு பார்வையாளராக வாக்களிப்பற்ற பிரதேசமாக ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளது. இதனை எதிர்க்கும் நாடுகள் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது நிச்சயமாக இஸ்ரேல், அவற்றுடன் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளும் முன்னிலையில் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக உள்ள மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் பாலஸ்தீனத்தை ஆதரிக்கின்றன. அதாவது உலக சனத்தொகையில் 75 வீதமான நாடுகள் பாலஸ்தீனியத்தை ஆதரிக்கின்றன.

முன்னாள் அமெரிக்க அதிபர் கிளின்டன் இவர் பாலஸ்தீனியரின் நண்பரல்ல. புரட்டாதி 23, 2011 இஸ்ரேல் பிரதமரின் ஐக்கிய நாடுகள் சபை பேச்சின் பின்னர் அவர் கூறியது இது "Netanyahu does not want negotiations... he's just not going to give up the West Bank'. (இஸ்ரேலிய பிரதமருக்கு பேச்சுவார்த்தைகள் தேவையில்லை. மேற்கு வங்கிப் பகுதியை அவர் ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டார்.) இஸ்ரேலிய அதிகாரிகள் அடிக்கடி கூறிக் கொள்வது "Israel wants peace but cannot find a partner for peace." இஸ்ரேலுக்கு peace தேவையில்லை. பாலஸ்தீனியத்தின் இன்னமொரு piece தான் தேவை. பாலஸ்தீனிய ஆலோசகர் Michael Tarazy கூறியது We are negotiating about sharing a pizza and in the meantime Israel is eating வை.' (நாங்கள் பீசாவை பங்கு போட பங்கு போட பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம். அதேசமயம் அதே பீசாவை இஸ்ரேல் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றது)

**- ரதன் -**

## 2. சில பின்னோக்கிய நினைவுகள்

முதலாம் உலகப்போரின் பின்னர் பிரித்தானிய சாமராஜ்ஜயத்தில் ஒரு பகுதியாக பாலஸ்தீனியம் மாறியது. 1947 கார்த்திகை 29ல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நடைபெற்ற வாக்களிப்பில் 55 வீதம் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் 44 வீதமான நாடுகள் பாலஸ்தீனியத்துக்கு ஆதரவாகவும் வாக்களித்தன. 1948 இஸ்ரேல் 78 வீதமான பாலஸ்தீனிய பிரதேசத்தை கைப்பற்றியது. ஜோர்டான் மேற்கு வங்கி பிரதேசத்தையும் எகிப்து காசாப் பிரதேசத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. 1967ல் நடைபெற்ற ஆறு நாள் போர் மேலும் பல பிரதேசங்களையும் சிரியாவின் GOLAN HEIGHTS பகுதியையும் இஸ்ரேல் கைப்பற்றியது. Gaza Strip, Sinai Peninsula (Egypt) West Bank, East Jerusalem (Jordan) ஆகிய பகுதிகளையும் இஸ்ரேல் கைப்பற்றியது. 1974 கார்த்திகை 22ம் நாள் non-state entity ஆக பாலஸ்தீனம் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்பட்டது. 1993ல் பாலஸ்தீனிய அதிகார சபை உருவாக்கப்பட்டது. மேற்கு வங்கி, காசா ஆகிய பிரதேசங்களை நிர்வாகிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. எனினும் இஸ்ரேலுக்கான வரி செலுத்தல் போன்ற முக்கிய விடயங்கள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தன.

3. புரட்டாதி 23 ம் நாள் நியுயோர்க் நகரத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை மண்டபத்தில் உரையாற்றிய பாலஸ்தீனிய அதிபர் முகமட் அபாஸ் 'சமாதானத்திற்கும் எனது மக்களின் இறைமைக்கும் நல்லதொரு வாழ்விற்குமாக இதனை முன்வைக்கின்றேன்' என்றார். அவர் மேலும் பேசுகையில் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் இதே காலகட்டத்தில் இதே சபையில் உறுப்பினர்களால் ஒரு சமாதான முன்னெடுப்பு முன்வைக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் இந்த சமாதானப் பேச்சுவார்த்தையில் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. அமெரிக்க அதிபர் பராக் ஒபமா நேரடி கண்காணிப்பில், Quartet (நால்வர் தொகுதி எனப் பொருள் படும். ஐக்கிய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ருசியா ஆகியன அடங்கும். 2002ல் மத்திய கிழக்கிற்கான நால்வர் தொகுதி மட்றீட்டில் நடைபெற்ற மாநாட்டில் அமைக்கப் பட்டது) மற்றும் எகிப்து ஜோர்டான் ஆகிய நாட்டு பிரதிநிதிகளுடன் வோசிங்கடனில் புரட்டாதி மாதம் ஆரம்பமானது. நாங்களும் திறந்த மனதுடன் பல பக்க நியாயங்களை கேட்கும் மனப்பான்மையுடன் உள்ளார்ந்த மாக கலந்து கொண்டோம். சமாதான மாநாடு தொடங்கி சில வாரங்களிலேயே இது முறிவடைந்து விட்டது.



கடந்த காலங்களில் எங்களது மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. சூறையாடப் பட்டுள்ளன. 1993 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இஸ்ரேல்-பாலஸ்தீனிய ஒப்பந்தத்தின் பின்னர் பல தடவை சமாதான நடவடிக்கைகள் முறிவடைந்துள்ளன. ஆனால் இன்னமும் எங்களுக்கு சமாதானத்தில் நம்பிக்கையுண்டு. உலக சமாதானத்தில் எங்களுக்கு அக்கறையுண்டு. எங்களது மக்களுக்காக தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் தைரியம் எங்களுக்கு உள்ளது. எங்களது மக்களுக்கு சரித்திரபூர்வமாக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி தேவை.

நாங்கள் பாலஸ்தீன பிரதேசத்தை அமைக்க ஏற்றபோது 1967ல் இஸ்ரேலால் அபகரிக்கப்பட்ட நிலத்தின் 22 வீதமே எம்மிடமிருந்தது. அதனைக் கொண்டே பாலஸ்தீனிய பிரதேசத்தை அமைத்தோம். எங்களது நோக்கமே எங்களது மக்களின் இறைமை அங்கீகரிக்கப்பட வேண்டும். கிழக்கு ஜெருசலேத்தை தலைநகரமாகக் கொண்ட நாடு அமைக்கப்பட வேண்டும். எங்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலம் மீள கிடைக்க வேண்டும். நாங்கள் பயங்கரவாத்தை எதிர்க்கின்றோம் அதனை ஆதரிக்கமாட்டோம். எங்களது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக, அவர்களது சுபீட்சமான அமைதியான பாதுகாப்புடன் வாழ்விற்காக போராடுகின்றோம். காவலரண்களையும் மதில்களையும் எங்களை பிரிப்பதற்கு பதிலாக இரு தரப்பு மக்களுக்கும் உரையாடல் மூலம் பாலமைப்போம். நான் பாலஸ்தீனிய மக்கள் சார்பாக இஸ்ரேலையும் இஸ்ரேலிய மக்களையும் கேட்டுக் கொள்வது நாங்கள் இணைந்து சமாதானத்தை ஏற்படுத்துவோம். (இது அவரது பேச்சின் நேரடி மொழிபெயர்ப்பல்ல, சுருக்கமே.) அதேசமயம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பலமின்மையும், குரலின்மையும் பாலஸ்தீனியம் கவனிக்கத் தவறவில்லை. இவரது பேச்சு முடிந்த பின்னர் உறுப்பினர்கள் எழுந்து நின்று கைதட்டினர். இதன் பின்னர் பேசிய இஸ்ரேலிய பிரதமர் 'நான் கைதட்டல் பெறுவதற்காக இங்கு பேசவில்லை. உண்மையை பேசவே வந்துள்ளேன்.' என்றார்.

4. இந்த கோரிக்கை பல படிகளில் ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானிக்கப்படும். ஐக்கிய நாடுகள் பொதுச்சபை முதலில் இதனை அங்கீகரித்து பின்னர் பாதுகாப்புச் சபைக்கு இதனை அனுப்பும். பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் அனைவரும் அங்கீகரித்த பின்னர் இது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்படும். ஐக்கிய நாடுகள் சபையில் மூன்றில் இரண்டு அங்கத்தவர்கள் இதனை அங்கீகரிக்க வேண்டும். அங்கத்த வரற்ற அங்கத்தவராக வேண்டுமெனில் 193 பேர் கொண்ட பொதுச் சபையில் சாதாரண பெரும்பான்மை கிடைத்தாலே போதுமானது.

கார்த்திகை 1947ல் ஐக்கிய நாடுகள் சபையில் சரத்து 181 அங்கீகரிக்கப்பட்டு இஸ்ரேல் என்ற நாடு உருவானது. இன்று அதே சபையில் அதே சரத்தை மையமாக வைத்து பாலஸ்தீனியம் கோரிக்கை வைக்கின்றது.

இதனை இஸ்ரேல் எதிர்ப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. நேரடிக் காரணம் மிக நீண்டகால போர்ப்பகை கொண்ட பாலஸ்தீனியத்துக்கு 'நாடு' என்ற அந்தஸ்து வழங்குவதை இஸ்ரேலியர்கள் ஒரு போதும் ஏற்கமாட்டார்கள். இது மனோரீதியானது. இந்நிலை பாலஸ்தீனியத்துக்கு மாத்திரமல்ல, தமிழர்கள் உடபட்ட ஒடுக்கப்பட்ட தேசியங்களை கொண்ட மக்களைக் கொண்ட பிரதேசங்கள் அனைத்துக்கும் உரியது. நாடாக அங்கீகரிக்கப்படின் 1967ல் அபகரித்த பல பிரதேசங்கள் மீள கொடுக்க வேண்டும். அபகரித்த பிரதேசங்களில் முதலில் இரண்டு லட்சம் மக்கள் வாழ்ந்தனர். தற்பொழுது அது ஆறு மடங்காக அதிகரித்துள்ளது. பாலஸ்தீனியத்தை தொடர்ந்து ஆக்கிரமிப்பதை நிறுத்த வேண்டும். சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்கள் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக பாலஸ்தீனியம் வழக்குகளை தொடரும். ரோம் ரெரற்றி (Treaty of Rome - ஐரோப்பிய வர்த்தக வலயம்) யில் அங்கத்துவம் பெறின் பல இஸ்ரேலிய தலைவர்களை சர்வதேச கிரிமினல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கத் தூண்டும்.

5. ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப் பட்ட கோரிக்கை மீது பாலஸ்தீனத்துக்குள் கருத்து வேறுபாடுகள் உள்ளன. A West Bank/Gaza state with East Jerusalem as its capital. இதுவே சாரம்சம் Fatah (the governing party of the Palestinian Authority in the West Bank,) the Popular Front for the Liberation of Palestine, the Democratic Front and the Palestine People's Party (formerly the Communist Party), the Palestinian National Initiative, led by Mustafa Barghouti ஆகிய அமைப்புக்கள் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கின்றன. காசாப் பகுதியை நிர்வகிக்கும் ஹமாஸ் இதனை எதிர்க்கின்றது. இவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை மீது நம்பிக்கையில்லை. ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பது ஹமாசின் கருத்து. Fatah அதாவது ஆளும் அமைப்பு தங்களுடன் கலந்துரையாடவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இவர்கள் இரு நாட்டு சமாதானம்

**தொடர்ச்சி 12ஆம் பக்கம்**


**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# கர்ம காரியங்கள் - சில காரணங்கள்

"யாரேனும் இறந்து போனால், அவர்கள் நினைவாக செய்யப்படும் கர்ம காரியங்களால் உள்ளபடியே பயன் உண்டா?"

இந்தக் கேள்வியை என்னிடம் பலரும் கேட்கிறார்கள். அந்தக் காரியங்கள் செய்யப்படுவதற்கென்று சில காரணங்களும், அடிப்படைகளும் இருக்கின்றன. காலப்போக்கில் சிலர் அதையும் வியாபாரம் ஆக்கிவிட்டார்கள். உங்கள் அம்மாவின் மரணத்தை யாரோ வியாபாரமாக்குவதில் உங்களுக்கு வருத்தம் வரலாம். ஆனால் அவர்களுடைய அம்மாவும், மனைவியும், குழந்தைகளும் வாழ வேண்டியிருக்கிறதே!

உலகில் எத்தனையோ வியாபாரங்கள் உள்ளன. ஆனால், இது நிரந்தரமான வியாபாரம். என்ன நடந்தாலும், நடக்காவிட்டாலும் மனிதர்கள் இறப்பது மட்டும் தொடர்ந்து நடக்கும். இந்த வாய்ப்பை நழுவ விடுவார்களா என்ன? அது மட்டுமல்ல. இந்தக் காரியங்களை செய்வதில் நீங்கள் காட்டும் அக்கறைக்கு உங்கள் குற்ற உணர்வு கூடக் காரணம். சிலர், தங்கள் அம்மாவை, அவர் வாழ்கிறபோது சரியாக கவனித்திருக்க மாட்டார்கள். தங்களை சமாதானப்படுத்திக் கொள்வதற்காகவாவது 12 நாட்களோ 13 நாட்களோ சில காரியங்களை செய்கிறார்கள். இது ஒருவகையில் உளவியல் சிகிச்சைதான். உளவியல் மருத்துவரிடம் போவதை விட குறைந்த செலவிலே நடந்துவிடுகிறது. அதிகம் போனால் இவர்கள் என்ன கேட்கிறார்கள். ஒரு கிண்ணம் அரிசி, ஒரு கிண்ணம் தானியங்கள். மிஞ்சிப் போனால் ஒரு பசுமாடு, பால், குடை இப்படி சில விஷயங்களைக் கேட்கிறார்கள்.


இறந்த பிறகு நிச்சயம் உங்கள் அம்மாவுக்கு அந்தக் குடை தேவையில்லை. செருப்பு போட்டுக் கொள்ளவும் தேவையில்லை. வாழ்கிற யாரோ ஒருவருக்குத்தான் அவை தேவைப்படுகின்றன. அவர்களைத்தான் இந்தப் பொருட்கள் சென்றும் சேர்கின்றன.

முந்தைய காலங்களில், இவற்றை உண்மையாக செய்தவர்கள் பலர் இருந்தார்கள். மரணம் பற்றிய புரிதலும் இருந்தது. பலரும் பலவிதமாக மரணத்தை தழுவுகிறார்கள். எல்லோரும் ஒரே மாதிரியாக பிறப்பதுமில்லை. எல்லோரும் ஒரே மாதிரியாக இறப்பதுமில்லை. ஆகாயம் இடிந்து விழுந்து அத்தனை பேரும் ஒரே நேரத்தில் இறந்தாலும் கூட ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகத்தான் இறந்து போவார்கள். ஒரே சூழலில் அவர்கள் இறந்திருக்கலாமே தவிர ஒரே மாதிரியாக இறக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, அவர்களுக்காக செய்யக்கூடிய சில காரியங்கள் அவர்களுக்குப் பெரிதும் உதவக்கூடும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

முதலில், வியாபாரம் செய்வது தவறில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் எது வியாபாரம்? எது ஆன்மீகம்? என்று பகிரங்கமாகச் சொல்கிற நேர்மை உங்களுக்கு இருப்பது அவசியம். ஈஷாவில், வணிக நிறுவனம் ஒன்றைத் தொடங்கலாம் என்று முடிவெடுத்த போது, நான் அதற்கு "ஈஷா பிசினஸ்" என்ற பெயரை நேரடியாகக் கொடுத்தேன். ஈஷா அறக்கட்டளை, ஈஷா பிசினஸ் இரண்டையும் யாரும் ஒன்றாக நினைத்து குழப்பிக் கொள்ளக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். வணிகத்தை வணிகமாகக் கையாள வேண்டும். ஆன்மீகத்தை ஆன்மீகமாகக் கையாள வேண்டும். பலர், தங்கள் வணிகத்தை ஆன்மீகமாகவும், ஆன்மீகத்தை வணிகமாகவும் நினைத்துக் கொண்டு படாதபாடு படுகிறார்கள்.

ஒருமுறை அமெரிக்காவில் ஆஸ்டினிலிருந்து டெக்ஸாஸ் நோக்கி ஒரு விமானம் புறப்பட்டது. விமானம் பறக்கத் தொடங்கி சிறிது நேரத்திலேயே என்ஜின்கள் செயலிழக்கத் தொடங்கின. பைலட் அறிவித்தார், "இனி தரையிறங்க வாய்ப்பில்லை. விமானம் விழப்போகிறது. யாராவது சமய நம்பிக்கை அடிப்படையில் ஏதாவது செய்ய முடிந்தால் செய்யுங்கள்" என்று. உடனே ஒருவர் எழுந்து, தன் தொப்பியைக் கழற்றி, எல்லோரிடம் நீட்டி, பணம் வசூல் செய்ய ஆரம்பித்தார். அவருக்குத் தெரிந்த அதிகபட்ச ஆன்மீகமே பணம் வசூல் செய்வதுதான்.



## சத்குரு வாசுதேவ்

புரோகிதத்தின் பெயரால் ஒரு சிலர் உங்களிடம் பணத்தையும், பசுமாட்டையும் பிடுங்கிக் கொண்டு போகலாம். ஆனால், பிடுங்கிக் கொண்டு போனவரின் கொள்ளுத் தாத்தாவுக்கும், எள்ளுத் தாத்தாவுக்கும் கர்ம காரியங்களை எப்படிச் செய்ய வேண்டுமென்று துல்லியமாகத் தெரிந்திருக்கும். அவருடைய அறிவுக்கான கட்டணத்தை இன்று செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இடையில் எங்கோ விஷயங்கள் சீரழிந்தன. இன்று பலருக்கும் அது வெற்றுச் சடங்காகி விட்டது. இவர்கள் சில மந்திரங்களை மட்டும் கற்றுக் கொண்டார்கள். குறிப்பாக நவீன சமூகத்தில் எல்லாமே சடங்கு பூர்வமாகி விட்டது. இதற்கு வருங்காலத்தில் பெரிய விலையைக் கொடுக்க வேண்டி வரும். ஏனென்றால் நவீன சமூகத்தில் வாழ்க்கையே சடங்கு பூர்வமாக ஆகிக் கொண்டிருக்கிறது.

பொதுவாக, மரணம் இயல்பாக நிகழ்கிறதென்றால் வாழ்வின் சக்திகள் வகுத்தது போல நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். கர்ம வினைக்கென்று பலவிதமான பரிமாணங்கள் உள்ளன. இப்போது நீங்கள் உங்கள் பிராரப்த கர்மத்துடன் தொடர்பில் இருக்கிறீர்கள். இது ஒரு விதமான மென்பொருள். அந்த பிராரப்த கர்மத்தை எரிக்கும் விதத்தில் வாழ்க்கை அமைகிறது. வாழ்க்கை நடப்பதற்கென்றும் இந்த உடலில் தங்குவதற்கென்றும் ஒரு தீவிரத்தன்மை தேவைப்படுகிறது. தீவிரத்தன்மை உச்சமடைந்து ஓர் எல்லையைக் கடந்து போகிறபோது உடல் கடந்து போகிறார்கள். இதையே "சமாதி அடைந்தார்" என்கிறோம். அல்லது குறிப்பிட்ட எல்லைக்கு கீழாக உயிர்சக்தி பலவீனமடைந்து உடலைவிட்டு நழுவுகிறது. இதை இயல்பான மரணம் என்கிறோம். பல முதியவர்கள் வெறுமனே படுத்துக் கண் மூடுவார்கள். இறந்து போவார்கள். எந்த விதமான நலக்குறைவும் ஏற்பட்டிருக்காது. ஈரல், சிறுநீரகம், இதயம் எல்லாமே நன்றாக இருக்கும். ஆனால் இறந்திருப்பார்கள். இவர்கள் தங்களுடைய வாழ்வை முழுமையாய் வாழ்ந்ததாக அர்த்தம்.

மிகச்சிலரே, சமாதி நிலையில் உடலை விடுகிறார்கள். சிலர் இயற்கை மரணம் எய்துகிறார்கள். பலரும் ஏதாவதொன்று சிதிலமடைவதால் இறக்கிறார்கள். கார் மோதியிருக்கலாம். புகை பிடித்ததால் உடல் நலம் கெட்டிருக்கலாம். ஏதோவொரு காரணத்தால் உடலில் உயிர் தொடர்ந்து தங்க முடியாமல் போய் மரணமடைகிறார்கள். உடலில் இன்னும் பல காலம் இருந்திருக்க வேண்டிய உயிர், வெளியேற நேர்ந்தது. அதனால் இன்னோர் உடலை உடனடியாக எடுத்துக் கொள்ள இயலாது.

இன்னமும் பத்தாண்டுகள் இருந்திருக்க வேண்டியவர் அளவுக்கதிமாக வேலை பார்த்து மாரடைப்பு வந்து மரணமடைந்தால் அவருக்கு விதிக்கப்பட்ட பிராரப்தம் மீதமுள்ள போதே இறந்துவிட்டார். பத்தாண்டுகள் செயல்படுவதன் மூலம் அவர் கழிக்க வேண்டிய கர்மவினையை உடல், மனம், செயல்திறன் ஆகியவற்றை இழந்ததால் மேலும் 100 ஆண்டுகள் அல்லது 500 ஆண்டுகள் வரை கழிக்கப்படாமல் இருக்கக்கூடும். தொற்று நோயாலோ, பிற நோயாலோ மரணமடைந்தவர்களுக்கு அதற்கடுத்த நிலையில் அவர்களுக்கான உதவியைச் செய்வதற்கென்றே ஒரு வகை விஞ்ஞானம் உருவாக்கப்பட்டுள்ளது.

அவர்கள் வாழும்போது அவர்களை குணமாக்க இயலவில்லை. அவர்கள் இறந்த பிறகு அவர்களின் வினைகள் விரைவாகக் கரைவதற்கு சில உதவிகளை செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கென்றே ஒரு விஞ்ஞானம் இருக்கிறது.

இது மிகவும் அத்தியாவசியமான விஞ்ஞானம். வாழ்க்கை பற்றிய மிக முக்கியமான புரிதல் ஏனென்றால், எல்லோருமே இறக்கிறார்கள். தங்களுக்கு நெருக்கமானவர்களைப் பறி கொடுக்கிறார்கள். அவர்களுக்கு நன்மை செய்யும் எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. இன்று பெரிதும் வளர்ந்திருக்கும் ஆங்கிலக் கல்வியால் இவை நமக்குப் புரியாத புதிர்களாய் தோற்றமளிக்கின்றன.

ஈஷாவில் இதற்கென்று சிலரை உருவாக்க விரும்புகிறோம். சில குழந்தைகளை அந்த விதத்தில் வளர்த்து வருகிறோம். அவர்கள் சரியான பாரம்பரியத்தில் வளர்ந்து, வாழ்க்கை குறித்த எளிமையானதும், அடிப்படையானதுமான அம்சங்களை மற்றவர்களுக்கு போதிப்பார்கள். இன்று, வியாபாரமாகக் கூடாத மூன்று துறைகளை சிலர் வியாபாரமாகவே செய்து வருகிறார்கள். கல்வி-உடல்நலம்-ஆன்மீகம். இவை எந்த சமூகத்தில் வியாபாரமாகிறதோ அந்த சமூகம் பின்னடைவைக் காணும். இந்தியாவில் இவை வணிகமயமாய் ஆகிக் கொண்டிருக்கின்றன.

சில விஷயங்கள் வணிகமயமாகாமல் பார்த்துக் கொள்வது அவசியம். அத்தகைய அர்ப்பணிப்புணர்வுடன், இது போன்ற அடிப்படையான அம்சங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் ஆர்வமுள்ளவர்களை ஈஷா வரவேற்கிறது!


- வாழ்க்கையில் உங்களின் கனவை நனவாக்கவிரும்புவோர் ஆண் / பெண் அல்லது குடும்பமாக இருப்போர்
- *Big Income (Huge Money)* தேவை என இருப்போர்கள்
- சுதந்திரமாக *Team Work* ஆக இயங்கி பணம் சம்பாதிக்க விரும்புவோர்கள்.
- நம்பிக்கையுடன் எம்மைத் தொடர்பு கொண்டால் நாம் உதவி செய்ய முடியும். அவர்கள் மட்டுமே நாம் காட்டும் Planஇனால் முன்னேற்றம் காண்பதுடன் Stress இல்லாது ஒரு புதிய வாழ்வை வாழ்வார்கள்.

எங்கே அழையுங்கள் பார்க்கலாம்
**416.669.2945 / 416.352.8655**

எங்களிடம் *2 plan* உள்ளது. நீங்களே தெரிவு செய்து கொள்ளலாம். நீங்கள் கண்டிப்பாக ஏமாற்றம் அடையமாட்டீர்கள்.

# நோர்வே NRK தொலைக்காட்சியில் சனல் 4 கொலைக்களம்

02ஆம் பக்கத்தொடர்ச்சி

எடுக்கப்படும் என்ற அளவிற்கு மிரட்டல் விடுக்கப்பட்ட போதும் தான் அதனைக் கருத்திலெடுக்காமல் இந்த நிகழ்வை நடத்தியதாகத் தெரிவித்தார்.

இதனையடுத்துப் பேசிய லிபரல நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்கே சிறீலங்காவில் தமிழர்களிற்கு இழைக்கப் படும் கொடுமைகள் பற்றிய உண்மைகளை தான் தற்போது உணர்ந்து கொண்டதாகவும் அதற்காகத் தான் தொடர்ந்து உழைக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் பேசிய ராதிகா சிற்சபைசன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்க்கப்போகும் இந்தக் கொலைக்களம் தனது உறவினர்களிற்கு, தனது உற்றாரிற்கு, தனது நண்பர்களிற்கு நேரடியாக நடந்த ஒன்று என்றும் இது தன்னை மிகவும் பாதித்த ஒரு விடயம் என்றும் இதற்காக கனடாவின் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கனடியப் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறிலங்காவின் கொலைக்களம் ஒளிபரப்புச் சம்பந்தமான நிகழ்வில் கலந்து கொண்ட கனடியத் தமிழர் பேரவை கனடா வாழ்த்தமிழர்கள் சார்பிலான உளமார்ந்த நன்றியறிதலை பழமைவாத கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பற்றிக் பிரவுன் அவர்களிற்கு நேரடியாகத் தெரிவித்தனர்.

இலங்கை அரசினதும், இலங்கை தூதுவரினதும் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் நோர்வே NRK தொலைக்காட்சியானது சனல் 4 இல் ஒளிபரப்பப்பட்ட கொலைக்களம் என்ற விவரண சித்திரத்தை கடந்த செவ்வாய்க்கிழமை செப்டம்பர் 27, 2011 இரவு ஒளிபரப்பியது.

இலங்கை தூதுவரலாயம் வெளியிட்ட உத்தியோகபூர்வமான அறிக்கையில் சனல் 4 இல் ஒளிபரப்பப்பட்ட இந்த விவரண சித்திரத்திற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை. அதைவிட இந்த ஒளிப்பதிவுகள் உண்மை யானவை என்பதற்கு எந்த சான்றுகளும் இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

நோர்வே NRK தொலைக்காட்சிக்கு பல இலட்சக்கணக்கான பார்வையாளர்கள் இருக்கின்றார்கள். இவ்ஒளிபரப்பு பற்றி புதன்கிழமை கூறிய தொலைக்காட்சி நிறுவனம் தங்களுக்கு 37 பேர் கடந்த இரவு ஒளிபரப்பிய விவரணச்சித்திரம் மனஉளைச்சளை தரும் காட்சிகளை கொண்டிருந்ததாக முறையிட்டிருந்தனர் என்றனர்.

# ஒன்றாறியோவின் அடுத்த...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

முடிவு தெரியவரும்.

**2007 ஒக்ரோபர் 10ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் நிலைமை.**

| | | |
|---|---|---|
| லிபரல் கட்சி | 71 | 42% |
| பழமைவாதக்கட்சி | 26 | 32% |
| புதிய ஜனநாயகக்கட்சி | 10 | 17% |

**இத்தேர்தலில் இரண்டு இலங்கைத் தமிழர்கள் போட்டியிடுகிறார்கள்.**

## நீதன் சண்

ஒக்ரோபர் 06, 2011 இல் நடைபெற இருக்கும் ஒன்றாறியோ நாடாளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக் கட்சியின் சார்பில் ஸ்காபரோ றூஜ் றிவர் தொகுதியில் நீதன் சண்முகராஜா இம்முறை போட்டியிடுகிறார். கடந்த மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இத்தொகுதியில் போட்டியிட்ட புதிய ஜனநாயக கட்சி வேட்பாளர் ராதிகா சிற்சபைசன் ஐ இத்தொகுதி மக்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதன் சண் ரொறொன்ரோ வாழ் தமிழ் மக்களுக்கு புதியவர் அல்ல. அவர் முன்னரும் கனடாவில் தேர்தல்களில் போட்டியிட்டுள்ளார். மார்க்கம் தொகுதியில் கல்விச்சபை (Public School Board Trustee) உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவரும் கூட. ஸ்காபரோவில் தனது மனைவியுடனும், மகனுடனும் வாழ்ந்து வரும் நீதன் ஒரு பொது சேவையாளன். தொழில் ஆசிரியரான நீதன் பல காலமாக சமூக சேவை செய்து வருகிறார். மல்வேண் சமூகங்களுக்கான கூட்டமைப்பில் உறுப்பினராக இருந்தும் பலகாலமாக சேவை செய்து வருகிறார். இதைவிட போதை மருந்துகளுக்கு எதிரான பெற்றோர் அமைப்பின் மூலமும், கனேடிய பல் சமூகங்களுக்கான வானொலி (FM 101.3)யில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்து சமூக சேவை செய்து வருகிறார். இளையோரின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டிவரும் இவர் பல்கலாசார விடயங்களிலும் அதீத ஈடுபாட்டு காட்டி வருபவர்.

நீதன் புதிய ஜனநாயக கட்சியின் கொள்கைகளான சமூகநீதி, அனைத்து மக்களுக்கான இலவச மருத்துவக் காப்புறுதி, முதியவர்களுக்கான கட்டாய ஓய்வூதியம், சிறுவர் பராமரிப்பு என்பவற்றில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்.

**தற்போதைய நிலையில் தமிழ் மக்கள் கட்சிவேறுபாடு இன்றி எமது நிலையை மேலும் வலுப்படுத்த ஒரே சமூகமாக ஓர் அணியில் நின்று எமது தமிழ் வேட்பாளர்களை வெல்ல செய்ய வேண்டும்.**

## சாண் தயாபரன்

ஒக்ரோபர் 06, 2011 இல் நடைபெற இருக்கும் ஒன்றாறியோ நாடாளுமன்ற தேர்தலில் பழமைவாதக் கட்சியின் சார்பில் மார்க்கம் யூனியன்வில் தொகுதியில் சாண் தயாபரன் இம்முறை போட்டியிடுகிறார்.

சாண் தயாபரன் 1986 இல் தனது சொத்தாக சட்டைப் பையில் 37 டொலரை கொண்டு கனடாவிற்கு வந்தவர். அன்றில் இருந்து அவர் தனது விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் சிறிய வியாபார முயற்சியிலும், Real Estate முயற்சியிலும் ஈடுபட்டு முன்னுக்கு வந்தவர். அவர் சுசி ஐ திருமணம் செய்து 20 வருட கால இல்லறவாழ்வில் தனுஷன், அபிஷான், மற்றும் ஹரிசன் என்ற மூன்று மகன்களுடன் வாழ்ந்து வருகிறார்.

சாண் தனது சமூக உதவி மூலம் தான் வாழும் சமூகத்திற்கு மிகவும் தெரிந்தவர். இவர் பிரச்சினைகளுக்கு ஆளான இளம் பிள்ளைகளை பராமரிக்க உதவுகிறார். கூடைப்பந்தாட்ட போட்டிகளை நடத்த உதவுகிறார். பிரச்சினைக் உள்ளான இளம்பிள்ளைகளில் திருந்தி முன்னேறுபவர்களுக்கு புலமைப்பரிசில் (Scholarship) வசதிகளும் செய்து கொடுக்கிறார். சாண் தன்னையும் தனது குடும்பத்தையும் வாழ்வில் முன்னேற உதவிய சமூகத்திற்கு தன்னால் ஆன உதவிகளை திரும்ப செய்வதில் பரிபூரண திருப்தி அடைகிறார்.

சாண் ஒரு சிறிய வியாபார முயற்சியில் ஈடுபட்டுள்ளவராதலால் சிறிய வியாபாரிகள் படும் கஷ்டங்களை நன்கு அறிந்தவர். தினமும் உயர்ந்து கொண்டு போகும் வரிச்சுமையையும் அனுபவிப்பர். ரிம் கூடக் (Tim Hudak) தலைமையிலான பழமைவாதக்கட்சி ஒன்றாறியோவில் அடுத்த அரசை அமைத்தால் இச்சுமைகளை குறைப்பதற்கு சாண் உறுதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.

**தற்போதைய நிலையில் தமிழ் மக்கள் கட்சி வேறுபாடு இன்றி எமது நிலையை மேலும் வலுப்படுத்த ஒரே சமூகமாக ஓர் அணியில் நின்று எமது தமிழ் வேட்பாளர்களை வெல்ல செய்ய வேண்டும்.**

SABESAN DENTURE CLINIC
பல் கட்டும் துறையில் விசேட நிபுணர்
* தனிப் பல்லாகவோ, ஒருசில பற்களாகவோ, அல்லது முழுப்பல் செட் ஆகவோ இருப்பினும் சகலவகை செயற்கைப் பற்களும் உங்களுக்கேற்ப செய்துதரப்படும்.
* உங்கள் தற்போதய/பழைய பற்களின் குறைபாடுகளை சீர்செய்யவும், உடைந்தபற்களை ஒட்டவும் அழைக்கவும்.
சபேசன் தங்கத்துரை BDS (SRI LANKA) DD (CANADA)
Denture Specialist
இலங்கையில் பலவருடங்களாக Dental Surgeon/பல்வைத்தியராக கடமையாற்றியவர்
416 854 9152
* உங்கள் அருகில் ஸ்காபறோ, மார்க்கம் பகுதிகளில் பணியாற்றுகிறார்
* எமது பிரத்தியோக Lab ல் உடனுக்குடனும், , நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்ட பற்களை 40வீத கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
* அவசரதேவை உள்ளவர்களுக்கு ஒரே நாளிலும் பற்கள் கொடுக்கப்படும்.
* சமூகநல நிதி உட்பட சகல காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

# விளையாட்டுத் தகவல்கள் 315

## சாம்பியன் லீக் கிரிக்கட் போட்டிகள்

சாம்பியன்ஸ் லீக் 20-20 தொடர் 23ந் திகதி பெங்களூரில் தொடங்குகிறது. இதில் மொத்தம் 10 அணிகள் கலந்து கொண்டு பட்டம் வெல்ல மோதுகின்றன. போட்டிகள் சென்னை, பெங்களூர் மற்றும் கொல்கத்தாவில் நடக்கிறது. ஐ.பி.எல்.லில் விளையாடிய சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் மற்றும் அவுஸ்திரேலியாவை சேர்ந்த வாரியர்ஸ், தெற்கு அவுஸ்திரேலியா மற்றும் தென் ஆபிரிக்காவின் கிங் கோப்ராஸ், இங்கிலாந்தின் நியூசவுத் வேல்ஸ் ஆகிய 7 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மீதியுள்ள 3 இடங்களுக்கு 6 அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த 6 அணிகள் மோதும் தகுதிச்சுற்று ஆட்டங்கள் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், டிரினிடாட், ஆக்லாந்து, சோமர் செட், லீசெஸ்டர்ஷயர், ருகுனே ஆகிய அணிகள் தகுதிசுற்றில் பங்கேற்கின்றன.

புள்ளிகள் அடிப்படையில் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் பிரதான சுற்றுக்கு தகுதி பெறும். தொடக்க ஆட்டத்தில் பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் - வாரியர்ஸ் அணியை எதிர்கொள்கிறது. டோனி தலைமையிலான சென்னை சூப்பர்கிங்ஸ் தனது முதல் ஆட்டத்தில் 24ந் திகதி சச்சினின் மும்பை இந்தியன்சை எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி அக்டோபர் 9ந் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கிறது. தகுதிச்சுற்றில் இருந்து கொல்கத்தா, சோமர்செட், டிரினிடாட் அன்ட் டொபாக்கோ அணிகள் பிரதான சுற்றுக்கு தகுதி பெற்றன. ருகுணா, லெய்செஸ்டர்ஷையர், ஆக்லாந்து அணிகள் வெளியேறின.

## மலிங்கா அதிரடியில் மும்பை வெற்றி

நடப்புச் சாம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸிக்கு எதிரான ஆட்டத்தில் 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கண்டது மும்பை இண்டியன்ஸ். மும்பையின் மலிங்கா ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் 3 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 37 ரன்கள் குவித்து ஆட்டநாயகன் விருதை தட்டிச் சென்றார். சென்னையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த சென்னை சூப்பர் கிங்ஸ் 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 158 ரன்கள் குவித்தது. பின்னர் ஆடிய மும்பை 19.5 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் எடுத்து வெற்றி கண்டது. முன்னதாக சென்னை அணியில் விஜய் 8 ரன்களில் மலிங்கா பந்துவீச்சில் போல்டு ஆனார். இதையடுத்து ரெய்னா களம் புகுந்தார். மும்பை அணியில் மலிங்கா, ஹர்பஜன் ஆகியோர் சிறப்பாக பந்துவீசினர். இதனால் சென்னை அணி முதல் 5 ஓவர்களில் 1 விக்கெட் இழப்புக்கு 28 ரன்களே எடுத்தது. ஆரம்பத்தில் நிதான-மாக ஆடிய மைக் ஹசி, அதன்பிறகு அதிரடிக்கு மாறினார். 43 பந்துகளில் அரைசதம் கண்டார். ஹசி 57 பந்துகளில் 3 சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் 81 ரன்கள் எடுத்தார். கடைசிக் கட்டத்தில் தோனி ஆட்டமிழக்காமல் 22 ரன்கள் விளாச சென்னை அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 158 ரன்கள் குவித்தது. பின்னர் துடுப்பெடுத்தாடிய மும்பை அணியில் ஜேக்கப்ஸ் 18, பிளிஸ்ஸர்டு 28, சுமன் 5,



ராயுடு 5, சைமண்ட்ஸ் 3 ரன்களில் வெளியேற 10 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 63 ரன்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டது. பின்னர் வந்தவர்களில் பொல்லார்டு 22, சதீஸ் 14 ரன்கள் எடுத்தனர். இதையடுத்து ஹர்பஜனும், மலிங்காவும் ஜோடி சேர்ந்தனர். மும்பை வெற்றிபெற கடைசி 4 ஓவர்களில் 47 ரன்கள் தேவைப்பட்டன. இதனால் சென்னை வெற்றிபெற்றுவிடும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்தது. ஆனால் 17-வது ஓவரை எதிர்கொண்ட மலிங்கா, அந்த ஓவரில் 2 சிக்ஸர்களை விளாசி ஆட்டத்தை மும்பை வசம் திருப்பினார். பின்னர் மோர்கல் வீசிய 19-வது ஓவரில் மீண்டும் ஒரு சிக்ஸர் அடித்தார் மலிங்கா. கடைசி ஓவரில் 12 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது. அந்த ஓவரில் ஹர்பஜன், மலிங்கா ஆகியோர் தலா ஒரு பவுண்டரியை விளாச மும்பை 19.5 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் எடுத்து வெற்றி கண்டது. ஹர்பஜன்-மலிங்கா ஜோடி 8-வது விக்கெட்டுக்கு 28 பந்துகளில் 53 ரன்கள் குவித்தது. மலிங்கா 37 ரன்களுடனும், ஹர்பஜன் 19 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் மும்பை 2 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

## வீழ்ந்தது கோல்கட்டா அணி: சாமர்சட் அணி அதிரடி வெற்றி

சாம்பியன்ஸ் லீக் போட்டியில் சாமர்சட் அணி, கோல்கட்டா நைட் ரைடர்ஸ் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்தியாவில் மூன்றாவது சாம்பியன்ஸ் லீக் 'டுவென்டி-20' தொடர் நடக்கிறது. ஐதராபாத்தில் நடந்த பி பிரிவு லீக் போட்டியில் கோல்கட்டா நைட் ரைடர்ஸ், சாமர்சட் (இங்கிலாந்து) அணிகள் மோதின. டொஸ் வென்ற கோல்கட்டா அணி கேப்டன் காம்பிர் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். கோல்கட்டா அணி துவக்கத்தில் திணறியது. பிஸ்லா (17) அதிக நேரம் தாக்குப்பிடிக்கவில்லை. காயத்தில் இருந்து மீண்ட காம்பிர் தான் சந்தித்த முதல் பந்திலேயே டக் அவுட்டானார். பின் காலிஸ், மனோஜ் திவாரி சேர்ந்து நிதானமாக ஆடினர். முதல் 10 ஓவர் முடிவில் 2 விக்கெட்டுக்கு 62 ரன்கள் தான் எடுக்க முடிந்தது. தாமஸ் வேகத்தில் திவாரி (20) வீழ்ந்தார். அடுத்து வந்த யூசுப் பதான் போட்டியில் திருப்புமுனை ஏற்படுத்தினார். வாணவேடிக்கை காட்டிய இவர் சுப்பையா ஓவரில் நான்கு சிக்சர்கள் அடித்தார். மறுபக்கம் காலிசும் சிக்சர்களாக விளாச, ஸ்கோர் தடாலடியாக உயர்ந்தது. கடைசி 10 ஓவரில் 99 ரன்கள் எடுக்கப்பட்டன. கோல்கட்டா அணி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 161 ரன்கள் எடுத்தது. அரைசதம் கடந்த காலிஸ்(74), யூசுப் பதான்(39) அவுட்டாகாமல் இருந்தனர். சவாலான இலக்கை விரட்டிய சாமர்சட் அணிக்கு ஜோன்ஸ்(6) ஏமாற்றம் அளித்தார். பின் வான் டர் மெர்வி, டிரகோ இணைந்து அசத்தலாக ஆடினர். அதிரடியாக துடுப்பெடுத்தாடிய மெர்வி, பவுண்டரி, சிக்சர்களாக விளாசினார். டிரகோ(28) ரன் அவுட்டானார். சிறிது நேரத்தில் சாகிப் அல் ஹசன் சுழலில் மெர்வி(73) சிக்க நெருக்கடி ஏற்பட்டது. ஹில்டிரத்(0) சோபிக்கவில்லை. கடைசி கட்டத்தில் துணிச்சலாக ஆடிய காம்ப்டன், ஸ்னெல் இணைந்து வெற்றியை உறுதி செய்தனர். பாட்யா பந்தில் காம்ப்டன் ஒரு சூப்பர் பவுண்டரி அடிக்க சாமர்சட் அணி 19.4 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 164 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. காம்ப்டன்(19), ஸ்னெல்(6) அவுட்டாகாமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை மெர்வி வென்றார்.

## கடைசி பந்தில் மும்பை அணி திரில் வெற்றி

சாம்பியன்ஸ் லீக் பரபரப்பான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. கடைசி பந்துவரை போராடிய டிரினிடாட் அணி கைக்கு எட்டிய வாய்ப்பை கோட்டை விட்டது. இந்தியாவில் மூன்றாவது சாம்பியன்ஸ் லீக் 'டுவென்டி-20' தொடர் நடக்கிறது. ஏ பிரிவு லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ், டிரினிடாட் அண்ட் டுபாகோ அணிகள் மோதின. டொஸ் வென்ற டிரினிடாட் அணி கப்டன் டேரன் கங்கா துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். மும்பை பந்துவீச்சில் டிரினிடாட் அணி துவக்கத்திலேயே ஆட்டம் கண்டது. 'வேகத்தில் மலிங்காவும், சுழலில் கப்டன் ஹர்பஜனும் மிரட்ட விக்கெட்டுகள் மடமட-வென சரிந்தன. மலிங்கா பந்தில் பரத்(11) வெளியேறினார். சிம்மன்ஸ்(21) ரன் அவுட்டானார். டேரன் கங்கா(5) சோபிக்கவில்லை. ஹர்பஜன் வலையில் ராம்தின்(0), டேரன் பிராவோ(18), ஷெர்வின் கங்கா(2) சிக்கினர். மலிங்கா பந்தில் கூப்பர்(0) காலியானார். போராடிய முகமது(23), போலார்டு வேகத்தில் வீழ்ந்தார். டிரினிடாட் அணி 16.2 ஓவரில் 98 ரன்களுக்கு சுருண்டது. இதன் மூலம் டுவென்டி-20 அரங்கில் தனது குறைந்த ஸ்கோரை பெற்றது. தவிர சாம்பியன்ஸ் லீக் வரலாற்றில் 8வது குறைந்த ஸ்கோரை பதிவு செய்தது. மும்பை சார்பில் ஹர்பஜன் 3, மலிங்கா 2 விக்கெட் வீழ்த்தினர். சுலப இலக்கை விரட்டிய மும்பை அணி திணறல் துவக்கம் கண்டது. பத்ரி பந்தில் பிலிஜார்டு(2) அவுட்டானார். இதற்கு பின் ராம்பால் மிரட்டினார். இவரது வேகத்தில் சுமன்(10), பிராங்ளின்(0), சைமண்ட்ஸ்(0) வெளியேற சிக்கல் ஏற்பட்டது. நரைன் பந்தில் போலார்டு(9) போல்டாக மும்பை அணி 5 விக்கெட்டுக்கு 33 ரன்கள் எடுத்து தத்தளித்தது. பின் ராயுடு, சதி' இணைந்து பொறுப்பாக ஆடினர். சதி 14 ரன்களுக்கு அவுட்டானார். அடுத்து வந்த ஹர்பஜன்(9) ஒரு சிக்சர் அடித்த திருப்தியுடன் வெளியேற மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. இறுதியில் ராயுடு, மலிங்கா துணிச்சலாக போராடினர். கடைசி 6 பந்தில் வெற்றிக்கு 11 ரன்கள் தேவைப்பட்டன. ஷெர்வின் கங்கா பந்துவீசினார். முதல் பந்தில் ராயுடு ஒரு ரன் எடுத்தார். 2வது பந்தில் மலிங்கா ஒரு சூப்பர் சிக்சர் அடித்தார். 3வது பந்தில் ஒரு ரன். 4வது பந்தில் மலிங்கா(15) ரன் அவுட்டானார். 5வது பந்தில் ராயுடுவும்(36) ரன் அவுட்டாக டென்ஷன் எகிறியது. கடைசி பந்தில் 2 ரன்கள் தேவைப்பட்டன. இம்முறை பந்தை அடித்த சாகல் 2 ரன்கள் ஓடினார். இவரை ரன் அவுட் செய்யும் வாய்ப்பை விக்கெட் கீப்பர் ராம்தின் கோட்டை விட மும்பை அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 99 ரன்கள் எடுத்து திரில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருதை டிரினிடாட் வீரர் ராம்பால் வென்றார்.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ்: ஜோகோவிக் சாம்பியன்


அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார். இவர் ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் ஸ்பெயினின் ரபேல் நடாலை வீழ்த்தி பட்டம் வென்றார். இது அவரின் நான்காவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். இதன் மூலம் இந்த ஆண்டில் அவுஸ்திரேலிய ஓபன், விம்பிள்டன் ஓபன், அமெரிக்க ஓபன் என மூன்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பட்டம் வென்று சாதனை படைத்தார் ஜோகோவிச். இந்த ஆண்டில் பிரெஞ்ச் ஓபனில் மட்டுமே அவர் பட்டம் வெல்லவில்லை. இந்த ஆண்டில் விளையாடிய 66 போட்டிகளில் 64-ல் வெற்றிபெற்றார் ஜோகோவிச். இந்த ஆண்டில் 6 முறை நடாலை சந்தித்த ஜோகோவிச் அனைத்திலும் வெற்றி கண்டார். திங்கள்கிழமை இரவு நடைபெற்ற இறுதிச்சுற்றில் முதல் செட்டின் ஆரம்பத்தில் நடால் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். இதன்பிறகு அபாரமாக ஆடிய ஜோகோவிச் 3-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். இதன்பிறகு மீண்டும் நடாலின் சர்வீஸ் முறியடித்த ஜோகோவிச் அந்த செட்டை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார். பின்னர் நடை-



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# மாதக்கொடுப்பனவில் தில்லுமுல்லு!

ஆதனம் வாங்கும்போது அதனைப் பராமரிப்பதற்கான மாதாந்த கொடுப்பனவு (Monthly Maintenance Fee) உள்ள மற்றும் மாதாந்த கொடுப்பனவு இல்லாத ஆதனங்களும் உள்ளன. பொதுவாக இந்த மாதாந்த கொடுப்பனவைத் தவிர அடமானக்கடனிற்குரிய கொடுப்பனவு (Mortgage Payment), சோலைவரி (Property Tax), வாழ்வின் அன்றாட தேவைகளிற்காக பாவிக்கப்படும் Utility செலவுகள் போன்றவற்றிற்கே பொதுவாக மாதாமாதம் செலுத்த வேண்டும். மாதா மாதம், ஆதனத்தொகுதியை பாரமரிப்பதற்காக எதுவித கொடுப்பனவும் அதாவது மாதாந்த கொடுப்பனவு செய்யாத ஆதனத்தை Freehold Residential House அல்லது Freedhold Home என அழைக்கப்படும். இவ்வகையான வீடுகளிற்கு பொதுவாக நிலம் சொந்தமாக இருக்கும். தனிப்பட்ட நிலவரைபடம் (Survey Plan) இருக்கும். Lot இலக்கம் மற்றும் Plan இலக்கம் இருக்கும். இந்த நிலத்திலோ அல்லது வீட்டிலோ ஏதாவது திருத்த வேலைகள் அல்லது மேலதிகமாக இணைத்து நிர்மாணம் செய்ய வேண்டியது, இலகுவாக செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கும். ஆனால் மாதாந்த கொடுப்பனவு செய்யப்படும் ஆதனத்தொகுதியில் (Condominium), ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டும் என்றால் அந்த தொகுதியை பராமரிக்கும் நிறுவனத்தின் (Management Company) அனுமதி பெறப்படல் வேண்டும்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 350**



இந்தக் கட்டிடத்தொகுதியின் நாளாந்த திருத்தவேலைகள், மற்றும் சுற்றமாக உள்ள பகுதிகளின் பராமரிப்புகள் அனேகமாக இந்த நிறுவனத்தின் அனுசரணையுடன் நிகழும். அவர்களே அதற்கு பொறுப்பாக இருப்பார்கள்.

## இந்த நிறுவனம் எவ்வாறு தேர்ந்து எடுக்கப்படுகிறது?

அடுக்கு மாடிக் கொண்டோக்களாக (High rise Condo.) இருக்கலாம் அல்லது நிலத்தில் நிரையாக ஒன்றுடன் ஒன்று சேர்ந்த வீடுகளாக இருக்கலாம் (Town Houses). இந்தக்காலத்தில் சில தனியான வீடுகளிற்கும் இந்த மாதாந்த கட்டுப்பணம் (Monthly Maintenance Fee) அறவிடப்படுகின்றது. கொண்டோ தொகுதியில் உள்ள அப்பாட்மென்ட் மனை அலகுகளின் (Units) எண்ணிக்கைக்கு ஏற்ப 3, 5 அல்லது 7 அங்கத்தவர்களைக் கொண்ட சபை (Board) உருவாக்கப்படும். நடைமுறையில், இதன் உரிமையாளர்களில் இருந்து இந்த அமைப்பின் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவு செய்யப்படுபவர்களின் காலம் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று வருடங்களாக இருக்கும். இவர்களில் ஒருவர் தலைவர், செயலாளர், பொருளாளர் என தெரிவு செய்யப்படுவர். இந்த அங்கத்தவர்களே, குறிப்பிட்ட கொண்டோ கட்டிடத்தொகுதியை கண்காணித்து

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


HomeLife/GTA
Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated



இரு இடங்களில்

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

**CONDO. FOR SALE**



KENNEDY & 401
1 + 1 Bedroom condo. for sale. Close to all facilities.
Asking price $274,900


**SPACE FOR LEASE**

Business Space For Lease
650 Sq.ft main floor. facing Middlefield Rd (@ Finch) next to Embassy store. Reasonable rent. Only $1100



5200 Finch. Ave. East
(Embassy store building)
2nd Floor good for offices.
About 1000 sq.ft.
Rent $1000 / B.O. ALL inclusive.

**FOR SALE**



FINCH &WARDEN
2 + 1 Bedroom. 2 Washrooms
Close to all facilities.
Asking Price $129,000

**CONDO. FOR SALE**



MCCOWAN & SHEPPARD
2 Bedroom condo. 1 Parking
Asking Price $149,900

**STORE FOR LEASE**

KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease. 1000 sq.ft
Suitable For Salon, jewellery etc.
Kind Of Uses, Close To Kennedy Subway Station.

**COMMERCIAL CONDO. SALE OR LEASE**



MARKHAM & STEELES
Builders blow-out sale. Price starts from $239,900.
Avail. for rent, retail.

**FOR LEASE**



FINCH & MIDDLEFIELD
Main Floor Unit In GTA Square Shopping Mall.
Renovated unit.

# விளையாட்டு...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பெற்ற இரண்டாவது செட்டில் சிறப்பாக ஆடிய ஜோகோவிச், அந்த செட்டை 8 கேம்களிலேயே முடிவுக்குக் கொண்டு வந்தார். இதனால் அந்த செட் 6-2 என்ற கணக்கில் ஜோகோவிச் வசமானது. பின்னர் நடைபெற்ற மூன்றாவது செட்டில் நடால் கடுமையாகப் போராடினார். இதனால் அந்த செட் சமநிலையில் முடிந்தது. இதையடுத்து வழங்கப்பட்ட டை பிரேக்கர் வாய்ப்பில் நடால் 7-6 (7-3) என்ற கணக்கில் வென்றார். பின்னர் நடைபெற்ற 4-வது செட்டில் சுதாரித்துக் கொண்ட ஜோகோவிச், வேகமாக பாயிண்ட்களை தன் வசமாக்கினார். நடால் கடுமையாகப் போராடியபோதும் ஆட்டம் ஜோகோவிச் வசம் திரும்பியது. இந்த செட்டை 6-1 என்ற கணக்கில் கைப்பற்றினார் ஜோகோவிச். இதன்மூலம் அவர் 6-4, 6-2, 6-7 (3∴7), 6-1 என்ற கணக்கில் நடாலை வீழ்த்தி பட்டம் வென்றார். இந்த ஆட்டம் 4 மணி நேரம் 10 நிமிடங்கள் நீடித்தது. மைதானத்திற்கு வந்திருந்த 23,000 ரசிகர்களுக்கும் இந்த ஆட்டம் விருந்தாக அமைந்தது.

## 100 மீற்றர் ஓட்டம் : உசைன் போல்ட் அபாரம்

குரேஷியா, சாக்ரெபில் நடைபெற்ற உலகத் தடகள போட்டிகளின் 100மீ ஓட்டத்தில் உலகின் அதிவேக மனிதனான உசைன் போல்ட் 9.85 வினாடிகளில் இலக்கை எட்டி இந்த சீசனுக்கான தனது சிறப்பான ஓட்டத்தைக் காட்டியுள்ளார். மொனாகோவில் ஜுன் மாதம் நடைபெற்ற போட்டியில் அவர் 9.88 வினாடிகளில் ஓடியதே இந்த சீசனில் அவரது தனிப்பட்ட குறைவான நேரமாக இருந்தது.



கடைசியாக அவர் டேகூவில் நடைபெற்ற உலக சாம்பியன் போட்டிகளில் குறிப்பாக 100மீ ஓட்டப்பந்தயத்தில் தவறாகத் துவங்கியதற்காக போட்டியிலிருந்து நீக்கப்பட்டார். செயின்ட் கிட்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த கிம் கோலின்ஸ் 10.01 வினாடிகளில் இலக்கை எட்டி இரண்டாவது இடத்திற்கும், டிரினிடாட் வீரர் ரிச்சர்ட் தாம்சன் 10.03 வினாடிகளில் இலக்கை எட்டி 3வது இடத்திற்கும் வந்தனர். யூரோ 2012 கால்பந்துப் போட்டிக்கு ஸ்பெயின் தகுதி உலகசாம்பியன்களான ஸ்பெயின் அணி லீச்டென்ஸ்டெய்ன் அணியை 6- 0 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி 2012ஆம் ஆண்டு ஐரோப்பிய கால்பந்து போட்டித் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது. ஸ்பெயினின் நட்சத்திர வீரர்களான டேவிட் வில்லா மற்றும் அல்வாரோ நெக்ரீடோ ஆகியோர் தலா 2 கோல்களை அடித்தனர். மற்றொரு நட்சத்திர ஸ்பெயின் கால்பந்து வீரர் சாவி ∴ப்ரீ கிக்கில் ஒரு கோலையும், ∴புல் பேக் வீரரான ரேமோஸ் ஒரு கோலையும் அடித்தனர். முதல் அரைமணிநேர ஆட்டத்தில் லீச்டென்ஸ்டெய்ன் அபாரமாக ஸ்பெயினை வெறுப்பேற்றியது. பிறகு 34வது நிமிடத்தில் சாவி அபாரமாக எதிரணியின் அரணை உடைத்து முன்னேறி அது கோலாக மாறியது. சாவி, இனியெஸ்டா, டேவிட் வில்லா ஆகியோர் பொறிபறக்க விளையாடத் துவங்கியவுடன் எதிரணியி-னரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

## சர்வதேச கால்பந்து தரவரிசைப் பட்டியல்: ஸ்பெயின் முதலிடம்

சர்வதேச கால்பந்து அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை பிபா வெளியிட்டது. இதில் உலக சாம்பியன் ஸ்பெயின் அணி(1605 புள்ளி) மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியது. இதன்மூலம் நெதர்லாந்து அணி(1571) இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. ஜேர்மனி அணி(1290) மூன்றாவது இடத்தில் நீடிக்கிறது. உருகுவே(4வது இடம்), போர்ச்சுகல்(5வது இடம்), இத்தாலி(6வது இடம்) அணிகள் தலா ஒரு இடம் முன்னேறின. பிரேசில் அணி 6வது இடத்தில் இருந்து 7வது இடத்துக்கு தள்ளப்பட்டது. இங்கிலாந்து அணி நான்கு இடங்கள் பின்தள்ளி 8வது இடம் பிடித்தது.

# நாமும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பராமரிப்பதற்குரிய முகாமைத்துவ நிறுவனத்தை (Management Company) தெரிவு செய்வார்கள். நடைமுறையில் 3 இற்கு மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து Quotationகளைப் பெற்று அதிலிருந்து ஒரு நிறுவனத்தை தெரிவு செய்வார்கள்.

இந்த முகாமைத்துவ நிறுவனமே குறிப்பிட்ட கட்டிடத்தொகுதியின் பராமரிப்பு வேலை களை கவனித்துக்கொள்வார்கள். இந்தக் கட்டித் தொகுதியைப் பற்றிய தரவுகள், வருமானங்கள், செலவுகள், காப்புறுதி போன்ற சகல விடயங்களும் Status Certificate என்ற குறிப்பேட்டில் வைத்திருக்கப்படும்.

புதிதாக விற்று வாங்கும் போது இந்த Status Certificate இன் மூலம் குறிப்பிட்ட கட்டிடத் தொகுதியில் ஏற்படும், ஏற்பட இருக்கும் விடயங்கள் குறிக்கப்பட்டு இருக்கும். எனவே Condominium Apartment, Townhouse வாங்கும் போது Status Certificate ஐ பெற்று உங்களது அனுபவமிக்க சட்டத்தரணியின் ஆலோசனை பெறுவது எதிர்காலத்தில் ஏற்படும் சிக்கல்கள், நெருக்கடிகளை முற்கூட்டியே அறிந்து கொண்டு அதற்கேற்ப முடிவுகளை எடுக்கலாம்.

இந்தக்கட்டுரை எழுதியதின் நோக்கம், ரொறொன்ரோவில் செப்ரெம்பர் 2011 இன் ஆரம்பத்தில் நடைபெற்ற Condominium Property Management செய்த தவறு, தப்புக்களை தெரியப்படுத்துவதே. Channel Property Management Ltd. என்ற நிறுவனம் மன்சூர் கான் என்பவரை தலைவராகக்கொண்டு பல கட்டிடத் தொகுதிகளை நிர்வகித்து வந்தது. குறிப்பிட்டவரிற்கு இரண்டு மனைவியும், ஐந்து பிள்ளைகளும் இருக்கின்றார்கள். இரு மனைவியும் பங்களாதேஷ் இலும் பிள்ளைகள் ரொறொன்ரோவிலும் வாழ்கின்றார்கள். குறைந்தது ஒன்பது (9) கட்டிடத் தொகுகளை நிர்வகித்து வந்த குறிப்பிட்ட முகாமைத்துவ நிறுவனம் 20 மில்லியனிற்கு மேற்பட்ட பணத்தைக் கையாடியுள்ளது. குறிப்பிட்ட நபர் கனடாவை விட்டு வெளியேறிவிட்டார். போலீஸ் நிர்வாகம், இந்த குற்றத்தை புரிந்தவர் அல்லது புரிந்தவர்களைத் தேடிவருகின்றது. பொதுவாக கட்டிடத் தொகுதியில் செய்யப்படும் திருத்த வேலைகளிற்கு Board Members இன் அனுமதி பெற்றே செயல்படுத்த வேண்டும். ஆனால் எதுவித அனுமதியும் இல்லாமல் இவ்வளவு பெரிய தொகை களவாடப்பட்டுள்ளது. இதனால் இந்த தொகையைக் கொடுத்த நிதிநிறுவனங்கள் குறிப்பிட்ட கட்டிடத்தொகுதி மீது நடவடிக்கை எடுக்குமா அல்லது என்ன நடைபெறும் என்பது எதிர்காலத்தில் தெரியவரும். எதிர்காலத்தில் இந்தக் கட்டிடத் தொகுதியை பொறுப்பேற்கும் புதிய Management Company, பழைய Channel Management Company ஐயும் அதனுடன் தொடர்பு கொண்டவர்களையும் சட்டத்தின் முன் கொண்டுவரும் என நிச்சயம் எதிர்பார்க்கலாம்.



**இதுவரை தெரியவந்த பணம் களவாடப்பட்ட கட்டிடத்தொகுகளின் விபரம்**

1. 25 Grenville St. Toronto
2. 312 San Romanoway, Toronto
3. 3050 Ellesmere Road, Toronto
4. 39 Kimbercroft, Toronto
5. 10 MarkBrooke Lane, Toronto
6. 2121 Roche Court, Mississauga
7. 236 Albion Road, Toronto
8. 2465 Kipling Ave., Toronto
9. 3025 The Credit Woodlands, Mississauga

## குறிப்பு:

1. பொதுவாக கொண்டோக்கள் வாங்கும் போது, Property Management Company ஐ நடத்துபவர்களைப்பற்றி கவனத்தில் கொள்வது சிறந்தது. அத்துடன் Board Members ஆக இருப்பவர்களின் நேர்மைத்தன்மையையும் கவனத்தில் கொள்வது சிறந்தது.
2. Status Certificate இல் குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய சகல விடயங்களையும் தகுந்த சட்டத்தரணி மூலம் வாசித்து அறிந்து கொண்டு அதன் பின்னர் ஆதனத்தை வாங்குவது சிறந்தது.

3. வருடாவருடம் நடைபெறும் புதிய அங்கத்தவர்களை தெரிவு செய்யும் சபைக்கூட்டத்திற்கு தவறாமல் சமூகமளித்து, நடைபெறும் நிகழ்வுகளை பற்றி தெரிந்து கொள்வது சிறந்தது. அத்துடன் உங்களுக்கு இருக்கும் கேள்விகளுக்கு தகுந்த பதில்களை பெற வேண்டும்.


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*


Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct: 416-276-1225
Sell your home faster and more money
When you list your home with Mike, you receive these Guarantees
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full colour prints ads every week until it is sold
Our Team of Specialists for the same price as hiring a single agent
Your home sold in 90 days or we buy it *
RE/MAX®
Brimley/Brimorton
$315,000
3+1 Bed Rooms, 1 W Rooms
Broadloom Hardwood Floor
Whitelaw & Townline
$319,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic Floors
Morningside / Finch
$369,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Kennedy/Steeles
3+1 Bed Rooms, 3 W Rooms
Laminate/Broadloom Floors
Markham / Golden / Highglen
$395,900
3 Bed Rooms, 2 W Rooms
Ceramic Backsplash
9th Line/Hoover Park Drive
$419,900
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic floors
16th Ave/9th Line
$465,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Mccowan /Denison
$479,000
3 Bed Rooms, 3 W Rooms
Broadloom Eat-In Kitchen
Hwy 48 & Hoover Park
4_+2 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
Staines/Steeles
$509,000
4 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Broadloom
Main/Sandale
$519,900
4+2 Bed Rooms, 5 W Rooms
Wood/Hard floors
Bur Oak /Morning Dove
$529,000
3 Bed Rooms, 3 W Rooms
Laminate Floor
Markham/Highglen
$529,000
3 Bed Rooms, 3 W Rooms
Ceramic/Hard floors
Mccowan/14th Avenue
$543,900
4 Bed Rooms, 3 W Rooms
Open Concept Combined W/Living
16 Th Ave& Markham Rd (Hwy 48)
4+2 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Woodfloors
Kennedy / Bur Oak
4+3 Bed Rooms 5 W Rooms
Pot Lights /Ceramic Backsplash
14th / 9th Line
$639,000
4 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
9th Line/Castlemore
4 Bed Rooms, 4 W Rooms
Coffered Ceiling/Breakfast Bar
14th / 9th Line
$639,000
4 Bed Rooms, 4 W Rooms
Ceramic/Hard floors
30/60/Tba
$459,000
Gas Station
வாழ்க்கை சுவர்க்கமானது
இனிய இல்லமென்றில்
KZ Graffic- 647-200-5833
PH1-7800Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800 Fax: 905-470-7770
Email: esrinathan@trebnet.com
RE/MAX
Realtron Realty Inc, Brokerage
Each office independently owned and operated
I can also assist you Mortgage Financing,
Home Inspection, Real Estate Lawyer

# மரணமாகியவர் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்திருந்தாரா? சந்தேகம்? அவரது குடும்பத்தினர் அதனை எப்படி கண்டு பிடிப்பது?

## கனடிய தகவல் தொடர் 157

***Finding Lost Life Insurance Policies***

பல வருடங்கள் கனடாவில் தொழில் செய்து உழைத்து, பல நிதியியல் திட்டங்களையும் பல்வேறு வழிகளில் முறைப்படி செய்த ஒரு மனிதன் மரணமடைந்து விட்டார் எனக் கருத்தில் கொள்வோம்.

• அவருக்கு ஆயுள் காப்புறுதி என்பது சில நேரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கம்பனிகளில் இருந்திருக்கும். அவற்றில் சில பணம் செலுத்தப்பட்டு என்றோ ஒருநாள் முடித்திருக்கப்பட்ட ஆயுள் காப்புறுதி ஒப்பந்தமாகவும் (Paid up life insurance coverage) இருந்திருக்கலாம்.

• உயிரிழப்பின் பின்பு தமக்கிருந்த கடன் களை செலுத்தி முடிக்கும் குழுவான கடன் காப்புறுதி திட்டத்திலும் (Group Credit Life Insurance) சேர்ந்திருக்கலாம். உதாரண மாக வங்கி கடன் அட்டை, கனடியன்ரயர் கடன் அட்டை போன்றவற்றினை வைத்திருப்போருக்கு வழங்கும் காப்புறுதி திட்டத்தினை இங்கு குறிப்பிடலாம்.

• அவர் தொழில் செய்த இடத்தில் சகல தொழிலாளர்களையும் சேர்த்த குழுவான ஆயுள் காப்புறுதி திட்டத்திலும் (Group Life Insurance) ஏற்கெனவே சேர்ந்திருக்கலாம்.

• வீட்டு மோட்கேஜில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் (Mortgage Life Insurance) ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கலாம்.

• சில மாதக்கொடுப்பனவுகளை தமது மரணத்தின் பின்பு காப்புறுதி கம்பனியே தொடர்ந்து கட்டும் காப்புறுதி திட்டமும் (Waiver of Monthly Payment) செய்து வைத்திருக்கலாம். உதாரணமாக பிள்ளை களின் உயர் கல்வி சேமிப்பு திட்டத்திற்கு (RESP) செலுத்தும் மாதக்கட்டுப்பணத்தினை இங்கு குறிப்பிடலாம்.

• தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக கனடாவில் தொழில் செய்து அமரத்துவ மடைந்தவரின் மனைவி அல்லது கணவன் மற்றும் குறிப்பிட்ட வயதுவரையுள்ள பிள்ளைகளுக்கு கனடிய மத்திய அரசின் தேசிய சேமிப்பு ஓய்வூதிய திட்டத்திலிருந்து (CPP) ஒரு சலுகை கிடைக்கும் என்பது இன்னொரு விடயம். அதற்கு விண்ணப்பிக்க வில்லையானால் இங்கு கிடைக்கவேண்டிய அந்த அரசின் விதவை பென்சன் கிடைக்குமா? என்ன?

• சரி! இங்கு அந்த குடும்பத்தில் அவரது மரணம் நடந்து விட்டது. அவரது குடும்பத்தவர்களுக்கு ஒரு சந்தேகம். கேள்விக்குறி. தங்களுக்கு தெரியாத நிலையில் ஏதாவது இத்தகைய காப்புறுதி திட்டங்கள் அவருக்கு எங்கேயாவது இருந்திருக்குமா? அதுவே இங்கு அவர்களுக்கு தீர்வு தேடும் ஒரு பிரச்சினை!. அதனை எப்படிக் கண்டுபிடிப்பது. இவற்றினை தேடிக் கண்டு பிடித்து மரணமாகியவரின் குடும்பத்தவர்களுக்கு தந்து உதவ கனடாவில் ஒரு அரச சார்பு நிறுவனம் இலவசமாக இயங்கிக் கொண்டிருப்பதை அறிந்து கொண்டீர்களா?



அந் நிறுவனத்தின் விபரங்கள் பின்வருமாறு!

*Information Services*
*Ombue Service for Life & Health Insurance*
*401 Bay St, Suite #1507*
*P.O. Box 7*
*Toronto, ON M5H 2Y4*
*Phone: 1.800.268.8099*

கனடாவில் ஏராளமான ஆயுள் காப்புறுதி கம்பனிகளை அங்கத்தவராக கொண்ட *'Canadian Life & Health Insurance Association Inc'* என்னும் நிறுவனத்தின் கீழ் இயங்கும் பிரிவு ஆகும்.
இந்நிறுவனத்திற்கு மனு செய்தால் இலவசமாக காணாமல் போன ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் எங்கே? எந்த கம்பனியில்? என்ற விபரங்களை இலகுவாக தேடி எடுத்துத் தருவார்கள்.

ஆனால் உயிரிழப்பு நடந்து மூன்று மாதங்களுக்கு பின்பு இரு வருடங்களுக்குள் இந்நிறுவனத்தின் உதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும். இங்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை தேடுபவர்கள் மரணமடைந் தவர்களின் வாரிசுகளாக தங்கியிருப்பவர் களாக இருப்பதுடன் மேலெழுந்த சந்தேகமான முறைக்கு அப்பால் காப்புறுதி ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை எழுந்தால் மட்டுமே தங்கள் நிறுவனத்தினை அணுக வேண்டும் என இந்நிறுவனம் குறிப்பிட்டிருக் கின்றது. அதாவது மரணமாகியவரின் முதல் வட்ட குடும்ப உறவுகள் தவிர ஏனையோர் தங்களின் சந்தேகத்தினை தீர்க்கும் வகையில் இந்நிறுவனத்தினை அணுக முடியாது என்பதனை மறைமுகமாக இந்நிறுவனம் குறிப்பிடுகின்றது.

எதற்கும் இந்நிறுவனம் சில அறிவுரை களையும் முதலில் வழங்குகிறது. அதாவது மரணமாகியவரின் பெயரில் ஏதாவது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் இருந்ததா? என்பதனை அவரது குடும்பத்தவர்கள் பின்வரும் தடயங்கள் மூலம் அறிந்து கொள்ள முதலில் முயற்சி செய்யுங்கள் என இந்நிறுவனம் அறிவுரை வழங்குகின்றது. அவையாவன பின்வருமாறு.

***1. Look for Insurance Related Documents:*** மரணமாகியவருக்கு சொந்தமான ஆவணங்கள், பத்திரங்களில் ஆயுள் காப்புறுதி தொடர்பான பத்திரங்கள், பிரதிகள், இடைக்கிடை கம்பனி அனுப்பும் கடிதங்கள். (உதாரணமாக மாத அல்லது வருட கட்டுப்பணம் செலுத்த தவறினால் அதனை செலுத்துமாறு கோரும் கடிதங்களை குறிப்பிடலாம்)

***2. Check Bank Book & Canceled Cheques:*** அவரது வங்கி கணக்கிலிருந்து மாதா மாதம் அல்லது காசோலையாக ஆயுள் காப்புறுதிக்குரிய கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்தால் அதிலிருந்து எந்த காப்புறுதி கம்பனிக்கு பணம் செலுத்தப்படுகின்றது என்ற தகவல்கள்.

***3. Contact Current & Prior Financial Advisors:*** காப்புறுதி முகவர் நிறுவனம் அல்லது மரணமாகியவரின் வக்கீல், கணக்காளரின் கோப்புகளில் ஆயுள் காப்புறுதி தொடர்பான விபரங்கள் ஏதாவது உள்ளதா? என்ற தகவல்கள்.

***4. Review Life Insurance Application:*** ஏதாவது மரணமாகியவரின் ஆயுள்காப்புறுதி ஒப்பந்தம் கண்ணில் தென்பட்டால், அதில் இணைக்கப்பட்டிருக் கும் விண்ணப்ப படிவத்தின் பிரதியில் ஏற்கெனவே செய்திருந்த காப்புறுதி ஒப்பந்தம் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டி ருக்கும். அதிலிருந்து தகவல்களை பெறலாம்.

***5. Contact Previous Employers:*** ஏற்கெனவே மரணமாகியவர் தொழில் செய்த இடங்களுடன் தொடர்பு கொண்டு 'ஊழியர்களின் குழுவான ஆயுள் காப்புறுதியில்' (Employees Goup Life Insuracne Plans) மரணமாகியவரின் பெயர் பதியப்பட்டுள்ளதா? அப்படியிருந்தால் அது எந்த கம்பனியில்? என்ற விபரங்கள்.

***6. Contact Association With Whom Deceased's have Membership:*** மரணமாகியவர் அங்கத்தவராக இருந்த தொழில் சார்ந்த நிறுவனங்கள், அமைப்புகள், சங்கங்களின் குழுவான ஆயுள் காப்புறுதி திட்டங்களில் பெயர் பதியப்பட்டுள்ளதா? என்ற விபரங்கள் (உதாரணமாக Professional Association of Engineers, Canadian Automobile Association ஆகியவற்றினை குறிப்பிடலாம்.

***7. Check Through Credit Cards:*** வங்கிகள், நிதி நிறுவனங்கள் வழங்கும் கடன் அட்டைகளில் அதன் உரிமை யாளருக்கு வழங்கும் குழுவான ஆயுள் காப்புறுதி (Group Credit Life Insurance) திட்டத்தில் மரணமாகியவரின் பெயர் உள்ளதா? என்ற தகவல்கள்.

8. பிரயாணம் செய்யும்போது ஏதாவது வழியில் மரணம் நடந்தால் ஏதாவது விசேட ஆயுள் காப்புறுதித் திட்டம் பிரயாண காப்புறுதியில் இணைக்கப்பட்டதா? என்ற விபரங்கள்.

***9. Review the deceased Income tax returns for the past two years:*** கடந்த இரு வருடங்களின் வருமானவரி பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது அதில் காப்புறுதி முதலீட்டு வருமானம், செலவுகள் ஏதாவது குறிப்பிடப்பட்டு இருக்கலாம். அதிலிருந்தும் தடயம் கிடைக்கலாம்.

மரணமாகியவரின் ஆயுள்



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 12ஆம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# மரபணுக்களைக் குறை சொல்வோம்!

## Blame the genes, please!

இலங்கைத் தமிழர் கனடாவுக்கு வந்தபின் கல்வித்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். எனினும் சில விடயங்களில் இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர். இன்னமும் என்றது காலம் கருதியேயாகும். பெரும்பாலான தமிழர்கள் கனடாவில் பதினைந்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். இருந்தும் வாழ்க்கையின் சில கூறுகளைச் செம்மைசெய்ய வேண்டும் என்பதில் அக்கறை அற்றவர்களாக உள்ளனர். அவற்றிற் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நேரக் கடப்பாடு

நேர நிர்வாகம் என்பது ஒரு பெரிய கலை. குடும்ப நிகழ்வாயினும் சரி, பொது வைபவங்களாயினும் சரி எம்மவர்கள் இந்தக் கலையிற் போதிய பயிற்சியுள்ளவர்களாகத் தெரியவில்லை. குறித்த நேரத்தைக் கடைப்பிடிப்பதில் எள்ளளவும் அக்கறை அற்றவர்களாகவே உள்ளனர்.

## குடும்ப நிகழ்வுகள்

திருமணத்துக்குச் சாத்திரிகளைக்கொண்டு நல்லநாள் பார்த்து நேரங்குறித்து, அந்த நேரத்துக்கு உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களை அழைத்தும் குறித்த நேரத்துக்குத் திருமணம் நடத்தப்படுவது மிக அரிது. ஒன்றில் ஐயர் அல்லது ஒளிப்படக் கலைஞர்கள் பிந்தி வருவர். அல்லது இராகு காலமென மாப்பிள்ளை பிந்தி வருவர். வெட்கப்பட வேண்டிய நிலைமை என்னவென்றால் நேரத்தைக் கவனியாத எமது குறைபாட்டை அழைக்கப்பட்ட வேறு இனத்தவர்களுக்கும் காட்டுவதுதான்.



கனடிய முதுகுடிகள் நேரத்துக்கு முதன்மை கொடுப்பவர்கள். ஒரு தமிழர் திருமணத்தில் வெள்ளை இனத்தவர் இருவர் அழைக்கப்பட்ட நேரத்துக்கே வந்து அமர்ந்துகொண்டார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் நான். குறித்த நேரத்தைக் கடந்து 45 நிமிடங்கள் நகர்ந்து விட்டன. அவர்கள் ஆளை ஆளைப் பார்த்து மணிக்கூட்டையும் பார்ப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒன்றரை மணித்தியாலத்துக்குப் பிறகுதான் மாப்பிள்ளை காட்சியளித்தார்.

இதுபோலவே பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் கொண்டாட்டம், அந்தியேட்டி போன்ற பிற குடும்ப நிகழ்வுகளிலும் நேரத்துக்கு உரிய மதிப்புக் கொடுக்கப்படுவதில்லை.

## பொதுக் கூட்டங்கள்

பொதுக் கூட்டங்களிலும் திருவாளர் நேரம் மிகவே புறக்கணிக்கப்படுகின்றார். ஆண்டு விழாக்கள், நூல் வெளியீடுகள், பாராட்டுக் கூட்டங்கள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் எதுவுமே நேரத்துக்கு நடத்தப்படுவதில்லை. நேரக் குளறுபடியால் இறுதி நிகழ்ச்சிகள் நிறைவேற்றப்படாமலே கூட்டங்கள் முடிவடைந்ததையும் நான் பார்த்திருக்கிறேன். இக்குளறுபடிக்கான காரணங்கள் பல. எனினும் முதன்மை யானவையாகப் பின்வரும் மூன்றையும் கொள்ளலாம்: நேரத்துக்கு ஆட்கள் வராமை யால் கூட்டம் பிந்தித் தொடங்கப்படுவது. அளவுக்கு மிஞ்சிய நிகழ்ச்சிகள். நிகழ்ச்சி யில் இடம் பெறுபவர்கள் (பேச்சாளர்கள் முக்கியமாக) நேரத்தை மறந்து விடுதல்.

முதலாவதற்கான காரணங்களாக போக்குவரத்துத் தடங்கல், அவசிய சொந்த வேலைகள், தொழில் என்று பல இருப்பினும் நேரத்துக்குக் கூட்டத்தைத் தொடங்க மாட்டார்கள் என்ற பொதுவான கருத் தொன்று பொதுமக்கள் மத்தியில் நிலவி வருவதையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். அதனால் மக்களை நேரத்துக்கு வரச்செய்தலாகிய பொறுப்பைக் கூட்டத்தை நடத்துகின்றவர் எடுத்துக்கொள்வது நல்லது. உரிய நேரத்துக்குக் கூட்டத்தைத் தொடங்காதவர்கள் உரிய நேரத்துக்கு வந்தவர்களைத் தண்டிக்கிறார்கள். அடுத்த கூட்டத்துக்கு அவர்களையும் பிந்திவரத் தூண்டகிறார்கள். போதிய கூட்டம் வராது போனாலும் வந்தவர்களை வைத்துக் கொண்டு கூட்டத்தை நடத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் நேரத்துக்குக் கூட்டம் தொடங்கப்படும் என்ற அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் உருவாக்கலாம்.

இரண்டாவதற்கான காரணம் திட்டமிடப்படாமை. நிகழ்ச்சித் திட்டமிடல் என்பது மூளையைப் பிய்த்தெடுக்கும் பாரிய வேலையல்ல. எவ்வளவு நேரத்துக்குக் கூட்டத்தை நடத்தப் போகிறோம் என்பதை முதலில் தீர்மானித்துக்கொண்டு அதற்கு அளவாக நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல் பெருஞ் சிக்கலான விடயமன்று. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் எவ்வளவு நேரம் எடுக்கும் என்ற ஒரு சின்னக் கணக்குப் பார்த்தலே சிறந்த நிகழ்ச்சித் திட்டமிடலாகும். இதற்குக் குறுக்கே தலையெடுக்கும் அவரையும் போடவேண்டும் இவரையும் கேட்க வேண்டும். இவரைப் போடாது போனால் குறைவரும். என்பனபோன்ற 'திருத்திப்படுத்தல்' சடங்குக்குகளை விரிவாக்குகின்றவர்கள் சிறந்தமுறையில் நிகழ்ச்சிகளை ஒருபோதும் திட்டமிடமாட்டார்கள்.

## கூட்டம் ஒரு கூட்டுமுயற்சி

மூன்றவதாக, நேரத்துக்குக் கூட்டத்தை முடிப்பதற்கு நிகழ்ச்சி நிரலில் பங்குபற்றுகின்றவர்களின் பொறுப்புணர்வும் மிகவே இன்றியமையாதது. கூட்டம் ஒரு கூட்டு முயற்சி. அது வெற்றிகரமாக முடிவதற்கு அதிலே பங்குபற்றும் அனைவரினதும் ஒத்துழைப்புத் தேவைப்படு கிறது. இவர்களில் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகின்றவர்கள் முதன்மையானவர் கள். பங்குபற்றுகின்ற தலைவர், பேச்சாளர் மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்குவோர் என்போரில் தலைவரின் பொறுப்பு மிகவும் பெரிது. கூட்டத்தைக் கச்சிதமாக நடத்தி உரிய நேரத்துக்கு முடிப்பவர் இவரே. பலர் வேலியே பயிரை மேய்வதைப்போல, தாமே தலைமையுரையாகவும் இடையிடையே குறிப்புரையாகவும் அதிகம் பேசி, கூடிய நேரத்தை விழுங்கும் குழப்பன்காசிகளாக உள்ளனர்.

இனி, சில பொறுப்பான, அனுபவம் மிகுந்த தலைவர்மார் நேரத்தைக் கட்டுப்படுத்த முயன்றாலும் பேச்சாளர் கீழ்ப்படிவதில்லை. அந்த நாகரிகமுள்ள பேச்சாளர்களைக் கனடாவில் விரல்விட்டுத்தான் எண்ண வேண்டும்.

வைபவம் ஒன்றுக்குப் பொது மக்களை ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு அழைத்தால் அந்த நேரத்துக்கு வைபவத்தை நடத்த வேண்டும் என்பதைக் கனடிய மூத்த குடிமக்கள் தங்கள் கடமையாகவே கருதுகின்றார்கள். கனடாவில் மட்டுமல்லாது மேற்குலக நாட்டவர் எல்லோருமே நேரத்தைப் பொன்போலப் போற்றுகின்றார்கள். அதுவே அவர்களின் வளர்ச்சிக்கும் காரணமாகின்றது.

நேரத்தைச் சரியாகக் கடைப்பிடியாத நிலைமை இளஞ் சந்ததியைத் தோன்றா எழுவாயாக எம்மிடமிருந்து தள்ளி வைக்கின்றது. முதியவர்கள் பிற்போக்கான வர்கள் என்றுகூடப் பல இளைஞர்கள் கருதுகிறார்கள். நேரத்தை இழுத்தடிப்பத னால் இளைஞர்கள் சலிப்படைகிறார்கள். சலிப்புத்தட்டும் நிகழ்வுகளுக்குச் செல்வதைத் தவிர்க்கவுஞ் செய்கிறார்கள். ஒரு நல்ல உதாரணம் குறித்த நேரத்துக்குப் பூசைகளை நடத்தாத கோயில்கள்.

- தொடரும்



கவிஞர் வி. கந்தவனம்


**அக்டோபர் 6, 2011 அன்று ஒன்டாரியோவில் மாகாணப் பொதுத் தேர்தல் நடைபெறும்**

அக்டோபர் 6 அன்று வாக்களிப்பதற்கு நீங்கள்:

- 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்;
- கனடிய குடிமகனாக இருக்க வேண்டும்; மற்றும்
- ஒன்டாரியோவில் வாழ்பவராக இருக்க வேண்டும்.

தேர்தல் தினத்தன்று உங்களால் வாக்களிக்க முடியவில்லையென்றாலும் ஒரு முன் வாக்களிப்பு அல்லது சிறப்பு வாக்களிப்பின் மூலம் நீங்கள் வாக்குகளைப் பதிவு செய்யலாம்.

முன் வாக்களிப்பு செப்டம்பர் 21 முதல் செப்டம்பர் 30 வரை செயல்படும். இந்த வாக்குச் சாவடிகளின் அமைவிடங்கள் எங்கள் வலைத்தளத்தில் கிடைப்பதுடன், ஒவ்வொரு நோட்டிஸ் ஆ..ப் ரெஜிஸ்டிரேஷன் கார்டிலும் அச்சிடப்பட்டிருக்கும்.

சிறப்பு வாக்களிப்பின் மூலம் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ வாக்குப் பதிவு செய்வதற்கும் நீங்கள் விண்ணப்பிக்கலாம், இது செப்டம்பர் 7, 2011 முதல் தொடங்குகிறது. சிறப்பு வாக்களிப்பின் மூலம் வாக்குப் பதிவு செய்வதற்கு, நீங்கள் ஒரு சிறப்பு வாக்களிப்புக்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும், இதனை எங்கள் வலைத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது உங்கள் உள்ளூர் தேர்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இம்மொழியில் கூடுதல் விவரங்கள் www.elections.on.ca என்ற எங்கள் வலைத்தளத்தில் கிடைக்கும் மற்றும் வாக்குச்சாவடிகளில் அச்சிடப்பட்ட படிவங்களிலும் கிடைக்கும்.

Elections Ontario

நாங்கள் இதில் சேர்த்திராத ஏதேனும் கேள்விகள் உங்களுக்கு இருந்தால், அல்லது வரவிருக்கும் தேர்தல் குறித்து மேலும் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால் **www.elections.on.ca** என்ற வலைத்தளத்தில் எங்களை அணுகவும், அல்லது எங்கள் பொது விசாரணைகளுக்கான பின்வரும் எண்ணில் அழைக்கவும்: **1.888.668.8683**.
*Available in English*

# மரணமாகியவர் ஆயுள்...

### 10ஆம் பக்கத்தொடர்ச்சி

காப்புறுதி ஒப்பந்தம் எங்கே? எந்த கம்பனியில் உள்ளது என்பதனை தேடி கண்டுபிடிப்பதற்கு இந்நிறுவனத்தின் விண்ணப்பபடிவத்தில் பின்வரும் தகவல்களை வழங்க வேண்டும். அவையாவன பின்வருமாறு.

1. மரணமாகியவரின் முழுப்பெயர்.
2. அவரது பிறந்த தினம்.
3. அவரது இறந்த தினம்.
4. மரணம் நடந்த போது அவரது இறுதி முகவரி.
5. முன்னர் வசித்த விலாசங்கள்.
6. சமூக காப்புறுதி இலக்கம்.
7. மரணமாகியவரின் ஆயுள் காப்புறுதி தொடர்பான தகவல்களை அறிவிக்க வேண்டியவரின் பெயர் விலாசங்கள், மற்றும் மரணமாகியவருக்கும் இவருக்கும் உள்ள உறவு என்ன?
8. ஆயுள்காப்புறுதி பெற்றிருந்த வருடம் அறிந்திருந்தால் அதனையும் குறிப்பிடல் வேண்டும்.
9. மரணமடைந்தவர் ஆயுள் காப்புறுதி வைத்திருந்தார் என்பதனை எந்த அடிப்படையில் முடிவுக்கு கொண்டு வந்தீர்கள்?

போன்ற வினாக்களுக்கு இவ்விண்ணப்ப படிவத்தில் வழங்குதல் வேண்டும். இவ்விண்ணப்ப படிவங்களை இந்நிறுவனத்தின் இணையதளத்தினுள் இருந்து பதிவு இறக்கம் செய்து எடுத்து நிரப்பி அனுப்பலாம்.




முயன்று பாருங்கள்! காப்புறுதி என்பது அதற்கு உரியவர்கள் கோரினால் மட்டுமே வந்துசேர வேண்டிய பெறுமதி வந்து சேரும். மௌனமாக, அமைதியாக இருந்தால் ஒன்றும் கிடையாது.


mhc

**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



# *Peace* இல்...

### 03ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்புடையதல்ல. அத்துடன் வெளியே அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஆறு மில்லியன் பாலஸ்தீனியர் திரும்பிவரும் அதிகாரம் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என மேலும் ஹமாஸ் தெரிவிக்கின்றது. அதே சமயம் மிகத் தெளிவாக இவர்கள் அனைவரும் ஒரு கருத்தை தெளிவாகக் கூறுகின்றனர் 'தொடர்ச்சியான பேச்சு வார்த்தைகள் பாலஸ்தீனத்துக்கு தீர்வை கொண்டு வராது. மேலும் பாலஸ்தீனத்தை பல கூறுகளாக உடைக்கும்' என்கின்றனர்.

6. பாலஸ்தீனிய கோரிக்கை ஏற்கப்படா விட்டால் பல விளைவுகள் ஏற்படும். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் எகிப்தில் அமைந்துள்ள இஸ்ரேல் தூதரகத்துக்குள் இஸ்ரேலிய மக்கள் புகுந்து இஸ்ரேலிய தூதரை இஸ்ரேலுக்கே திருப்பி அனுப்பியுள்ளனர். அதேபோல் ஐரோப்பாவின் புதிய பொருளாதார பலமான துருக்கியும் இஸ்ரேலுக்கு எதிராகவே திரும்பியுள்ளது. ஈரானும் இஸ்ரேலை பதம் பார்க்கும். ஹமாஸ் அமெரிக்க எதிர்ப்பை மேலும் வலுப்படுத்தும். இதுவரை காலமும் சமாதானம் அமெரிக்கா என நினைத்த பாலஸ்தீன மக்களும் வன்முறைக்கு திரும்புவர். இது இன்று அரேபிய நாடுகளில் தோன்றியுள்ள மக்கள் எழுச்சியுடன் இணைந்து மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும்.

பிரென்ச் அதிபர் Nicolas Sarkozy தனது உரையில் நேரடியாகவே அமெரிக்காவை சாடியுள்ளார். பாலஸ்தீனிய-இஸ்ரேல் சமாதானத்துக்கு ஒரு நாட்டை தங்கியிருக்க முடியாது. இது கூட்டு முயற்சி. அரேபிய நாடுகள் ஐரோப்பிய நாடுகள் இதில் பங்குபற்ற வேண்டும் என்பது இவரது கருத்து. இதற்கு முன்பாக நால்வர் தொகுதியில் இந்த நாடுகள் அங்கம் பெற்றிருந்தும் சமாதானத்தை ஏற்படுத்த முடியவில்லை என்பதை இவர் கவனிக்கத் தவறிவிட்டார். நால்வர் தொகுதி பிரதிநிதியாகவுள்ள முன்னாள் பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயரை பாலஸ்தீனிய அதிகாரி 'இஸ்ரேலின் பிரிதிநிதி' என குற்றஞ்சாட்டியிருந்தார். இதிலிருந்து இவர்களது சமாதான பூச்சுக்கள் எந்தளவிற்கு இருந்துள்ளன என்பதை தெரிந்து கொள்ளலாம். 1991 வரை அமெரிக்கா பாலஸ்தீனிய சமாதானப் பேச்சுக்கள் எதுவையும் ஏற்றுக்கொள்ள வில்லை. அமெரிக்கா ஒரு போதும் உண்மையான சமாதான தூதராக செயற்படவில்லை. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தெற்கு சூடான் சர்வசன வாக்கெடுப்புக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவ நாடாக தெற்கு சூடான் இடம் பெறவும் அங்கீகரித்தது. தனது சுய நலன்களுக்கான தூதராகவே அமெரிக்கா செயற்படுகின்றது. 2012ல் நடைபெறவுள்ள அமெரிக்க தேர்தலில் போட்டியிடும் Rick Perry அதிபர் ஒபமாவை கண்டித்துள்ளார். இவர் பாலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட முடியாது எனக் கூறியுள்ளார். இவருக்கு 2009ல் Defender of Jerusalem விருது இஸ்ரேல் அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஒபமாவின் கருத்துக்கள் தீர்க்கமற்றவை. கடந்த வைகாசியில் இவர் இஸ்ரேலின் இருப்பை பாலஸ்தீனியமும் அரபு நாடுகளும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கின்றார். அப்படி எனின் பாலஸ்தீனியத்தின் இருப்பை அமெரிக்கா இதுவரை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்பொழுது பாலஸ்தீனி யத்தில் உள்ள அதிகாரங்கள் ஒன்ராரியோ மாநிலத்துக்கு உள்ள அதிகாரங்களை விடக் குறைவானவையே. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்களை நிறுத்த அமெரிக்கா இதுவரை எதுவும் செய்யவில்லை. முதலில் 1967 எல்லைப் பிரகாரம் தீர்வு என்றார். பின்னர் மக்களின் பாதுகாப்பு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்றார்.



இவர் தனிப்பட்ட முறையில் பாலஸ்தீனிய சுதந்திரத்தை அங்கீகரிக்க லாம். அமெரிக்க அதிபராக அங்கீகரிக்க முடியாது என்பதே உண்மை. இவரது பேச்சின் மாற்றங்களில் இருந்து இதனைக் காணலாம். 2010ல் ஐக்கியநாடுகள் சபை யில் உரையாற்றியபோது அடுத்த வருடம் இந்நேரம் புதிய பாலஸ்தீனியம் மலர்வதற் கான சாத்தியக்கூறுகள் உள்ளன என நம்பிக்கை தெரிவித்தார். பேச்சு வார்த்தை கள் சில வாரங்களில் முடிவுக்கு வந்தபோது மௌனமாக இருந்தார். அமெரிக்கா இறுதிவரை இஸ்ரேலையே ஆதரிக்கும்.

7. பாலஸ்தீனிய அதிபருக்கு தான் முன்வைக்கும் கோரிக்கைக்கு என்ன நடக்கும் என்பது தெளிவாகத் தெரியும். பொதுச்சபை அங்கீகாரம் என்பது 'முழுமையான நாடாக அங்கீகரிக்காவிடிலும்' வத்திக்கான் போன்ற வாக்களிக்க முடியாத நாடாக அங்கீகரித்தல் என்பது பெரிய வெற்றியே. இது கிடைப்பதை பாதுகாப்புச் சபையால் தடுக்க முடியாது. மேற்கு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி 75 வீதமான அங்கத்துவ நாடுகள் அங்கீகரிப்பின் மேற்கு நாடுகளுக்கு இது ஒரு இழப்பே. முக்கியாக இஸ்ரேலுக்கு பெரும் இழப்பாகும். இதனால் இஸ்ரேலை சர்வதேச நீதிமன்றத்துக்கு அழைக்கலாம்.

முழு நாடாக பாதுகாப்புச் சபை நிராகரிப்பின் உலகை நோக்கி ஒரு கேள்வியையும் சமாதான பேச்சுக்களின் நம்பிக்கை யீனத்தையும் போலியையும் போட்டு உடைக்கின்றது. பாலஸ்தீனியத்தின் இந்த நடவடிக்கையின் வெற்றியே இது. அரபு நாடுகளிலும் மூன்றாம் உலக நாடுகளிலும் தோன்றியுள்ள அமெரிக்க எதிர்ப்பானது அமெரிக்க வீற்றோவை பாவித்தால் மேலும் அதிகரிக்கும். பாலஸ்தீனியம் இஸ்ரேலையும் அமெரிக்காவையும் ஒரு இக்கட்டான கட்டத்தில் தள்ளியுள்ளது. பாலஸ்தீனியத் தின் நிலை வாழ்வா? சாவா? என்பது.

# இதயத்தின் உண்மையான அளவு

## ஓடும் நீர் உறைவதில்லை 130

## Real Size of a Heart


எமது இதயமானது (Heart) முன்னூறு முதல் நானூற்றைம்பது கிராம் எடையுடையது. சாதாரண நிலையில் ஒரு நிமிடத்திற்கு நான்கு முதல் ஐந்து லீற்றர் குருதியை உடம்புக்குப் பாய்ச்சுகிறது. அதனுடைய துடிப்பு நிமிடத்திற்கு எழுபது முதல் எண்பதுவரை இடம் பெறுகின்றது. இன்னொரு வகையில் கூறுவதாயின் எமது இதயமானது நாளொன்றுக்கு ஏழாயிரத்து இருநூறு லீற்றர் குருதியை உடம்புக்குப் பாய்ச்சுகின்றது. ஒரு இலட்சத்து பதினையாயிரம் தடவைக்கு மேலாகத் துடிக்கிறது. இதனுடைய அடிப்படைத் தொழிற்பாடு பிராணவாயு உள்ள குருதியை (Oxygenated Blood) உடம்பு முழுவதும் பாய்ச்சுவதும் உடம்பிலிருந்து பிராணவாயு அல்லாத (Deoxygenated) குருதியையும், கழிவுப் பொருட்கள் (கரியமிலவாயு - Carbon dioxide) என்பனவற்றையும் நுரையீரலுக்கு (Lungs) வழங்குவதுமாகும். சிறிய எடையுடையதும், எமது உயிர்வாழ்தலின் மையமுமானதும் நாளாந்த செயற்பாட்டில் அதிசயிக்கத்தக்க வகையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதுமான இந்த இதயத்தின் பௌதீக அளவு விரல்கள் மடித்து மூடப்பட்ட (A Clenched Fist) கையின் அளவாகும்.

இங்கே நான் குறிப்பிட விரும்பும் இதயமோ அல்லது அதன் அளவோ பௌதீக அளவைப் பற்றியதல்ல. சிலரைப்பார்த்து இதயம் இல்லாதவர்கள் என்றும் வேறுசிலரைப் பார்த்து நல்ல இதயம் கொண்டவர்கள் என்றும் கூறுகின்றோம் அல்லவா. அந்த இதயத்தைப் பற்றிய கட்டுரைதான் இது. ஒருவரது உயர் வாழும் காலத்தைத் தீர்மானிப்பது பௌதீக இதயம். ஒருவர் எவ்வாறு வாழ்ந்தார் என்பதைத் தீர்மானிப்பது பௌதீகமல்லாத இதயம். இந்த இரு இதயங்களும் வேறுபட்டவையாக இருப்பினும் அவற்றின் செயற்பாடுகள் ஒரே மாதிரியானவையே.

ஒருவரது உயிர்வாழ்தலின் மையம் இதயமாக அமைவது போலவே வாழ்வியலின் மையமாக அமைவதும் ஒருவரது இதயமே. பௌதீக இதயத்தின் தொழிற்பாடு பௌதீக ரீதியாக அளவிடுவதைப் போன்றே பௌதீகமல்லாத இதயத்தின் செயற்பாடும் பௌதீகமல்லாத விடயங்களால் அளவிடப்படுகின்றது. முதலில் எமது பௌதீக இதயத்தின் அடிப்படைச் செயற்பாட்டைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம். நாளாந்தம் ஏறத்தாழ ஏழாயிரத்து இருநூறு லீற்றர் குருதியைப் பாய்ச்சுகின்றது. அவ்வாறு பாய்ச்சப்படும் குருதியானது உடம்பின் ஒவ்வொரு பகுதிக்கும் செல்கிறது. அத்துடன் மாசுபடுத்தப்பட்ட குருதியை நுரையீரலுக்கு அனுப்புகின்றது. இங்கே ஒரு விடயத்தை நாம் மிக நுணுக்கமாகக் கவனித்தல் வேண்டும். அதாவது இதயத்தின் தொழிற்பாடு குருதியைப் பாய்ச்சுவதேயன்றி சுத்திகரிப்ப தல்ல. நமது இயத்தின் தரமான தொழிற்பாடும் அதனால் எமது உடலுக்கு ஏற்படும் விளைவுகளும் நமது குருதியின் பிராணவாயுவின் பங்கினால் தீர்மானிக்கப்படு கின்றது. இங்கே குருதியைப் பாய்ச்சுகின்ற இதயத்தின் இயக்கமே குருதியின் பிராணவாயுவினால் நிர்ணயிக்கப்படுவதைக் காணலாம்.

இப்போது மேற்கூறிய விடயங்களைப் பௌதீகமல்லாத இதயத்துடன் தொடர்பு படுத்துவோம். பௌதீகமல்லாத இதயத்தின் தொழிற்பாடும் ஒரு குறிப்பிட்ட தொழிற்பாட்டைத் தொடர்ச்சியாச் செய்வது தான். முன்னையது உடலுக்கு, இந்த இதயம் உலகத்திற்கு. இடைவிடாது கொடுக்கப்படும் விடயம் முன்னையது பௌதீக அடிப்படையானது. மற்றையது உளவியல் சார்ந்தது. ஒருவரது உடல் ஆரோக்கியம் அவர் உடலில் ஓடுகின்ற குருதியின் பிராண வாயுவின் அளவால் தீர்மானிக்கப்படுவதைப் போன்றே ஒருவரது வாழ்வியல் ஆரோக்கியம் உயர்வான எண்ணங்களின் உள்ளீடுகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

ஒருவரது நடவடிக்கைகளின் தன்மைகளைப் பொறுத்தே அவருக்கு இதயம் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதைப் நாம் தீர்மானிக்கின்றோம். மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காணும் மனிதர்கள், சுயநலத்திற்காகச் சுயகௌரவத்தை இழந்து செயற்படுபவர்கள், தனது கடமையைச் செய்ய வாய்ப்பிருந்தும் அதைச் செய்யாதவர்கள், தமது பொறுப்புக்களில் இருந்து ஒழிந்து கொள்வார்கள், இரக்கமில்லாதவர்கள் என்று பட்டியலிடப்படு பவர்கள் அனைவரும் நெஞ்சுக் கூட்டுக்குள் ஒரு இதயத்தை வைத்திருந்தும் இதயம் இல்லாதவர்கள் என்று முத்திரை குத்தப்படுபவர்கள். எனவே வாழ்வியலில் உடல்நலவியல் சம்பந்தப்பட்ட இதயம் ஒரு தொழிற்படும் கருவியே. அதனால் தான் அதன் இயக்கத்திற்கும் அதன் அளவுக்கும் ஒரு கணிப்பு உண்டு.



மாறாக உளநலவியல் சார்ந்த இதயம் எந்த ஒரு அளவுகோலுக்கும் உட்படாது மட்டுமல்ல அதன் செயற்பாடு ஒரு முடிவுக்கு வருவதுமல்ல. இந்த இதயம் எப்படிப்பட்டது, என்ன செய்கின்றது, இதன் செயற்பாடுகளின் பெறுபேறுகள் என்ன என்பதெல்லாம் அந்த இதயத்தின் உரிமையாளரால் கூட அளவிட முடியாதவை. இந்த இதயத்தின் அடிப்படைத் தொழிற்பாடும் கொடுத்துக் கொண்டிருப்பது தான். இந்தக் கொடுப்பனவு முற்றுமுழுதாகப் பிறருக்குத்தான். அவை மற்றவர்கள் வாழ்வை மேம்படுத்தும் கொடுப்பனவுகள்.

**KG Master**-kgmaster@rogers.com

இந்த இதயத்தின் உரிமையாளர்கள் இந்த மகத்தான வாழ்வியல் பண்புகளைப் பிறப்பால் கொண்டுவந்தவர்கள் அல்ல. வாழ்வால் கண்டறிந்தவர்கள். வாழ்க்கையின் பாதையில் அவர்களால் சேகரிக்கப்பட்ட உயர்ந்த பண்புகளின் கொடுப்புத்தான் அது.. இவர்களது இதயம் உலகுக்குப் பாய்ச்சும் வாழ்வியல் எனும் குருதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பிராணவாயுதான் அவர்களது உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நாட்டுப்பற்று, இறையுணர்வு, தன்னலமற்ற சேவை போன்ற மகத்தான பண்புகளின் தொகுப்பு. இந்த உயரிய பண்புகளின் இதயங்கள் எப்போதும் கொடுத்துக் கொண்டிருப்பவையாக இருக்கும். அதனால் இந்த இதயங்கள் அவர்களின் இறப்புக்கப்பாலும் இயங்கிக் கொண்டிருக்கும்.

உயர்ந்த பண்புகளைக் கொண்டவர்களது இதயத்தின் வெளிப்பாடு அவர்களது வாழ்வியல் அனுபவங்களில் இருந்தே எழுகின்றது. பிறருடைய நலனை முன்வைத்து உழைப்பவர்கள் எல்லோரும் மிகவும் கடினமான பாதையூடாகத்தான் வாழ்வியல் பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். பலர் எள்ளிநகையாடப்பட்டவர்களாகவும் ஏளனம் செய்யப்பட்டவர்களாகவும், அறிவிலிகள் என்று ஆததிரதாரிகளால் முத்திரையிடப்பட்டவர் களாகவும், ஏன் அதிகாரத்தின் உயர் மட்டத்தில் உள்ளவர்களால் அரக்கத் தனமாகச் சித்திரவதை செய்யப்பட்டவர் களாகவும் காணப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நெஞ்சை உருக்கும் நெருக்குதல் களுக்கெல்லாம் அடிபணியாது உலகுக்குத் தம்மை உத்தமர்களாகக் கொடுத்தவர்கள் அனைவரும் அவர்களது இதயத்தின் அளவை அளவிட முடியாத நிலைக்கு உயர்த்தியவர்கள்.

### ஆம் வாசகர்ளே!

ஒருவரது இதயத்தின் அளவு என்பது அவரது இதயத்தைத் தமது உயர்வான வாழ்வியலுக்காக எத்தனை பேர் பங்கெடுத்துக் கொள்கிறார்கள் என்பதால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. நமது இதயத்தின் நற்செயல்களால் நன்மை பெறுபவர்களது எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க எமது இதயத்தின் அளவும் அதிகரித்துச் செல்லும். பொதுநலம் சார்ந்த வாழ்வியல் முறையில் நாம் ஈடுபடும் போது நமது தலை மற்றவர்களது தலையை விடச் சிறிது உயர்வாகத் தெரியும். அப்போது கூழ்முட்டைகளும் அழுகிய தக்காளிப் பழங்களும் எமது தலையை முழுக வைக்கும். ஆனால் நேர்மையுடன் நேர்த்தியான பாதையில் தொடர்ந்து செல்வோமாயின் கூழ்முட்டைகளும் தக்காளிப்பழங்களும் பூக்களாகவும், பூமாலைகளாகவும் மாறும். அதுமட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான இதயங்களை எமது இதயம் பகிர்ந்து கொள்ளும். அதுவே இதயத்தின் உண்மையான அளவு.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹாராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# சகோதர இயக்கவியல்

***(Sibling Dynamics)***

மனித ஆளுமை பற்றிய ஆய்வு என்பது மிகுந்த சிக்கலானதாகும். கருவில் உருவான ஒவ்வொரு சிசுவும் பிறந்து வளரும்போது தான் அவர்களது குணாதிசயங்களை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக ஒரு குடும்பத்தில் பிறந்த சகோதரங்கள் பற்றி பலவற்றினை நாம் புரிந்து கொண்டாலும் தெரியாத உண்மைகள் பலவுள. பல ஆய்வுகள் நடத்தப்பட்டாலும் இன்னும் சில விடயங்கள் குழப்பமானவையாகவே உள்ளன. ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் குறிப்பாக தாய், மரபணுக்கள், சகபாடிகள் என்பனபற்றி தெரிந்து கொண்ட பல விடயங்கள் இன்று பொருந்தாமலும் போய்விடுகின்றன. எம்மால் புரிந்துகொள்ள முடியாத, புலப்படாத ஈர்ப்புத்தன்மை என்பது எமது சகோதரங்கள் பற்றியதென்பதே விஞ்ஞானிகளின் முடிவாகும்.

ஒவ்வொரு குடும்பங்களிலும் சகோதரங்கள் தமக்கிடையே பழகுகின்ற விதம் மிகவும் வியப்பூட்டுபவை! 'எனது சகோதரனின் சொற்படிதான் நடப்பேன், அவர் தான் குடும்பத்தில் மூத்தவர்' இப்படி ஒரு தம்பி கூறி முடிப்பதற்கு முன்பதாக 'அவர் என்ன ராசாவே! அவர் சொல்லுகிறபடி நான் நடக்கமாட்டேன்' என ஒரு தம்பி முணுமுணுப்பார். 'எனது தங்கச்சி என்னிலை சரியான பாசம்' என அக்கா மனம் நெகிழ்ந்து கூற 'அக்காவை எனக்கு கண்ணிலேயும் காட்ட ஏலாது. எல்லாத்துக்கும் நான் தான் என்று முன்னுக்கு வந்து நிற்பர்'. இப்படி ஒரு தங்கை குத்தலாக பேசுவா. இப்படியெல்லாம் பார்த்தால் சகோதர உறவு, சகோதரபாசம், சகோதர ஒற்றுமை, சகோதர நல்லுறவு என்பது பற்றிய கருத்துகள் இன்னும் தொடர்ச்சியான ஆய்வினையே வேண்டி நிற்கின்றது என்பது புலனாகின்றது.

பொதுவாக சகோதரங்கள் பெற்றோர்களின் கண்காணிப்பில் வாழ்ந்து வந்தாலும் பின்பு இடைக்காலத்தில் துணைவர்களோடு வாழ நேர்ந்தாலும் தமது சகோதரங்களுடன் மட்டுமே வாழ்நாள் முழுவதும் தொடர்புள்ளவர்களாக இருக்கின்றனர். இரத்த உறவு காரணமாகவும், பிறப்புரிமை காரணமாகவும் இவர்கள் அனைவரும் ஒரே மாதிரி இருப்பார்கள் என்றும் கூறமுடியாது. சில சகோதரங்கள் மிகவும் ஒற்றுமையுடன் வாழ்கின்றபோது சிலர் தினசரி பிரச்சினையுடன் வாழ்கின்றனர். சில குடும்பங்களில் ஆண் சகோதரங்கள் தமக்குள் கூடிய உறவு வைத்துக்கொள்ளும் வேளையில் சில குடும்பங்களில் பெண் சகோதரங்கள் தமக்கிடையில் கூடிய உறவு வைத்துக்கொள்வர். சிலவேளைகளில் புறநடை காணப்படலாம். இதற்குச் சில உளவியல் காரணிகள் உள்ளன. எனினும், குடும்ப சூழ்நிலையை பொறுத்து இவற்றில் மாற்றங்கள் நிகழலாம். நீண்ட காலமாக குடும்பத்தில் ஒவ்வொருவரையும் உருவாக்குபவர்கள் யார்? என்ற ஆய்வு நடைபெற்றுள்ளது. பல முடிவுகள்



வெளியான வேளையில் பெற்றோர்களே மிக முக்கியமானவர்கள் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் சகோதரங்கள் தான் மிக முக்கியமாக ஒவ்வொருவரையும் உருவாக்குகின்றார்கள் என்ற புதிய கருத்து இன்று உள்ளது. துணையாக வாழ்பவர்கள், மாதிரியாக வாழ்பவர்கள், பாதுகாப்புக்கு உதவுபவர்கள், விளையாட்டுக்கு பங்காளிகள், நல்ல ஆலோசகர்கள் என்றெல்லாம் இவர்களை அழைத்தாலும் சிலவேளைகளில் பயங்கர எதிரிகளாகவும் பழிவாங்குபவர்களாகவும் இவர்களே மாறிவிடக்கூடும். பெண் சகோதரங்கள் 'பெண்மை' பற்றிய எண்ணங்களை உருவாக்க ஆண்சகோதரங்கள் வீரதீர செயல்களை உருவாக்குபவர்களாக இருப்பர். 'தம்பியுள்ளான் சண்டைக்கு அஞ்சான்' போன்ற பழமொழிகள் சகோதர பலத்தை நிரூபிக்கின்றன.

பொதுவாக பெற்றோர்கள் குறிப்பிட்ட காலங்களே தமது பிள்ளைகளுடன் வாழ்வர். அவர்களே பிள்ளைகளை வளர்ப்பவர்கள். பின்பு துணைவர்களுடன் அவர்கள் வாழ்கின்றனர். எனினும், முற்றுமுழுதாக ஒவ்வொருவரையும் உருவாக்குபவர்கள் சகோதரங்களே என்பது ஒரு முக்கியமுடிவாகும். மிகுந்த துணைவர்களே இவர்கள் எனினும், மிகுந்த துன்பத்தினையும் அவர்களே தரக்கூடும்.

கலிபோர்னிய பல்கலைக்கழக குடும்ப சமூகவியலாளர் (Kathrine Elonger) எமது முழுமையான பிரயாணத்திலும் கூட வருபவர்கள் அவர்களே என்று குறிப்பிட்டுள்ளார். பொதுவாக இவரது கருத்துப்படி ஒரு குடும்பத்தில் பிறக்கின்ற மூத்த சகோதரங்கள் கூடுதலான உழைப்பாளிகளாக (Strivers) இருப்பர். ஆனால் இளையவர்களோ செல்லம் உள்ளவர்களாக இருப்பர். இடையில் உள்ள சகோதரங்கள் ஏதோ ஒரு பக்கம் சார்ந்திருப்பர். எனினும் அமெரிக்கா, கனடா நாடுகளில் இதில் சில மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. சகோதரங்களின் நடத்தைகள், கல்வி செயற்பாடுகள், பால் வேறுபாடுகள் என்பன பற்றி செய்யப்பட்ட ஆய்வுகளில் 'புற உலகம்' பற்றிய கருத்து முதன்மை பெற்றுள்ளது. ஒவ்வொருவரது திறமைகள் பழக்கவழக்கங்கள், சகபாடிகள், தொழில் ஆற்றல்கள் என்பவற்றில் வெளியார் தலையீடும் ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகின்றது.

சிறியவயது முதல் குடும்பத்தில் உள்ள சகோதரங்கள் பற்றிய ஆய்வுகள் செய்யப்பட்ட வேளையில் பல உண்மைகள் வெளிவந்துள்ளன. பதினொரு வயதுக்கு கீழ்ப்பட்ட வயதினரில் 33 வீதத்தினர் தங்கள் ஓய்வு நேரத்தில் சகோதரங்களுடனேயே விளையாடுகின்றனர். அதேபோன்று முரண்பாடுகள் (Conflicts) நிகழும்விதம் பற்றியும் சில கருத்துக்கள் உள்ளன. 3-7 வயதிற்குள் ஒரு மணித்தியாலத்தில் 3-5 தடவைகள் முரண்பட்டுள்ளனர். 2-4 வயதுக்கு உட்பட்டவர்கள் 6-3 தடவைகள் முரண்பட்டுள்ளனர். அதாவது 10 நிமிடத்துக்கு ஒரு தடவை முரண்பட்டுள்ளனர்.

அடுத்து சகோதரங்கள் எப்படி ஒருவரை-யொருவர் புரிந்து கொள்ளுகிறார்கள் என்ற ஆய்வும் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக இவர்கள் சண்டையிட்டுக் கொள்வது பற்றியும் ஆய்வு நடைபெற்றுள்ளது. பொருளாதார வேறுபாடுகள், போட்டி, பொ-றாமை, ஒப்பீட்டுத்தன்மை போன்ற காரணிகளால் பெற்றோர்கள் பாதிப்பு அடையும்போது பிள்ளைகளும் பாதிப்படையலாம். கீழைத்தேசத்து குடும்பங்களில் எத்தனை சகோதரங்கள் என்ற எண்ணிக்கை முக்கியமாகின்றது. பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கையும் இதில் அடங்கும். பெற்றோர் எப்படி பிள்ளைகளை விரும்புகின்றனர்? பாசத்தில் வேறுபாடு உள்ளதா? என்ற காரணிகள் முக்கியமானவை. படிப்படியாக சகோதர பொறாமை (Sibiling Jealousy) ஏற்பட்டு விடுகின்றது. புலம் பெயர்ந்துள்ள எம்மவர் மத்தியில் வயது வந்த சகோதரங்களுக்கிடையில் இது சற்று அதிகமாகியுள்ளது. வீடுகளின் வசதிகள், தொழில் அமைப்பு, வாகன எண்ணிக்கை போன்றவற்றில் முக்கிய ஒப்பீடுகள் நிகழ்வதால் இடைவெளி கூடுகின்றது. பல சகோதரங்கள் நீண்டகாலமாக தொடர்புகளை நிறுத்தியும் வருகின்றனர்.

சமூக பொருளாதார ஆய்வுகள் மூலம் பல குடும்பங்களில் பெற்றோர் சில பிள்ளைகளில் அதி கூடிய விருப்பு கொண்டுள்ளார்களா? என்றும் ஆராயப்பட்டது. 18 சதவீதமான பிள்ளைகள் தங்கள் பெற்றோர் ஒரு பிள்ளையில் கூடுதலாக விருப்பம் வைத்துள்ளனர் எனக் கூறியுள்ளனர். சில சூழ்நிலைகளால் இது ஏற்படுகின்றது. 384 குடும்பங்களில் சகோதரங்களை ஆய்வு செய்த Katherine Longer பல தடவை அவர்களது வீடுகளுக்கு சென்று தொடர் ஆய்வுகளை மேற்கொண்டார். 65 வீதமான தாய்மாரும் 70 வீதமான தகப்பன்மாரும் ஒரு பிள்ளையில் கூடுதலான விருப்பு கொண்டுள்ளதினை அறிந்துள்ளார். அதிலும் மூத்தபிள்ளையில் விருப்பு கூடியுள்ளது. இதனை சிலர் நியாயப்படுத்தியும் உள்ளனர். பொதுவாக மூத்த சகோதரங்கள் முன்மாதிரியாக வாழ்வதற்கு முயன்றுள்ளனர். அவர்கள் மது அருந்துதல், சிகரட் பிடித்தல் போன்றவற்றினை செய்யும் போது இளம்பிள்ளைகள் இதனை பின்பற்றியுள்ளனர் அல்லது எதிர்ப்பு உணர்வு கொண்டு எதிர்மாறாகவும் செயல்பட்டுள்ளனர். குடும்பத்திற்கு பலவழிகளில் உதவி செய்து காப்பாற்றும் எண்ணமும் இருந்துள்ளது. ஒக்லகோமா பல்கலைக்கழகத்தினை சேர்ந்த Joseph Roswers என்பவர் 9500 இளம் சிகரட் பிடிப்பவர்களை ஆய்வு செய்தார். அடுத்து சகோதரங்கள் எவ்வாறு தங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்கிறார்கள் எனவும் ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக சிறுவர் வாழ்வு முழுமையாக அவதானிக்கப்பட்டுள்ளது. இரகசியம் பேசுவது முதல் பல்வேறு கருத்துப்பரிமாறுதல்கள் அனைத்தும் ஆராயப்பட்டன. சகோதர இயக்கவியலில்



**எஸ். பத்மநாதன்**
**சிந்தனைப் பூக்கள்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
CALL: N.SELVAM

# நினைவாற்றல் - MEMORY - 18

## அன்பான வாசகர்களே!

நாம் இந்தக் கட்டுரையில் பலவிதமான நினைவாற்றல் குறைபாடுகளைப் பற்றி ஆராய்ந்திருக்கின்றோம். இவற்றில் அதிகமானவர்களைப் பாதிக்கும் அல்சீமேர்ஸ் நோய் (Alzheimer's Disease) பற்றி மேலும் சற்று விரிவாக ஆராய்வோம். இந்த நோய் ஏற்படும் ஒருவரின் நிலை படிப்படியாக மோசமாகிச் செல்வது வழக்கம். நினைவாற்றல் இழப்பு, நாளாந்த வேலைகளைச் செய்வதில் சிரமம், திடமற்ற மனநிலை (Moody), போன்றவை இதற்கான அறிகுறிகளாக இருக்கலாம். ஆனால் இவ்வாறான அறிகுறிகள் மனஅழுத்தம், தொற்று நோய்கள் காரணமாகவும் இருக்கலாம். அல்சீமேர்ஸ் நோயினைப் பொறுத்த வரையில் ஆரம்ப நிலையில் மருத்துவரை நாடிச் சிகிச்சை பெறுவது முக்கியமானது. மேலும் பல எச்சரிக்கைக் குறிகள் இந்த நோய்க்குரியனவையாக உள்ளன. இந்த நோயால் பாதிக்கப்படும் ஒருவர் அடிக்கடி நினைவாற்றல் இன்றி இருப்பதோடு அண்மையில் அறிந்த விடயங்களை நினைவில் மீட்டுக்கொள்ளாதவாறு அவதியுறுவார். தமது வாழ்வில் மிகவும் தெரிந்த விடயங்களைச் செய்வதில் கூடச் சிக்கலைச் சந்திப்பார்கள். தாம் வசிக்கும் இடத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாதவாறு திண்டாடுவர். சூழ்நிலைக்கேற்ப முடிவுகளை எடுக்க முடியாதவாறு இருப்பார்கள். எண்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாள முடியாது இருப்பார்கள். எந்தப் பொருளை எங்கு வைக்க வேண்டும் எனத் தெரியாது அல்லற்படுவார்கள். பலவித மான உணர்ச்சி கொண்டவர்களாக திடமற்ற மனநிலையுடன் காணப்படுவார்கள். அவர்களது குணங்கள் பொதுத்தன்மை அற்று மாறுபட்டுக் காணப்படும். செயற்திறன் இழந்து காணப்படுவர். அதிகமாக 65 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் இந்த நோய் காணப்படுகின்றது. அல்சீமேர்ஸ் நோய்



ஏற்படுபவர்களில் ஏழு வீதமானவர்கள் பரம்பரையாக இந்த நோயின் வசப்படுகின்றார்கள். ஆனால் எவ்வாறு பரம்பரை காரணமாக அமைகின்றது என்ற விடயம் இன்னமும் ஆய்வுக்குட்பட்ட விடயமாகவே உள்ளது.


இப்பொழுது அல்சீமேர்ஸ் நோய் ஏற்படுவதற்கான காரணிகள் எவையெனக் கவனிப்போம். ஒழுங்கற்ற உணவுப் பழக்கம், நீரிழிவு நோய், கூடிய இரத்த அழுத்தம், கொலஸ்ரோல், ஸ்ரோக், உடல் பருமன், அழுத்தம், புகைத்தல், மூளைக்காயங்கள், கல்வியறிவின்மை, மூளைப் பயிற்சியின்மை, உடற் பயிற்சியின்மை, மன அழுத்தங்கள், வேறு நோய்களால் ஏற்படும் பாதிப்பு போன்ற பல காரணிகளை கூறிக் கொள்ளலாம். இந்த நோய் பற்றி முதலில் வைத்திய கலாநிதி அலொயிஸ் அல்சீமேர்ஸ் அவர்கள் 1906ம் ஆண்டு கண்டறிந்தார். இதனாலேயே இந்த நோய்க்கான பெயர் அல்சீமேர்ஸ் என்று வந்திருக்க வேண்டும். அடிப்படையில் இந்த நோய் மூளையில் ஏற்படும் படிவுகளால் ஏற்படுகின்றது. மேலும் மூளையின் கலன்கள் இறக்கும்போது மூளையில் சுருக்கம் ஏற்படுகின்றது. பின்பு படிப்படியாக மூளையின் பல பாகங்களைத் தாக்கும். இந்த நோயினால் ஏற்படும் அநேகமான பாதிப்புக்கள் மீளப் பெறமுடியாதவையாக இருந்தாலும் ஆய்வுகளின்படி சிகிச்சை உண்டெனக் கருதப்படு கின்றது. அமெரிக்காவில் 5 மில்லியன் மக்கள் அல்சீமேர்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் தேசிய அல்சீமேர்ஸ் சங்கத்தின் செய்தியில் 'உங்கள் மூளையின் ஆரோக்கியத்திற்காக பழக்க வழக்கங்களை மாற்றி ஈடுபாட்டுடன்



- அகணி -

authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# நினைவாற்றல்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

செயற்பட்டால் அல்சீமேர்ஸ் நோயில்லாத எதிர்காலத்தைக் காணலாம்' எனக் கூறப்படுகின்றது. எமது சமூகத்திலும் இந்த விடயத்தில் பல்வேறு செயற்பாடுகள் அவசியமா கின்றது.

இந்த நோயுடன் நெருங்கிய தொடர்புடைய மற்றுமொரு நோய் டிமென்ரியா (Dementia) ஆகும். இந்த நோயினால் மூளையின் திறமை, உணர்ச்சிகள், மனநிலை, பழக்கங்கள், உடற்திறமை ஆகியன பாதிப்புறும். இந்த நோயிற்கும் ஆரம்ப நிலையில் சிகிச்சை அளித்தால் நோயிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். ஒரு சிக்கல் என்னவென்றால் இதற்கான மருந்துகள் எல்லோருக்கும் பலன் கொடுப்பதில்லை. டிமேன்ரியா என்பது மூளை சம்பந்தமான நோய்களிற்குரிய அறிகுறிகளுக்கான பொதுச்சொல்லாகக் கருதப்படுகின்றது. டிமென்ரியா நோயாளிகளில் மூன்றில் இரண்டு பகுதியினர் அல்சீமேர்ஸ் நோயுள்ளவர் களாகின்றார்கள். இந்த நோய் 40 வயதில் கூட வந்திடலாம். இந்த நோய்க்கான அறிகுறி தென்பட்டால் அல்லது ஏற்கெனவே நோயாளிகளாகி விட்டால் கனடாவில் உள்ள அல்சீமேர்ஸ் சங்கத்துடன் தொடர்பு கொண்டு உதவி பெறலாம். உறவினர்களுக்கு வேண்டிய அறிவுரைகளையும் இந்தச் சங்கம் பல்வேறு வகையில் அளிக்கின்றது.

இவற்றை விட பார்க்கின்சன் போன்ற சில நோய்களும் நினைவாற்றலை பாதிப்பவை. நாம் முன்பு சுருக்கமாக ஆராய்ந்திருக்கின்றோம். நினைவாற்ற லில் பாதிப்பு ஏற்படுவது மிகவும் மோசமானது. அதிக எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம் என்று கூறிக் கொண்டு எமது ஆய்வை வேறு திசை நோக்கிச் செலுத்துவோம்.

கடந்த இதழில் நித்திரையின்மை எவ்வாறு நினைவாற்றலைப் பாதிக்கின்றது என்று ஆராய்ந்தோம். மேலும் நமக்கு ஏற்படும் அழுத்தம் நினைவாற்றலைப் பாதிப்பதாகக் கூறப்படுகின்றது. வைத்திய கலாநிதி லீவிஸ் தோமஸ் என்பவர் பூமியில் உள்ள பல்வகை உயிரினங்களில் மனிதராகிய நாம் கவலைப்படும் தன்மை கொண்டவர்கள் என்று கூறியுள்ளார். நமக்கு அழுத்தம் நல்லதையும், தீயதையும் செய்கின்றது. எல்லைக்குட்பட்ட அழுத்தம் புதிய கலன்கள் உருவாக உதவுகின்றன. மூளையில் உள்ள நியுரோன்களுக்கும் நியுரன் பின்னல்களுக்கும் இடையில் புதிய இணைப்புகள் ஏற்படுகின்றன. ஆரோக்கியமான உணர்ச்சிகள் மூலம் மூளைக்குகந்த இலேசான அழுத்தங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான இலேசான அழுத்தங்கள் நினைவாற்றலுக்கும் உதவுகின்றன. முக்கியமாக குறுகிய கால நினைவாற்றலைக் (Short Term Memory) கூட்டுகின்றது. அதிகமான அழுத்தம் கிப்போகம்பஸ்யினைப் பாதிக்கின்றது. அதனால் நினைவாற்ற லையும், கற்றல் திறனையும்



பாதிக்கின்றது. புதிய விடயங்களைக் கற்றல், புதிய தொழில், விளையாட்டு போன்றவை மூலம் அழுத்தங்கள் ஆரோக்கியமான அழுத்தங்களாகக் காணப்படும். அழுத்தம் ஒழுங்காகக் கையாளப்படும்போது பலத்தைக் கொடுப்பதாக "Stress builds Strength when it is properly handled" என ஒரு ஆங்கில முதுமொழி கூறுகின்றது. நமது நாளாந்த வாழ்வில் அழுத்தங்கள் ஏற்படுவது இயல்பு. இவற்றை நாம் எவ்வாறு சமாளிக்கின்றோம் என்பதிலேயே எமது வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது.

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினை- களைச் சவாலாக எடுத்துக்கொண்டு மன அழுத்தங்களால் பாதிப்புக்குள்ளாகாது வெற்றியை நோக்கி உழைக்க வேண்டும். மூளையின் ஆரோக்கியமும், நினைவாற்றல் வலுவும் அழுத்தங்கள் காரணமாக பாதிப்பிற்குள்ளாகாது இருக்கும் வகையில் மன உறுதியுடன் செயற்பட வேண்டும். நமது உடல் நலத்தில் கவனம் எடுத்தல், பொருத்தமான நோக்கங்களைத் தெரிவு செய்தல், போதியளவு ஓய்வு எடுத்தல், உடற் பயிற்சி, போதிய நித்திரை, விடுமுறையில் செல்லுதல், சமூக காரியங்களில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் நமது மன அழுத்தங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவும்.

ஒழுங்கான நித்திரையும், மன அழுத்தங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தலும் நினைவாற்றல் வலுவினைச் சீராக வைத்திருக்க அவசியமாகின்றன. மேலும் மூளையின் ஆரோக்கியத்திற்கும் இவை முக்கியமானவை. கடவுளால் தரப்பட்ட வாழ்வெனும் பெரும் வரத்தை நாம் வாழும் முறையினைப் பொறுத்தே மேன்மையுறச் செய்யலாம். திருவள்ளுவர் குறள் 661 வினைத் திட்டம் அதிகாரத்தில் 'வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்: மற்றைய எல்லாம் பிற' என்று கூறுகின்றார். 'தொழில் வலிமை என்பது ஒருவனுடைய மனத்தின் வலிமையே ஆகும். மற்றவை எல்லாம் மன வலிமைக்குப் பின்தான்' என்பதே இந்தக் குறளிற்கான பொருளாகும். மன வலிமையால் மன அழுத்தங்களால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

அன்பான வாசகர்களே! நினைவாற்றலை வலுப்படுத்தும் நோக்கில் பல பயனுள்ள தகவல்களை இன்றும் அறிந்து கொண்டோம். மேலும் பல தகவல்களுடன் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

தொடரும்.....

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks
SECOND CAREER

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்
Tuition Fees,Books,Living Expenses, Day care & Transportation அனைத்தும் இலவசம்
QUICK BOOKS,SIMPLY ACCOUNTING & ACCPAC
Classes By Experienced Instructors
இலவச ஆலோசனைகளுக்கு
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
(SHEPPARD & BRIMLEY) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# சகோதர...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

பல்வேறு உண்மைகள் புலனாகின்றன. எம்மையெல்லாம் சகோதரங்கள் உருவாக்கி வருகின்றார்களா? அல்லது நாமே உருவாக்கின்றோமா? என்பதும் தொடர் ஆய்வாக உள்ளது. பொதுவாக எந்த ஒரு கலையும் ஒருவரது ஆசையிலிருந்து தான் உருவாகின்றது. படவரை கலைகள், பாடகன், கட்டிடக்கலைகள் என்றவாறாக எவரை நோக்கினாலும் ஒரு தாயின்மூலம் உருவானவர்களே எனினும், ஒருவர் போல் மரபணுக்கள் கூட சிலவேளைகளில் மாற்றமுற முடியும். சகபாடிகள் (Peer Groufs) கூட சிலவேளைகளில் இடையில் அகன்று விடலாம். எனவேதான் பிறந்த நாள் முதல் சகோதரங்கள் தமக்குள் சில புரிந்துணர்வுகள் மூலம் உருவாகி வருகின்றனர்.

மேல் குறிப்பிட்ட பல்வேறு நவீன சிந்தனைகள், சமூக உளவியல் ஆய்வுகள், விஞ்ஞான ஆய்வுகள் அனைத்தும் ஒரு பொதுவான உண்மையை வெளியிட்டுள்ளன. எமது சகோதரங்கள் மட்டுமே நாம் அறிந்த உண்மையான பங்காளிகள் ஆவர். குடும்ப சமூகவியலில் இன்றும் ஆராயப்பட வேண்டிய அளவுக்கு அவர்களது முக்கியத்துவம் தொடர்கிறது. ஒவ்வொரு சகோதரமும் மற்ற



சகோதரத்தின் மீது வலிமையுள்ள செல்வாக்கு கொண்டுள்ளனர் என்பதிலிருந்து பிறக்கின்ற சிந்தனை என்பதில் மிகவும் நம்பிக்கையுள்ள ஆய்வுகளே இன்றுள்ள தேவையாகும்.

# மன இறுக்கம் மறைய ஆல்ஃபா தியானம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## *Healing Depression Through Alfa Meditation*

கடந்த இரண்டு தடவை விளம்பரம் இதழ்களில் மனிதருக்கு வரும் மன அழுத்தம் பரபரப்பு என்பன எதனால் வருகின்றன, அதற்கு யோகா பயிற்சிமூலம் எவ்வாறு தீர்வுகாணலாம் என்பதனைச் சுருக்கமாகப் பார்த்தோம். அந்த வகையில் இந்த மனஅழுத்தமானது (Stress) ஒருவரின் வாழ்வில் தொடர்ந்து பற்றிக்கொண்டிருந்தால் அது மன இறுக்கமாகவே (Depression) மாறிவிடுகிறது. இதன் காரணமாக வைத்தியர்களை நாடிச் செல்லும் போது சக்திவாய்ந்த இரசாயன மருந்துவகைகளைக் கொடுத்து அதனைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றனரே தவிர இதனை முற்றாக மாற்ற முடியாத நிலையில் தான் இன்றைய ஆங்கில மருத்துவ முறை இருக்கிறது. இந்த நோயாளிகளின் உடல்நிலை, மனத்தின் சமநிலை மிக ஆபத்தானது. சுருக்கமாகச் சொன்னால் தன்னையே அழித்துவிட வேண்டுமென்ற மன உணர்வுகளால் தள்ளப்படுவார்கள்.

### வேண்டாம் கவலை

மனஅமைதி, முகத்திலும், கருத்திலும் தெளிவு, எதையும் செய்துவிடலாம் என்ற நம்பிக்கை, உற்சாகம், ஆரோக்கியம், அச்சமின்மை, வெற்றி மகிழ்ச்சி இத்தனையையும் ஒரே சொல்லால் குறிக்க முடியுமா? முடியும். அதுதான் ஆல்ஃபா தியானம். இது ஒரு இலகுவான தியானப் பயிற்சிமுறை. ஆனால் இதன் பலன் மிக அதிகம். மூன்று வாரங்களில் முழுமையான



இலக்கினை அடையமுடியும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இதோ கீழ்வரும் வழிமுறைகளை நெறிப்படுத்தி பயிற்சி செய்தால் வெற்றி நிச்சயம், நினைத்ததை அடைய முடியும்.

### குறிப்பிட்ட இடம்

தூய்மையான காற்றோட்டமுள்ள தனி அறையாகவோ அல்லது திறந்த வெளியாகவோ இருக்கலாம். யாரும் வந்து தொந்தரவு செய்யாத சஞ்சலமற்ற இடமாக இருக்க வேண்டும். முடிந்தவரை இரகசியமானதாயும் நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்களென்று யாருக்கும் தெரியாமலும் இருக்க வேண்டும்.

**குறிப்பிட்ட நேரம்**

இந்த தியானத்திற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அது காலை, மாலை, இரவு எந்த நேரமாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதிகாலையிலோ, இரவு பதினொரு மணிக்கு மேலாகவோ இருந்தால் மிகவும் நல்லது. அது முடியாதுவிடின் எந்த நேரத்திலும் செய்யலாம். ஆனால் நேரத்தை தேர்தெடுத்துவிட்டால் தினமும் அதே நேரத்தில் தான் செய்ய வேண்டும். அப்போது தான் இனம்புரியாத ஆற்றல் நம்மை வந்தடையும். குறிப்பிட்ட இடமும் நேரமும் ஒன்றாக இருந்தால் மன ஒருமைப்பாடு அதிகரிக்கும் நிலை உருவாகும்.

### உடல் உடை இருக்கை

உடலை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். (குளித்தல் சிறந்தது) உடலில் எந்த இடத்தையும் இறுக்காத தளர்ச்சியான உடை அணிந்திருக்க வேண்டும். கால்களை, சம்மணம் போட்டு உட்கார்ந்தால் போதும். நிலத்தில் ஒரு



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

தொடர்ச்சி 29ஆம் பக்கம்


# உலக மகா இந்துக்கள் ஸ்தாபனத்தாரின் சேவைகள்

***www.mahahindu.org***

All kind of community, religious and cultural services are available in Tamil, Hindi, Punjabi and English in Scarbrough, Toronot, Brampton and Mississauga areas.

புதிதாகக்கனடாவுக்கு குடியேறியவர்களுக்கும் இருக்க இருப்பிட வசதியற்றவர்களுக்கும் வீட்டுவசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் இலவச அத்தியாவசிய உபகரணங்களும் வழங்கப்படும்.

Those who are having problem in getting social assistance, ODSP or any other benefits, are welcome to contact us for immediate service.

வேலை செய்யமுடியாதவர்களுக்கு ஆயுட்கால நிரந்தர உதவிப்பணம் பெற்றுக்கொடுப்பதுடன் அரசசார்பற்ற ஸ்தாபனங்களினால் கொடுக்கப்படும் உதவிகளும் எடுத்துக்கொடுக்கப்படும்.

Volunteers are needed in Ectobicoke and Scarbrough areas. Those who are working as full time volunteers will be eligible for various benefits.

வாகன சம்மந்தமான பிரச்சனைகள் நேருமிடத்து நீதிமன்றம் போகாமலே அவற்றில் இருந்து விடுவித்துக்கொள்வது சம்மந்தமான சட்ட ஆலோசகர்கள் ஒடுங்குசெய்து கொடுக்கப்படும்.

***We are with you in all your need and for all kind of services of our community***

தொடர்புகட்கு: ***Shakthi: 416 992 7882,*** *4 Vange Cre. Etobicoke, ON, M9V 3N7*

# ஸ்ரைறோபோம் (Styrofoam)

## மின்வலையில் வந்தவை - 22

இது பெரும்பாலான பொருட்களில் காணப்படுகிறது. மீன்பிடி கருவிகள், உணவு எடுத்துச் செல்லும் பெட்டிகள், கோப்பி குடிக்கும் குவளைகள், மூட்டை கட்டும் பொருட்கள், சாப்பாட்டுத் தட்டுகள் ஆகிய பலவும் ஸ்ரைறோபோமினால் செய்யப்படு கின்றன. இது பாதுகாப்பான பொருள் அல்ல. இது மனிதருக்கும் சூழலுக்கும் பாரதூரமான கெடுதல்களை உண்டாக்கும். இக்கெடுதல் களை அடையாளமறிவது எமது உலகைச் சிறப்பாக்குவதற்கான முதற்படியாகும்.

### தொழிற்பாடு

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஸ்ரைறோபோம் ஒரு மிதப்புக் கருவியாகப் பயன்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டது. இந்தச் செயற்கைப் பொருள் செய்வதற்கு மலிவாகவும், சிறப்பாக மிதக்கக்கூடியதாக வும் இருந்தது. இதை உபயோகித்து வள்ளங்களும் பாரங்குறைவான மிதக்குங் கருவிகளும் செய்யப்பட்டன. யுத்தத்தின் பின்னர் இதைப் பொதுவான பொருட்களான குவளைகள், தட்டுகள், ஐஸ் பெட்டிகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தினர். பொதிகள் கட்டுவதற்கும், வெப்பங்கடத்தாப் பொருளாகவும் பயன்படுகிறது. இன்னும் இது மிதப்புப் பொருளாகவும், உயிர் காப்பு மேலங்கிகள், மிதக்கும் கருவிகள் செய்வதற்கும் உபயோகிக்கப்படுகிறது.

**- துறையூரான் -**

### இயல்புகள்

இது பொலிஸ்ரைறீன் எனும் ஒருவகை பிளாஸ்ரிக் பொருளைக் குறிக்கப்பட்ட வெப்ப நிலைக்குச் சூடாக்குவதால் தயாரிக்கப்படுகிறது. இத்துடன் பிற இரசாயனப் பொருள்களுஞ் சேர்க்கப்பட்டு இதற்கே இயல்பாக நுரை போன்ற தூள் தன்மை பெறப்படுகின்றது. இதனால்தான் இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. பிற பிளாஸ்ரிக்குகள் போன்று பொலிஸ்ரைறீனும் மசகு எண்ணெய்யிலிருந்து தயாரிக்கப்படு கிறது. இதைக் குறிப்பிட்ட வெப்ப நிலைக்குச் சூடாக்கிக் குளிரப்பண்ணியதும் இவ்வாறு நுரை போன்று உப்பி விடும். பின்னர் இந்த வடிவில் நிலைத்திருக்கப் பல இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

### அபாயங்கள்

ஸ்ரைறோபோம் பாவனையால் பல தீங்குகள் விளைகின்றன. முக்கிய தீங்கு எமது பூமிக்கு ஏற்படுகிறது. இது மிகவும் குறைவான சிதையுந் தன்மையைக் கொண்ட பொருளாகும். இது குப்பைக் கிடங்குகளில் நூறு வருடங்களாகச் சிதைவடையாமல் நிலைத்திருந்து இரசாயனப் பொருள்களைப் பூமிக்குள் அனுப்பும். மேலும் இதை சூடாக்கும்போது வெளிவரும் இரசாயனப் பொருள்கள் உடல் நலத்துக்குக் கேடுகளை விளைவிக்கும். இதனால் நரம்புகள் தாக்கமடைவதுடன் புற்று நோயும் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. மேலும் இரசாயனப் பொருள்கள் காற்றோடு கலந்து சூழலை மாசுபடுத்துகின்றது.

### முன்னெச்சரிக்கை

ஸ்ரைறோபோம் தனி மனிதருக்கும் சூழலுக்கும் ஆபத்துக்களை விளைவிக்கும். எனவே இதன் பாவனையை நிறுத்தாமல் விட்டால் பூமிச் சூழலின் சமநிலை



மீளப்பெறுவது கடினமாக இருக்கும். தொடர்ச்சியாக நாம் இதனால் செய்யப்பட்ட பொருட்களைப் பாவிப்பதால் எமக்கும் விலங்குகளுக்கும் உடல் நலப் பிரச்சினைகள் ஏற்படும். மேலும் இதிலிருந்து வெளிவரும் இரசாயனப் பொருள்கள் காற்றோடு கலந்து எமக்குச் சுவாச வழிகளை அடைத்துப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

### ஆய்வாளர் கருத்துக்கள்

இதனால் ஏற்படும் தீங்குகளைத் தடுப்பதற்குச் சிறந்தவழி இதைப் பாவிப்பதை முற்றாக நிறுத்துவதே ஆகும். இதன் பாவனையை நிறுத்திவிட்டு இதற்குப் பதிலாக வேறு பொருட்களைப் பாவிக்கலாம். உதாரணம் குவளைகளைப் பாவிக்கலாம். சில மீளவாக்க நிலையங்கள் (Recycling Centre) ஸ்ரைறோபோமை மூலப் பொருள்களாகப் பிரிக்கும் ஒரு முறையைக் கண்டறிந்துள்ளனர். எனினும் இந்நிலையங்கள் அரிதாகவே உள்ளன. இவ்வாறான நிலையங்களைச் சமுதாயம் ஊக்குவிக்குமானால் இதனைக் கூடுதலாக மீளவாக்கஞ் செய்து ஸ்ரைறோபோம் தீங்குகளை குறைக்கலாம்.

### ஸ்ரைறோபோம் குவளையை மைக்குறோவேவ் அடுப்பினுள் வைப்பதால் ஏற்படும் அபாயங்கள்

ஸ்ரைறோபோம் கொள்கலன்கள் அல்லது பிளாஸ்ரி பொருட்களை மைக்குறோவேவ் அடுப்புக்குள் வைப்பதால் இராசாயனப் பொருட்கள் உணவில் சேரும் அபாயம் உளது. பிளாஸ்ரிசைசேர்ஸ் எனப்படும் இவ் இராசாயனப் பொருள்கள் நாம் பாவிக்கும் எல்லாப் பிளாஸ்ரிக் கொள்கலன்களிலும் உள்ளன.

இப்பொருள்களை மைக்குறோவேவுக்குள் வைத்தால் அவை உருகி, எரி காயங்களை உங்களுக்கு ஏற்படுத்தும் அபாயமுள்ளது. இத்துடன் இதற்குள் வைக்கப்பட்ட உணவில் அல்லது குடிபானத்தில் நச்சுப் பொருட்கள் கலக்கும் அபாயமுண்டு. சில ஸ்ரைறோபோம் கொள்கலன் மைக்குறோ வேவில் வைத்துச் சூடாக்கலாம். இது அடிப்பாகத்தில் எழுதப்பட்டிருக்கும். பெரும் பாலும் நூடில்ஸ் உள்ள கொள்கலன்கள் இவ்வாறிருக்க எழுதியிருக்காவிடில் வேறொரு பாத்திரத்துக்கு மாற்றிச் சூடாக்குவது நல்லது.

ஸ்ரைறோபோம் தட்டுகளிலும் உணவு சூடாக்குவது கூடாது. மேலும் அதிக கொழுப்புள்ள உணவுகள் கூடுதலான கெடுதலை உண்டாக்கும். ஸ்ரைறோபோம் தட்டுக்கு மேல் ஒரு காகிதத் தாளை வைத்தாலும் நச்சுப்பொருள் உணவை சென்றடையும். தட்டு உருகாமல் இருப்பதற்குக் குறைந்த வெப்பத்தில்



சூடாக்கினால் பற்றீரியாக்கள் கொல்லப்படா மல் உணவு நஞ்சாகும் வாய்ப்புண்டு. அமெரிக்கச் சுகாதார திணைக்களத்தின் படி ஸ்ரைறீன் நச்சுப் பொருள் மத்திய நரம்புத் தொகுதியைத் தாக்கி களைப்பு, தலைவலி, குழப்பம், தலைச்சுற்று, கவனக்குறைவு, வெறித்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும்.

ஸ்ரைறோபோமிலுள்ள இன்னுமொரு இராசாயனம் பென்சீன். இதை பெருமளவு உட்கொண்டால் வாந்தி, தலைச்சுற்று, வலிப்பு, தூக்கம், அசாதாரண இதயத்துடிப்பும் ஆகக் கூடினால் இறப்பும் நேரலாம். பென்சீன் சலவைப் பொருட்கள் பூச்சி கொல்லிகள், உராய்வு நீக்கிகள், இறப்பர், பிளாஸ்ரிக், நைலோன், செயற்கை நார்கள், மருந்துப் பொருள்கள் யாவற்றையும் செய்வதற்குப் பயன்படுகிறது. இது இயற்கையாக பெற்றோல், சிகரெட்புகை, மசகு எண்ணெய் ஆகியவற்றிலுள்ளது.

ஸ்ரைறோபோம் ஆரம்பத்தில் கப்பலில் அனுப்பும் பொதிகளிலும் கட்டிடத் தொழிலிலும் பயன்படுத்தப்பட்டது. பின் படிப்படியாக உணவு உலகிலும் புகுந்து விட்டது. குளிர் பானங்கள், சூடான பானங்கள் குடிக்கும் குவளைகளாக, சாப்பாட்டுத் தட்டுகளாக, உணவு எடுத்துச் செல்லும் கொள்கலன்களாக, பழங்கள், மரகறிகள் அடைக்கும் பெட்டிகளாக இப்போது பெருமளவில் பாவிக்கப்படுகிறது.

ஸ்ரைறீன் புற்றுநோய்க்கு காரணமாக-லாமென அமெரிக்காவின் சூழல் பாதுகாப்பு நிலையம் கூறுகிறது. தொடர்ச்சியான பாவனையால் தோல், நுரையீரல், கண் எரிச்சல் அல்லது கூடுதல் அளவுகளில் மனத்தளர்வு, தலைவலி கடுமையான தளர்வு ஆகியன ஏற்படலாம்.

### சூழல் தாக்கம்

ஸ்ரைறோபோம் இலேசில் சிதைவடையாது. கழிவிடங்களில் எறியப்பட்டவை பல ஆண்டுகளுக்குப் பின்னும் சிதையாமல் இருந்து நச்சுப் பொருள்களை நிலத்துள் வெளிவிடும். இதை மீளவாக்கஞ் செய்வதால் அதிக பொருளீட்ட முடியாது. மேலும் இது ஐதரோ காபன்களைக் காற்றில் வெளிவிட்டு எமது ஓசோன் படையைத் தாக்கக் கூடும். மேலும் ஸ்ரைறோபோமை உற்பத்தியாக்கும் போதும் ஐதரோக் காபன்கள் வெளிவிடப்படுகின்றன. இதுவும் ஓசோன் படையைத் தாக்கும்.

ஆரம்பத்தில் ஸ்ரைறோபோம் ஒரு சிறந்த கண்டு பிடிப்பாகக் கருதப்பட்டு எல்லோராலும் பாராட்டப்பட்டது. இதைக் கண்டுபிடித்தது டௌ ஜோன்ஸ் என்ற நிறுவனம். இதன் கேடுகள் தற்போது தான் பெருமளவில் தெரியவருகின்றன. இவ்வாறே டி.டி.ரி என்ற கிருமி நாசினியும் நுளம்பு கொல்லும் சிறந்த மருந்தாகக் கருதப்பட்டுப் பெருமளவில் பாவிக்கப்பட்டது. ஆனால் காலக்கிரமத்தில் அது தாவரங்களையும், பயிர்களையும் அழித்து விடுகிறது என அறியப்பட்டுத் தற்போது நிறுத்தப்பட்டு விட்டது. இவ்வாறு பல இராசாயனப் பொருள்கள் மறைமுகமாக மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கின்றன.

# தமிழரின் பாரம்பரியக் கலைகள் கனடா நாட்டில் கொடி கட்டிப் பறக்கின்றன!

## மிருதங்க அரங்கேற்றம் - அரவிந் குகேந்திரன்




எமது கலைகளை எட்டுத்திக்கும் பரவச் செய்வோம் என்ற பாரதியின் கனவு நனவா-வதைப் பார்க்க ஆனந்தமாய் இருக்கிறது. எமது கலைகளைத் தெய்வீகக் கலைகள் என நாம் போற்றிப் புகழ்கிறோம். வேறெந்தக் கலைக்குமில்லாத சிறப்பு எமது கவின் கலைகளுக்குண்டு. கலைகளோடு பக்தி, அமைதி, பரவசம், பண்பு யாவும் பின்னிப் பிணைந்துள்ளன. ஏதாவதொரு கலை பயிலும் பிள்ளை ஒழுக்கம், அடக்கம், அறிவு பெறும் ஆற்றல் யாவும் ஒருங்கமைந்த ஒரு நல்ல குடுமகனாக வளரும் வாய்ப்பு அதிகமுண்டு. அப்பிள்ளை வாழ்க்கையில் சகல சம்பத்தும் பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கு பயனுள்ள ஒரு பிரஜையாகப் பரிணமிக்கும் என்பதில் ஐயமில்லை. இக்கலைகள் எமது பண்பையும் தொன்மையான பாரம்பரியத்தை யும் உலகுக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடிகளாக மிளிர்கின்றன. தமிழர்கள் எங்கு வாழ்நதாலும் எந்நிலையில் வாழ்ந்தாலும் எமது சமயத்தையும், கவின் கலைகளையும் கட்டிக் காப்பதில் பின்நிற்பதில்லை. இதற்குத் தக்க சான்றாக ரொறொன்ரோவிலுள்ள ஆலயங்களும் கலை பயிற்றுவிக்கும் பள்ளிகளும் விளங்குகின்றன.

கோடை காலத்தில் ரொறொன்ரோ மாநகரம் ஒரு கோலகலமான கொண்டாட்ட நகரமாக மாறிவிடும். கோவில் கும்பாபிஷேகங்கள், ஆண்டுத் திருவிழாக்கள், ஊர்ப் பாட-சாலைகள், சங்கங்கள் என்பவற்றின் ஒன்று கூடல்கள், சுற்றுலாக்கள் என ஒரே ஆரவாரமாக இருக்கும். இத்தோடு கலை விழாக்களும் அரங்கேற்றங்களும் அநேகம் இடம்பெறும். இதனால் சிலவார இறுதி நாட்களில் ஒரே நாளில் மூன்று நான்கு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இதனால் பலருக்கு எதற்குப் போவது என்று தீர்மானிக்க முடியாமல் இருக்கின்றது. இதைவிட திருமணங்கள், ருதுசாந்தி வைபவங்கள், திருமணப் பதிவுகள் என ஒரே கொண்டாட்டம் நிறைந்த நாட்களைக் கொண்டு கோடைகாலம் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும். குளிர்காலம் ஆரம்பித்த தும் சில விலங்குகள், நிலத்திலுள்ள புற்றுகளுள் புகுந்து விடுவது போல் மக்கள் வீட்டுக்குள் அடங்கி விடுவர்.

சென்ற சனிக்கிழமை 24ஆம் திகதி, ஸ்காபரோவிலுள்ள சீனக் கலாசார மண்டபம் களைகட்டியிருந்தது. ஏறக்குறைய எண்ணூறு பேர் கொள்ளக்கூடிய அரங்கம். அன்றுதான் ஓர் இளைஞரின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற்றது. குருவும் ஓர் இளைஞர், பக்கவாத்தியங்கக்காரர்களும் இளைஞர்கள். இவர்கள் யாவரும் கனடாவில் பிறந்து வளர்ந்து கலைகள் பயின்று, எமது பாரம்பரியத்தைப் பறைசாற்றும் பண்பாளர்கள். இதில் கூடிய பங்கு கொண்டுழைத்த இவரது பெற்றோரை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. வாழ்க்கையில் ஒருவரின் பொன்னாள் அவரது திருமணநாள் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் அதற்கு முன் நிகழும் ஓர் அரங்கேற்றம் அவரது பொன்னாளாக வும், மைல்கல்லாகவும், பெரிய விழாவாக

**- துறையூரான் -**

வும் கொண்டாடப்படும் வழக்கம் தமிழ் நாட்டையும் விஞ்சி விட்டது எனக் கூறினால் மிகையல்ல. அன்றைய விழா ஒரு திருமணவிழாப் போன்று ஏராளமான பொருட் செலவில் அமைந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாகும்.

அன்றைய அரங்கேற்றம் ஒரு புதுமை யானது. காரணம் வழக்கமாக ஒரு மிருதங்க அரங்கேற்றத்துக்கு ஒருவர் பாடுவார். பக்கவாத்தியங்களுள் முக்கியமானதாக மிருதங்கம் வாசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆனால் அன்று பாடகருக்குப்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

## A Time for Drunken Horses (Iran)



எல்லைகள் பல. ஒவ்வொரு தடவையும் அமெரிக்க எல்லையைக் கடக்கும் போது ஒரு புதிய நாட்டுக்குள் செல்கின்றோம் என்ற உணர்வே ஏற்பட்டதில்லை. ஆனாலும் குடிவரவு அதிகாரிகளால் பல அனுபவங்கள் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க எல்லையை கடந்தவுடன் எம்மில் பலர் தேடுவது ரிம் கோட்டனாவிருக்கும். பல கதைகள் எழுதும் அளவிற்கு வித்தியாசமான அனுபங்களும் உண்டு. கடலைக் கடந்து சில நாடுகளுக்கு சென்ற அனுபவங்களும் உண்டு. முன்னர் தலைமன்னாரில் இருந்து ராமேஸ்வரத்திற்கு பலர் கப்பலில் செல்வதுண்டு. பிரான்சிலிருந்து கடலைக் கடந்து இங்கிலாந்திற்கு சென்றதுமுண்டு. இவை அனைத்தும் வித்தியாசமான அனுபவங்களை ஏற்படுத்தியுள்ளன. பலர் மெக்சிக்கோ - அமெரிக்க எல்லை, இந்தியா - நேபாள எல்லை, ஐரோப்பிய நாட்டு எல்லைகள் என பல எல்லைகளை கடந்துள்ளனர். இந்திய - நேபாள எல்லையை சைக்கிள் ரிக்சாவில் கடக்கலாம்.

இந்த எல்லைகளில் நடைபெறும் சம்பவங்களை மையமாக வைத்து பல படங்கள் வெளிவந்துள்ளன. காஸ்மீர்-பாகிஸ்தானிய எல்லையில் படமாக்கப்பட்டுள்ள பல படங்கள் வெளிவந்துள்ளன. Little Terrorist. Road to Ladakh போன்ற படங்கள் இவ்வெல்லையில் படமாக்கப்பட்டவை. பிரேசில் - உருகுவே எல்லையருகே உள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்ற ஒரு படம் Popes Toilet. பல விமர்சகராலும் பாராட்டுப் பெற்ற படம். போப் அந்த கிராமத்திற்கு வந்தும் அக்கிராம மக்களுக்கு விடிவு ஏற்படவில்லை. அதேபோன்று ஈரான்-ஈராக் எல்லையில் உள்ள குர்டீஸ் மக்களை மையமாகக் கொண்டதே A Time for Drunken Horses.

உலகிலேயே அங்கீகரிக்கப்படாமலும் பல துயரங்களைச் சந்திக்கும் ஒரே இனம் குர்டீஸ் இனம். கடும் குளிர் வறுமை. உருகுவே பிரேசில் எல்லை கிராம மக்களைப் போன்று இக்கிராம மக்களும் கடத்தலை தொழிலாகக் கொண்டுள்ளார்கள். உருகுவேயில் சைக்கிளில் கடத்துவார்கள். இங்கு குதிரையில். பனிகள்கள் குவிந்த மலை மீது குதிரையில் பொருட்களை வைத்து கடத்திவருவார்கள். இதனை செய்பவர்கள் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள். இன்று உலகம் முழுவதும் சிறுவர்கள் வேலைக்குச் செல்வதை எதிர்த்து பிராச்சாரம் செய்கின்றார்கள். அவர்கள் வேலைக்குச் செல்வதற்கு மாற்றீடாக எந்த ஒரு சமூக மாற்றத்தையும் கொண்டுவராது வெறும் மனித உரிமைக் கோசமாகவே இவர்கள் இதனைச் செய்கின்றார்கள். இக்கிராமத்தில் தாய் தந்தையற்ற ஐந்து சகோதரங்களைக் கொண்ட குடும்பத்தில்



**வானரன்**

இரண்டாவது ஆண் குழந்தை அயூப். இவனது சிறு சகோதரி மற்ற பிள்ளைகளுக்கு தாய் போன்றுள்ளாள். அயூப்பின் அண்ணன் மாடி ஒரு விசேட குழந்தை. அயூப்பிற்கு கடத்தலை விட்டால் வேறு தொழில் தெரியாது. தந்தையும் இந்தக் கடத்தல் தொழிலேயே கண்ணி வெடிக்குள் சிக்கி உயிரிழந்தார். இவர்கள் கடந்து செல்லும் எல்லை முன்னர் போரினால் பாதிக்கப்பட்ட பகுதி. கண்ணி வெடிகள் அதிகம் உள்ள பகுதி. எல்லை அதிகாரிகள் கடுமையானவர்கள். அப்பியாசப் புத்தகங்களையே இக்கிராமத்திற்கு கடத்திச் செல்ல அனுமதிக்க மாட்டார்கள்.

குதிரைகள் இப்பிரதேசத்தில் பயணப்பட

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

# திரைவிமர்சனம் - எங்கேயும் எப்போதும்

படம் தொடங்கியதும்... 'டமார்' என்ற பயங்கர சத்தத்துடன் ஒரு மோசமான விபத்து. சென்னையிலிருந்து திருச்சிக்கு ஒரு தனியார் பேருந்தும் எதிர்மார்க்கத்தில் திருச்சியிலிருந்து சென்னைக்கு அரசுப் பேருந்தும் விழுப்புரம் அருகே நேருக்கு நேர் மோதிக்கொள்கின்றன. திருச்சியிலிருந்து சென்னைக்கு வரும் பேருந்தில் பயணிக்கும் ஜெய், அஞ்சலி, சர்வா, சென்னையிலிருந்து திருச்சிக்கு பயணிக்கும் அனன்யா ஆகியோர் இந்த விபத்தில் பாதிப்புக்குள்ளாகிறார்கள். இவர்கள் யார்? இந்த விபத்து இவர்கள் வாழ்க்கையில் நிகழ்த்தும் தலைகீழ் மாற்றங்கள் என்ன? என்பதுதான் கதை. இவர்கள் நால்வர் தவிர இந்த விபத்தில் பாதிப்புக்குள்ளாகும் மற்றவர்களையும் சேர்த்து பயணிகளின் வாழ்வில் பயணத்துக்கு முன்னும் பின்னும் நடக்கும் சம்பவங்கள், பயணத்தின் போது நடப்பவை என படு சுவராஸ்யமாக நகர்கிறது படம்.

முதலில் திருச்சியிலிருந்து சென்னை செல்லும் பேருந்தில் பயணிப்பவர்கள்... ஜெய், கதிரேசன் என்னும் இளம் தொழிலாளியாக வருகிறார். திருச்சியில் வசிக்கிறார். தூரத்து மொட்டை மாடி பெண்ணை சரி செய்ய ஆறு மாசமாய் முயற்சிக்கிறார். அவள் என்ன நிறத்தில் துணி உடுத்துகிறாளோ, அதே நிறத்தில் சட்டைப் போட்டுக்கொண்டு அலைகிறார்.





அஞ்சலி, யதார்த்தத்தை பட் பட் என போட்டுடைக்கும் நர்ஸ் மணிமேகலையாக வருகிறார். ஜெய் சரி செய்ய முயற்சிக்கும் தூரத்து மொட்டை மாடி பெண் இவர்தான். திடுதிப்பென ஒரு நாள் ஜெய் வீட்டிற்குள் நுழைந்து, எல்லாவற்றையும் கலைத்துப் போட்டு பார்க்கிறார். இதைப் பார்த்து அதிர்ச்சியடையும் ஜெய், "யார் நீ, எதற்காக இதையெல்லாம் செஞ்சிக்கிட்டிருக்க" என்று கேட்டதும், "அங்... தெனம் மொட்டைமாடியில நின்னு கையாட்டும் போது தெரியலையாக்கும், இப்ப யார்னு கேட்குற?" என்று சீறுகிறார். ஜெய், "அவங்களுக்கு நீட்டு தலை முடியிருக்கும்" என்றதும், பின்பக்கம் திரும்பி தன் நீட்டு தலை முடியைக் காட்டுகிறார். ஜெய்யை இவர், "சாயங்காலம் அங்க வா... இங்க வா..."ன்னு அலைய வைத்து சோதிக்கும் ஒவ்வொரு காட்சியும் ரசிக்கும்படி இருக்கின்றன. "ஏன் அலைய வைத்தேன்?" என்பதற்கு அஞ்சலி சொல்லும் விளக்கம் இன்னும் ரசனையானது. அஞ்சலி நடிப்பு அருமை. ஜெய்யை இம்சிக்கும் போது அஞ்சலி கண்களின் ஓரத்தில் தெரியும் குறும்பும், ஜெய்யை 'என் காதலன்' என்று அறிமுகப்படுத்தும் போது முகத்தில் தெரியும் பெருமிதமும், பிரச்சினைகளில் முடிவெடுக்கிற தீர்க்கமும் வேகமும் என மனபலமும் உறுதியும் கொண்ட ஆளுமையான பெண் பாத்திரத்திற்கு மிகக் கச்சிதமாக பொருந்துகிறார் அஞ்சலி. அப்பாவியாக ஜெய் தூள் கிளப்பினால், அடாவடியாக அஞ்சலி அசத்துகிறார். அஞ்சலி, ஜெய்யை ரொம்பவே இம்சிக்கிறார். ஆனாலும், ஆனந்த இம்சை. படம் முழுவதும் அஞ்சலியை ஜெய், "நீங்க", "வாங்க" என்று மரியாதையுடன் அழைப்பதும் அஞ்சலி ஜெய்யை "வா", "போ" என ஏகவசனத்தில் அழைப்பதும் அழகாகவே உள்ளது.

சர்வா, சா..ப்ட்வேர் இஞ்சினீயர் கௌதமாக வருகிறார். தமிழில் இது இவருக்கு இரண்டாவது படம்.

சென்னையிலிருந்து திருச்சிக்கு பயணிப்பவர்... அனன்யா. கிராமத்துப் பெண் அமுதாவாக வருகிறார், அனன்யா. நேர்முகத் தேர்வுக்காக திருச்சியில் இருந்து சென்னைக்குப் புதிதாக வருகிறார். அவர் செல்ல வேண்டிய அக்கா வீடு பூட்டியிருக்கிறது. இவர் வருவது தெரியாமல் அவர் வெளியூருக்கு சென்றுவிட்டிருக்கிறார். என்ன செய்வது என்று திகைத்து நிற்கும் அனன்யாவுக்கு வழியில் அறிமுகமாகும் சர்வா உதவுகிறார். சர்வா மீது முதலில் சந்தேகமும் பின்பு வழக்கம்போல் காதலும் கொள்கிறார், அனன்யா. சர்வா, சிகரெட்டுக்கு சில்லரையில்லாமல் அனன்யாவிடம் சில்லரை வாங்குவது அக்கா வீடு வந்ததும் பசங்களுக்கு சாக்லெட் வாங்குகையில் சர்வாவுக்கும் சேர்த்து அனன்யா சிகரெட் வாங்குவது என பேருந்து நிலையத்தில் ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாய் அனன்யாவும் சர்வாவும் நெருங்கும் சம்பவங்கள் மனதை வசீகரிப்பவை.

**பிலிம்நியூஸ் கிருஸ்ணன்**

மற்ற பயணிகள்! அனன்யா - சர்வா, ஜெய் - அஞ்சலி ஜோடிகளின் காதல் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் குட்டிக் குட்டிச் சிறுகதைகள் என்றால், மற்ற பயணிகள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் ஒவ்வொன்றும் குட்டிக் குட்டிக் கவிதைகள். இந்த பேருந்து பயணத்தில்தான் முதன்முதலாக அறிமுகமாகும் ஒரு கல்லூரி மாணவன் - மாணவிக்கிடையே ஏற்படும் ஈர்ப்பு, பயணம் முடியும்போது பிரிய மனமின்றி இருவரும் கைபேசி எண் மாற்றிக்கொள்ளும் காட்சி, புது மனைவியை பிரிய முடியாமல் பேருந்து ஏற்ற வரும் கணவன், குட்டிப் பெண், சமையல்கார பயணி, ஜெய்யின் ஊர்க்கார பெரியவர், ஐந்து வருடங்களுக்குப் பிறகு வெளிநாட்டில் இருந்து திரும்புபவர், தனக்கு பிறந்த குழந்தையை முதன்முதலாகப் பார்க்கப்போகும் அவரது ஆவல், அவரது ரிங்டோன், அனன்யாவின் அக்கா, நடுவில் பேருந்து ஏறும் முஸ்லிம் பெண்மணி என்று ஒவ்வொருவரும் மிக இயல்பான பாத்திரங்களாய் வருகிறார்கள்.

அஞ்சலி - ஜெய், அனன்யா - சர்வா இரண்டு ஜோடிகளுக்குள்ளும் நிகழும், இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருக்கலாமே என்பது போன்ற அழகான காதல்கள். சின்னச் சின்ன சுவாரசியங்களோடு கூடிய மற்ற பாத்திரங்கள்... எல்லாவற்றையும் ரசித்துக் கொண்டிக்கும் போதே இவர்கள் எல்லோரும் விபத்துக்குள்ளாகப் போகிறார்களே என்னும் பதபதைப்பும் சேர்ந்தே முழுப் படமும் நகர்கிறது.

படத்தின் முக்கியமான தூண் ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் தான். திருச்சியை இதுவரை படங்களில் வராத கோணங்களில் படமாக்கியுள்ளார். பேருந்துக்குள்ளேயும் சரி, பேருந்துகள் ஒன்றையொன்று முந்தும் போதும் சரி, கடைசியில் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி நசுங்கும் காட்சியிலும் சரி அவ்வளவு துல்லியம்.

அடுத்த தூண், இசையமைப்பாளர் சத்யா. 'யூ டிசர்வ் திஸ்', 'சொட்டச் சொட்ட நினைந்துவிட்டாய்' பாடல்களில் சின்மயி மயக்குகிறார். 'உன் பேரே தெரியாது', 'சொட்ட சொட்ட நினைந்துவிட்டாய்' பாடல்களில் நா.முத்துகுமாரின் வரிகள் கவித்துவமானவை.

இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் தயாரித்துள்ளார். புதுமுக இயக்குநர் சரவணன் இயக்கியிருக்கிறார். இந்தப் படத்தின் வெற்றிக்கான எல்லா வாழ்த்துகளும் போய் சேர வேண்டிய நபர் இவர்தான். 'ஒரு விபத்து, சில விநாடிகளிலேயே பலரின் கனவுகளை சிதைத்து விடுகிறது. அவர்கள் வாழ்க்கை வரலாற்றில் சில பக்கங்களை கண்ணீரால் எழுதிவிடுகிறது. வாழ்வெங்கும் ஆறாத ரணங்களை ஏற்படுத்தி விடுகிறது. அடுத்தவர்கள் விபத்தில் பாதிக்கப்படும் போது அது நமக்கு செய்தி மட்டும்தான். நமக்கு ஏற்படும் போதோ அது ஒரு ஆறாத வலி. ஆகவே, நம்மளவில் விபத்துக்கான காரணமாக நாம் இல்லாமல் இருக்க முயல்வோம்' என்பதுதான் இந்தப் படத்தின் இயக்குனர் சொல்ல விரும்பியிருக்கும் செய்தி. கொஞ்சம் அசந்திருந்தாலும் ஆவணப்படம் போல் ஆகிவிட்டிருக்கக் கூடிய படத்தை, அட்டகாசமான திரைக்கதையாக மாற்றியிருக்கிறார், சரவணன். ஜெய் பாத்திரத்துக்கு ஒரு சண்டை காட்சி வாய்ப்பு இருந்து, அதை காட்டாமல் தவிர்த்து, வேறொரு காட்சியில் அதை காட்டியது புத்திசாலித்தனம்.

எங்கேயும் எப்போதும் - பார்க்கலாம்!

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan 416-803-5296
எஸ்.கே.தீசன்
sktheesan@gmail.com

TRIDEL®
BUILT FOR LIFE

# ALTO NEW CONDO.

## HWY 404 / SHEPPARD / VICTORIA PARK

Special VIP package







## TRIDEL நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

## HomeLife / GTA Realty Inc.
Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

## சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

**இன்றே தொடர்பு கொள்ளுங்கள்: 416.321.6969**

*Independently Owned & Operated

# தீர்க்க சுமங்கலி - இசைநாடகம்

முத்தமிழ் கலை மன்றம் வழங்கிய முத்தமிழ் கலைவிழா, செப்ரெம்பர் 17, 2011 இல் ரொறொன்ரோவில் உள்ள Cardinal Newmon கத்தோலிக்க உயர்தரப்பாடசாலையில் நடைபெற்றது. இதில் முக்கிய அம்சமாக தீர்க்க சுமங்கலி எனப்படும் சத்தியவான் சாவித்திரி புராண இசைநாடகம் நடைபெற்றது. இந்த 2½ மணித்தியால புராண இசைநாடகத்தை மரபுக்கலைவேந்தன் பொன். அருந்தவநாதன் தயாரித்து நெறியாள்கை செய்திருந்தார்.





நிகழ்ச்சிகள் மங்கள விளக்கேற்றலுடன் அமரர் பேராசிரியர் கா.சிவத்தம்பி ஞாபகர்த்த அரங்கில் மாலை 6.45 மணியளவில் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து அகவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம் என்பன நடைபெற்றன. இவற்றை தொடர்ந்து செல்வி ஓவியா சந்திரபோஸ் தமிழ்மறை ஓதினார். இவ்விழாவின் நிகழ்ச்சிகளை லிங்கம் நடராஜாவும், சிந்து அருந்தவநாதனும் தொகுத்து வழங்கினர். இவ்விழாவிற்கு பேராசிரியர் இ. பாலசுந்தரம் தலைமை வகித்தார். பேராசிரியர் கா. சிவத்தம்பியின் உறவினரான வாசுகி நவகுலராஜா, அமரர் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் படத்திற்கு மாலை இட்டதை தொடர்ந்து பேராசிரியர் இ. பாலசுந்தரம் தனது தலைமை உரையை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் இலங்கையில் யாழ். பல்கலைகழகத்தில் தன்னிடம் கல்வி பயின்ற அருந்தவநாதன், இரமணீகரன் போன்றவர்கள் அங்கு பயிற்சி பெற்று, இலங்கையில் பல பாகங்களிலும் மேடையேற்றிய காத்தவராயன், சத்தியவான் சாவித்திரி மற்றும் வள்ளி திருமணம் போன்ற புராண இசை நாடகங்களை கனடாவிலும் தொடர்ந்து நடத்தி எமது அடுத்த தலைமுறையை ஊக்குவிப்பதையிட்டு பெருமைப்படுவதாக கூறினார். காத்தவராயன் கூத்து இலங்கையில் பல இடங்களில் 49 தரம் மேடை ஏறியதாகவும் பின்னர் ரூபவாகினியில் பணியாற்றிய பி. விக்கினேஸ்வரன் அதனை ஒளிப்பதிவு செய்து ரூபவாகினியில் ஒளிபரப்பி வந்ததாகவும் கூறினார். இதற்காக ரூபவாகினி வழங்கிய 40 ஆயிரம் ரூபாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புலமைப் பரிசில் வழங்க தாங்கள் முதலிட்டதாகவும் நினைவு கூர்ந்தார்.



தலைமை உரையை தொடர்ந்து சண்முகம் குகதாசன், தனா மாணிக்கவாசகர் மற்றும் மருதப்பன் வல்லிக்கண்ணன் வாழ்த்துரை வழங்கினார்கள். அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் அடுத்து சிறப்புரை வழங்கினார். அவர் சிறப்புரையில் முற்காலத்தில் மேடைகளில் பேசுவதைக் கேட்பதற்கு ஒலிபெருக்கி இருக்கவில்லை. இதனால் மக்களிற்கு அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு தலை வழங்குவதற்கு மேடையில் இருந்து சைகை மொழியை (Sign Language) பாவித்து செய்து காட்டியதே கூத்துக்கலை என தான் நினைப்பதாக கூறினார். இதைத் தொடர்ந்து சின்னையா விமலநாதன், நா. கணபதிப்பிள்ளைக்கு கலைஞர்களுக்கான விருது வழங்கல் நடைபெற்றது.

8.00 மணிக்கு சத்தியவான் சாவித்திரி புராண நாடகம் ஆரம்பமானது. இந்நாடகத்தில் 18 கலைஞர்கள் பங்கு பற்றினர். இவர்கள் இந்நாடகத்தை 90 நாட்கள் பயிற்சி செய்து மேடை ஏற்றினார்கள். நாடகம் இடையில் திரை போடாமல் தொடர்ந்து 2½ மணித்தியாலங்கள் நடைபெற்றது. நாடகத்தில் சத்தியவான் ஆக சண்முகநாதன் இரமணீகரன், சாவித்திரியாக பூங்கொடி அருந்தவநாதன் இயமதர்மனாக பொன். அருந்தவநாதன் மற்றும் நாரதராக தங்கராசா மயூரன் நடித்திருந்தனர். இவர்களது நடிப்பில் அவர்களது திறமை, பயிற்சி என்பன நன்றாக வெளிப்பட்டிருந்தது. அவர்கள் கதாப்பாத்திரமாக மாறியே இருந்தார்கள். நாரதரின் நடிப்பு உண்மையாகவே நாரதர்தான் வந்திருக்கிறார் போன்ற உணர்வை ஏற்படுத்தியது. சாவித்திரி இயமதர்மனுடன் வாதிடும் போதும் சரி, மன்றாடும் போதும் சரி உண்மையிலேயே தனது கணவனின் உயிரிற்காக வாதிடும், மன்றாடும் பெண் போலவே தெரிந்தது. நேரம் போவதே தெரியாமல் 2½ மணித்தியாலங்கள் சென்றன. திரையை மூடி அரங்கக் காட்சிகளை மாற்றாமல் தொடர்ந்து நாடகத்தை நடத்தியதும் இதற்கு ஒரு காரணம். இப்படியாக பல மணிநேரம் பயிற்சி எடுத்து திறம்பட தயாரித்து வழங்கப்பட்ட நாடகம் தனி ஒரு நிகழ்வாக (பேச்சுக்கள் அதிகம் இன்றி) மிகவும் சிறந்த ஒலி ஒளி அமைப்புடன் மேடை ஏற்றப்பட்டிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். நாடகத்தை தொடர்ந்து கவிநாயகர் கந்தவனத்தின் நயப்புரையும் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெற்றன.

நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குபவர்கள், பேச்சுக்கள் நிகழ்த்திய எல்லோருக்கும் பொன்னாடை போர்த்துவதில் அதிக நேரத்தை செலவழித்து விட்டதாகத் தோன்றியது. நாடகப் பயிற்சியில் எடுத்துக் கொண்ட கவனம் நிகழ்ச்சித்தொகுப்பு, அரங்கத்தெரிவு மற்றும் ஒலி, ஒளி அமைப்பில் எடுக்கப்படவில்லை என்பது தெரிந்தது.

ஒரு தரமான நாடகத்தை தயாரித்து, நெறியாள்கை செய்து கனடாவில் மேடை ஏற்றிய பொன். அருந்தவநாதன் குழுவினரின் முயற்சியும் அவர்களுக்கு உடை ஒப்பனைகளை செய்த ஜே.வி. ஆனந்தனின் முயற்சியும் நிச்சயமாக பாராட்டப்பட வேண்டும், ஊக்குவிக்கப்பட வேண்டும். காத்தவராயன் கூத்தும், சத்தியவான் சாவித்திரி நாடகமும் கனடாவில் பலமுறை மேடை ஏற்றப்பட வேண்டும்.

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca





# ஒளியின் கதியை விஞ்சிடும் 'நியூற்றினோ''க்கள்

## இயற்பியல் விஞ்ஞானிகளின் பரபரப்பு!

ஐரோப்பிய அணுக்கரு ஆய்வு அமைப்பினர், (CERN) அண்மையில் ஒரு புதிய தகவலைத் தந்திருக்கின்றார்கள். 'நியூற்றினோ'க்கள் எனும் உபஅணுத்துகள்கள் ஒளியை விடவும் வேகமாக செல்லவல்லன என்கிறார்கள். இது உறுதிப்படுத்தப்படுமாயின் அயன்ஸ்ரைனின் $E=mC^2$ உட்படப் பல இயற்பியல் விதிகள் சீர் செய்யப்பட வேண்டிய கட்டாயம் வரும் என்கிறார்கள் சில இயற்பியலாளர்கள். நியூற்றினோக்கள், இலத்திரன்கள் போன்று புள்ளிச் சடங்கள். மின்னேற்றம் இல்லாத இவை மிகவும் பாரம் குறைந்தவை, பாரமில்லாதவை என்றே கூறலாம். ஒளியின் வேகத்தில் பயணப்படக் கூடியவை எனக் கருதப்பட்டவை. பொதுவாகவே எல்லாப் பொருட்களின் ஊடாகவும் அவற்றைப் பாதிக்காது நுழைந்து, செல்ல வல்லவை. கதிரவனின் மையத்திலிருந்து ஒவ்வொரு கணமும் பெருந்தொகையான நியூற்றினோக்கள், அங்கு நிகழும் அணுக்கரு உருகலின் விளைவாக வெளிவருகின்றன. அவை புவியைக் கடந்து செல்கையில், ஒவ்வொரு செக்கனும் மில்லியனுக்கும் அதிகமான நியூற்றினோக்கள் எங்கள் உடலையும் ஊடுருவிச் செல்கின்றன என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இந்த நியூற்றினோக்களை ஆராயும் ஆய்வுமையம் ஒன்று கனடாவிலும் உள்ளது.

இந்த நியூற்றினோக்கள்தான் ஒளியை விடவும் வேகமாகச் செல்ல வல்லவென CERN அமைப்பினர் கூறுகின்றனர். தங்களின் இந்தத் தகவலானது சரிதானா என மற்றய ஆய்வாளர்களையும் சரிபார்க்கச்



சொல்லி இருக்கின்றார்கள். ஜெனிவாவின் CERN நிலையத்தில் இருந்து நியூற்றினோக் கற்றைகளை ஆய்வாளர்கள் அனுப்பி இருந்தார்கள். இந்த நியூற்றினோக்கள் ஒளியை விடவும் 60 நனோசெக்கன்கள் முன்னதாக அனுப்பப்பட்ட இடத்தில் இருந்து 730 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் இத்தாலியின் ஆய்வுமையத்தை சென்றடைந்தன. இம்முடிவால் ஆச்சரியப்பட்ட ஆய்வாளர்கள் சில மாதங்களாக மீண்டும் மீண்டும் கணிப்புக்களைச் செய்து பார்த்த போதிலும் வழுக்கள் எதனையும் அவர்களால் காண முடியவில்லை. அதன் பின்னரே இம்முடிவினை வெளிவிட்டார்கள். முன்னராக 2007ல் சிக்காக்கோவில் இருக்கும் ஆய்வு மையமும் இது போன்ற முடிவொன்றினைப் பெற்றிருந்தது. ஆனால் உபகரணங்கள் சிதைவுற்றதினால் தமது முடிவை உறுதி செய்யவோ அல்லது மீண்டும் அப்பரிசோதனையைச் செய்யவோ அவர்களாற் கூடாமற் போய்விட்டது. யப்பானிய விஞ்ஞானிகள் சிலர், மில்கிவே கலக்சியின் துணைக் கலக்சியான பெரிய மெகலோனி முகில் (Large Megallanic Cloud) இல் ஏற்பட்ட சுப்பநோவா ஒன்றில் இருந்து வந்த நியூற்றினோக்கள் ஒளியை விடவும் வேகமாக, ஒளி வருவதற்கும் மில்லியனின் 2கூறு (2/மில்லியன்) செக்கன் முன்னராக வந்ததாகக் கூறியிருந்தார்கள். இவைகள் CERN இன் முடிவை உறுதிப்படுத்துவது போல இருப்பினும் முடிவான முடிவாக இல்லை என்கிறார்கள்.

இந்நாட்களில் முடிவுகள் பல ஒளியின் வேகமான செக்கனுக்கு 3 இலட்சம் கிலோமீற்றர் என்பதை எதுவும் விஞ்ச முடியாது என்ற அயன்ஸ்ரைனின் எடுகோளின் அடிப்படையிலேயே பெறப்பட்டன. ஆழமான பல இயற்பியல் முடிவுகளும் அழகிய பேரண்ட விளக்கங்களும் இவ்வெடுகோளில் இருந்தே பெறப்பட்டன. எனவே, நியூற்றினோக்கள் ஒளியையும் விட வேகமாகச் செல்ல வல்லன என்பது உறுதியாக்கப்பட்டால், இயற்பியலின் பல முடிவுகளில் சிக்கல் ஏற்படலாம் எனச் சிலர் கருதுகின்றார்கள். பலர் நியூற்றினோக்களின் ஒளியை விட வேகமாகச் செல்ல வல்லது என்னும் முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை அப்படியாக இருந்தாலும் கூட, இயற்பியல் விதிகளில் அதிகமாற்றங்களை ஏற்படுத்தாது என்று அதற்கான விஞ்ஞான விளக்கங்களை தருகின்றார்கள். ஆனாலும் இந்த வேகச் சிக்கலானது சிலரது இரவுகளை நித்திரை இல்லாததாக்கி விட்டது என்னவோ உண்மைதான். நானும் கூட ஏதோ ஒரு பரபரப்புக்குள்ளாகி விட்டேன். இந்தப் பரபரப்பான விடயத்தைப் பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ள விரும்புவர்கள், Google இன் Faster Than Light தேடலுக்குச் சென்று இது பற்றிய பல சுவையான அறிவியல் விபரங்களைப் பெறலாம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca












ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004
5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )
Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# BASEMENT RENT

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.523.1312

**MCLEVIN & MORNINGSIDE**
2 Bedroom avail in bsmt. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.286.8184
(Call after 4.00 pm)

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.970.7120

**NEILSON & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.832.6457

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.4681

**WARDEN & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sept. entrance. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.953.8087

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2011. Very strictly No smoking & No Alcohol. Rent $300.
தொடர்புகளுக்கு: 647.855.2148

**MIDDLEFIELD & FINCH**
2 or 3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC , GTA Square Mall, temple. Avail. immediately. Rooms தனித்தனியாகவும் கொடுக்கப்படும். பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.297.9742

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to YRT, school, mall. Avail. Anytime.
416.669.8711 / 905.201.8350

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, school, stores, temple. Avail. November 01, 2011
தொடர்புகளுக்கு: 416.291.2796

**BIRCHMOUNT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, washroom. Hardwood floor. Close to Scarborough Grace Hospital. Rent $700. Avail. October 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.393.5300

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable. Close to bus, school, shopping, etc. Ladies or couple விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.837.0653

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.332.3624 / 647.309.7790

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. Avail. immediately. தனிநபர் அல்லது Couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.567.9877

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. November 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.261.2107

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, TTC, YRT, school, elementary school, mall. Avail. November 01, 2011.
905.471.7667 / 647.338.9831

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.759.3597

**BIRCHMOUNT & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.450.1816

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, bank, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.560.4152

**NEILSON & NIGHTSTAR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.530.0999

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

**MCCOWAN & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.412.1580

**MIDDLEFIELD & DENISON**
1Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. No drinks & No pets.
416.823.3415 / 905.554.6697

**BELLAMY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to school, TTC, mall. Ladies preferred.Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.285.0849

**KENNEDY & ELLESMERE**
2 bedroom bsmt for rent. Separate entrance, 1½ washroom, parking, laundry, cable. Avail. immediately. Close to bus, shopping, etc.
416.285.7014 / 416.454.3931

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. October 01, 11.
தொடர்புகளுக்கு: 416.908.1250

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.5994

**TAPSCOTT & FINCH**
3 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Single person or family preferred. 3 Bedroom house & bsmt also avail. Avail. immediately.
647.829.7974 / 416.299.3566

**MARKHAM & 16TH AVE.**
Newly finished 2 bedroom bsmt for rent. Garage side entrance, 1 parking. Close to school, mall. Avail. October 01, 2011
905.209.1421 / 647.405.1962

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, GTA Square mall, temple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.292.5334

**MARKHAM & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Cable. Close to school & all facilities. Avail. October 01, 2011.
905.554.9353 / 416.875.3611

**MORNINGSIDE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.551.8275

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to Cedarbrae mall, school, TTC. Small familly preferred. Avail. October 01, 11
தொடர்புகளுக்கு: 416.438.2552

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.7317

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, , parking, laundry, cable. Close to TTC, school. Avail. Anytime.
647.340.7062 / 647.779.0710

**MEADOWVALE & SHEPPARD**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, HWY 401, mall. Avail. October 01, 2011.
647.986.4898 / 416.520.5883

**SHEPPARD & MORRISON BLVD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Bills including. Close to TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.289.6347

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. Ladies preferred. Low rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.1986

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, YRT. Avail. October 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.472.0132

**WARDEN & HWY 401**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.321.3155

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.896.7740

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive. Avail. immediately. No smoking.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**KENNEDY & EGLINTON**
Bedroom for rent. Convenient location. Livingroom, kitchen, fridge, stove, washroom, sep. entrance. Close to subway, bank, stores. Avail. October 01, 2011. Rent $450.
தொடர்புகளுக்கு: 416.264.3899

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediatelty.
647.783.4850 / 905.294.2674
416.293.6211

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, high school. Avail. September 15, 2011.
905.471.2987 / 416.666.3971

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# BASEMENT RENT

**WARDEN & MCNICOLL & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, Bridelwood mall, school.
Avail. October 01, 2011.
416.494.0850 / 416.315.5648

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
2 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, fullwashroom, laundry, sep. entrance. Avail. immediately. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**BIRCHMOUNT & SHEPPARD**
Newly renovated 3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் உள்ள bsmt இல் அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.804.8435

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
416.569.7307 / 416.289.8728

**DENISON & MIDDLEFIED**
2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.562.5113

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. 647.706.4922 / 416.522.3314 / 905.554.2496

# ROOM RENT

**MIDLAND & ST. CLAIR**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen, parking. Close to Warden Subway, Kennedy Subway, Go train. Students or couples preferred. Avail. October 01, 2011.
416.899.6300 / 647.982.7668 / 647.345.4597

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
Room for rent in a bsmt. Sep. entrance. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.418.5479

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom bungalow வீட்டில் 1 அறை வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.846.8394

**MCCOWAN & DENISON**
Room for rent in a bsmt. Attached washroom. Student male only. No parking.
தொடர்புகளுக்கு: 647.234.1316

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

# ROOM RENT

**MORNINGSIDE & NEILSON**
1 Room for rent. Parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.991.8362

**BIRCHMOUNT & MCNICOLL**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

**KENNEDY & FINCH**
1 Room for rent. Close to all facilities. வயது போனவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
647.857.7888 / 647.865.1922
(Call after 6.00pm)

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. entrance. Parking & cable. Close to Parkway Mall, school, TTC 24 hrs., Plaza. Available anytime.
தொடர்புகளுக்கு: 416.294.4631

**WARDEN & FINCH**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.495.9775

**MCCOWAN & LAWRENCE**
1 bachelor apt. for rent. Washroom, kitchen. Sep. entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.855.8829

**MCLEVIN & TAPSCOTT**
1 Large bedroom + patio for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
416.492.2723 / 647.209.3651

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom apt. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.605.5475

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Sep. washroom, kitchen. Close to all facilities. Avail. Anytime. Student or working ladies preferred.
416.286.2932 / 416.879.3650

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

# ROOM RENT

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent. Sep. entrance, share washroom, laundry, parking. Avail. immediately. Single person preferred.
தொடர்புகளுக்கு: 416.267.3071

**MORRISH & ELLESMERE**
2 Large bedroom for rent. Walk-in closet, washroom, parking. Close to UFT Scarborough, CHC Hospital, school. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.291.1752

# HOUSE FOR RENT

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Close t TTC, mall, school. Avail. Anytime.
416.439.1507 / 647.774.5667

யாழ்ப்பாணம் நல்லூரில் வீடு ஒன்று வாடகைக்கு உள்ளது. யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கு 5 நிமிட நடை.
Very good condition.
தொடர்புகளுக்கு: 416.493.0590

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

**SHEPPARD & ROUGH RIVER**
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.242.8595

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom + bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
647.856.9158 / 416.543.5068

**ROOM FOR RENT - MAIN FLOOR**
**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent on the main floor. No kitchen, laundry, parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.277.9044

# CONDO. FOR RENT

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom + den condo. for rent. 1 Parking. Grate view. All new appliances. Swimming pool, recreation room. Avail. Anytime. Rent $1200 & All inclusive.
தொடர்புகளுக்கு: 416.315.9397

**MCCOWAN & ELLESMERE**
**SCARBOROUGH TOWN CENTER**
1 Bedroom + den for rent. Close to all facilities. Rent $1200.
2 Bedroom for rent. Close to all facilities. Rent $1375.
தொடர்புகளுக்கு: 647.829.9456

**KENNEDY & HWY 401**
Brand new never lived 1+ den condo. for lease or sale. $1100 for lease.
தொடர்புகளுக்கு: 416.315.9397

**KENNEDY & SHEPPARD**
1 Master bedroom condo. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.309.2350

# JOB JOB JOB

**A-Z DRIVERS WANTED**
Minimum 3 years experience. Clean driving record. Regular trip Montreal to Toronto.
Charles: 905.961.4872

Sales Person தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தமிழ், ஆங்கிலம் நன்றாக பேசத் தெரிந்திருக்க வேண்டும். அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416. 282.9235

**Pro Personnel Hiring AZ City Drivers**
Must have 2 years of driving experience. Local Work, Paid weekly.
905.676.2778 / 416.892.9291

**MCCOWAN & HIGHGLEN**
6 வயதும், 2 வயதும் உடைய குழந்தைகளை பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
647.351.2496 / 416.937.1762

**MIDLAND & LAWRENCE**
Flooring stone experience sale person in scarborough.
தொடர்புகளுக்கு: 416.830.3932

***Delivery driver wanted***
***Downtown***
***416.497.7660 / 647.771.6237***

Kitchen, cabinet, bsmt renovation, deck, car port, painting, city approval plan for car port, carpentry works, flooring.
இவை அனைத்துக்கும்
தொடர்புகளுக்கு: 416.802.6067

## விற்பனை

வீட்டு வர்த்தக இடியப்ப மெசீன்கள், பற்றீஸ் கட்டர், சமோசா கட்டர், Food Machine.
***Mohan*** P.Eng. - 416.433.6006

# FOR SALE

Leather sofa set (3 Pieces) & front end washer & dryer for sale.
Call shan: 416.450.9181

## SPACE AVAILABLE

**INSIDE EMBASSY STORE**
**MIDDLEFIELD & FINCH**
Very busy store & plaza. Inside Embassy store. Avail. for florist, saloon, spa, nails, movie rental, jewellery store, dance classes, tuition classes.
More information: 416.999.3555

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 24, 26



# மாணவர் பகுதி


S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 285

(1) $\sqrt{5}/100 \times 5\sqrt{5} = 25$

(2) S = 0




(3) AD = 4

Tringles ABC, DCE are similar.

AE/ED = AB/CD =3/9 = 1/3

Area of triangle AEC = ½AE x CD (CD is the height.

So triangle AEC) = ½ x 1 x 9 =4.5 sq. units.

(4) The general antiderivative of $f(x) = x^2/\sqrt{x^3+1}$ is $f(x) = (2)(1/3)(x^3 + 1)^{1/2} + c$

$= 2/3\,(x^3 + 1)^{1/2} + c$ Since f(0) = 4, we have

$F(0) = 2/3\,(0 + 1)^{1/2} + c = 4$


C = 10/3 and the specific antiderivative is $f(x) = 2/3\,\sqrt{x^3 + 1} + 10/3$

(5) $|x + y|^2 = (x + y)(x + y) \quad = x.x + 2x\,y + y.y$

$|x|^2 + 2x.y + |y|^2 \quad 2x.y = |x + y| - |x|^2 - y^2$

$x.y = ½[|x + y|^2 - |x|^2 - |y|^2]$

## Tutorial 286 Questions




(1) Which of the following could be a value of x, in the diagram. (A) 10 (B) 20 (C) 40 (D) 50 (E) Any of the above. (For Gr. 8)

(2) Helpers are needed to prepare for the fete. Each helper can make either 2 large cakes per hours or 35 small cakes per hour. The kitchen is available for 3 hours and 20 large cakes and 700 small cakes are needed. How many helpers are needed? (A)10 (B) 15 (C) 20 (D)25 (E)30 (For Gr. 9&10)

(3) Factor $x^5 + y^5$ (For Gr. 11 & 12)

(4) Find the equation whose roots are the squares of the roots of $4x^2 - 9x - 2 = 0$ For Gr. 11 & 12)

(5) Find the points that trisect the line segmen from A (3, 6, 8) to B (6, 0 -1) (For Gr. 12)


## Tutoring



**Tutoring for students from grade 3 to 12.**

Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. *Also tutoring available for University student.*

***You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:***

Grade 3 to 5 from $30.00/month Grade 6 to 8 from $40.00/month

Grade 9 to 12 from $50.00/month **Location:** Near **Birchmount & Sheppard.**

For more information contact ***Kula*** (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at

**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**

## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at ***Scarborough & Stouffville***

***Contact: 647.340.9490 / 647.831.0363***

## KEY BOARD CLASS

***MARKHAM & LAWRENCE***



***English & Tamil Music***

வகுப்புக்கள் ஆரம்பம்

ஒக்ரோபர் 06, 2011.

தொடர்புகளுக்கு: **416.438.2552**

## A-Z DRIVERS NEEDED



For Woodstock, On Based Company

Local & Highway Drivers Required

Border Crossings Need. Flatbed,

Experience Required.

***Telephone & Fax - 1.519.421.2545***

## OFFICE SPACE FOR RENT

***MORNINGSIDE & SHEPPARD***

Real Estate, Mortgage, Insurance offices போன்றவைகளும் Show Room உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ***Including Highspeed Internet, Electricity, Heating Water.***

***Pl. Call: Murale - 416.569.4065***

## MACHINES FOR SALE

Truck Mounted & Portable Duct Cleaning

Successful Business (16 years) comes with contacts Truck, Truck Mounted units, portable units and all equipment. Everything in A-1 Condition. Training to be provided.

***Contact: 416.910.3008***

## YOGA - MEDITATION CLASSESS

## யோகா, தியான வகுப்பு

***Scarborough*** இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது. ஆர்வமுடையவர்கள்

தொடர்புகொள்ளவும்: **416.273.2200**




### பென்குவின் பற்றிய சில தரவுகள்

1. உலகில் 17 வகையான பென்குவின்கள் உண்டு
2. பென்குவின்கள் பூமியின் தென்துருவத்திற்கு அண்மையான நாடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.
3. பென்குவின்கள் 16" இலிருந்து 48" அங்குலம் வரையும் வளரும்
4. பென்குவின் ஒன்று அல்லது இரண்டு முட்டை களையே ஒரு தரத்தில் இடும்.
5. பென்குவின் உப்பு நீரை அருந்தும்
6. பென்குவின்கள் சைகை மொழியிலேயே மற்றைய பென்குவின்களுடன் கதைக்கும். அவை தலையை யும் கைகளையும் (Flippers) ஆட்டிக் கதைக்கும்.
7. பென்குவின்களுக்கு Tobagganing (வயிற்றில் வழுக்கி விளையாடுவது) Surfing, Diving ஆகிய விளையாட்டுக்கள் மிகவும் விருப்பம்.



ஞா. ஆரணி

அகவை 13

# இளையோர் ஆக்கம்


விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# பென்குவின்களால் பறக்க முடியும்!

'எனக்கும் இந்த வருடம் பறவை ஒலிம்பிக் (Olympics) இல் தங்கப்பதக்கம் கிடைத்ததிற்கு மிக்க மகிழ்ச்சி. இந்த வெற்றிக்கு பின்னால் ஒரு கதை உண்டு. இதோ, என் கதை', என்று பென்குவின் (Penquin) தன் கதையை கூற ஆரம்பித்தது.

சென்ற வருடம் இதே நேரம் நான் பறவை ஒலிம்பிக் போட்டிக்காக பயிற்சி செய்து கொண்டு இருந்தேன். என்ன பயிற்சி? நான் பறக்கும் கலையை பயிற்சி செய்து கொண்டிருந்தேன். எவ்வளவு முயன்றாலும், என்னால் பறக்க முடியவில்லை. வேறு பறவைகளின் சிறகுகளை என் மீது



ஒட்டினேன். பிறகு நண்பர்கள் என்னை மலை உச்சி (Cliff) இல் இருந்து தள்ளி விட்டனர். அதுவும் பயன் இல்லை.

இதையெல்லாம் கண்டு பறக்கக்கூடிய பறவைகள் எல்லாம் என்னை ஏளனம் செய்தன. 'என்ன இது? நீ ஒரு பென்குவின். பென்குவின்களால் பறக்க முடியாது என்று தெரியாத உனக்கு?' என்று கழுகு ஒன்று கேட்டது. 'இப்பவே நிப்பாட்டி விடு. ஏதாவது ஒன்று நடந்து ஆபத்தில் மாட்டிவிட வேண்டாம்' என்றது ஒரு காகம்.

நான் இதை காதில் வாங்கிக் கொள்ளாமல் என் நண்பர்களின் உதவியுடன் முயற்சி செய்து கொண்டே இருந்தேன். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக மற்றவர்கள் சொன்ன வார்த்தைகள் என் மனதில் பதிய தொடங்கின. பறவை ஒலிம்பிக் போட்டிக்கு இன்னும் சில மாதங்கள் இருக்கும் போது நான் கடைசியாக ஒரு முறை பயிற்சி செய்த போது எனக்கு பலமாக அடிப்பட்டு கை உடைந்தது. என்னால் பறக்க மட்டுமல்ல நீந்தக் கூட ஏலாமல் போயிற்று.

இப்படி இருந்த போது நான் ஒரு மயிலை சந்திக்க நேர்ந்தது. 'என்ன பிரச்சினை?' என்று மயில் கேட்ட பொழுது நான் நிகழ்ந்த அனைத்தையும் கூறினேன். 'இதுவா? இது என்ன பிரச்சினை?' என்று எனக்கு அதிசயம் வரும்படி சொன்னது. பென்குவின்களால் பறக்க முடியாதே! நீச்சல் தான் செய்ய முடியும்', என்றேன்.

'நான் ஒரு ஆண் மயில். என்னால் ஆட மட்டும் முடியும் என்று கூறுவார்கள். ஆனால் நானோ....இதோ பார்! என்று கூறியதுடன், மயில் அருகில் இருந்த குளத்தில் குதித்து நீந்தத் தொடங்கியது!! எனக்கு அது ஒரு மறக்க முடியாத காட்சி. மயில் எழுந்து, இது என்னால் எப்படி முடியும் என்று பார்க்கிறாயா? பயிற்சி தான். முயற்சி செய்தால் பலன் கிடைக்கும். முடியாது என்று கூறாதே,' என்றது மயில்.

'அதை ஞாபகத்தில் வைத்து நான் தொடர்ந்து பயிற்சி செய்ததால் இன்றைக்கு ஒலிம்பிக் இல் வெற்றி பெற்றுள்ளேன்,' என்றது பென்குவின்.

**நீதி: முயற்சி திருவினை ஆக்கும்.**

தொடர்ச்சி 26ஆம் பக்கம்


## மணமகள் தேவை

உயர் சைவ வேளாளர் குலத்தை சேர்ந்த யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் Accounting Style (Centennial College), (Un. Colombo 2 Years Can. High School Finished) படித்து Air Canada வில் வேலை செய்யும் 1974 ஆம் ஆண்டு இடப இராசி ரோகினி நட்சத்திரம் ஆணுக்கு நல்ல படித்த வேலை பார்க்கும் மணமகளை தேடுகிறோம்.
தொடர்புகளுக்கு: 647.705.9494

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் தையிட்டியில் பிறந்து பின்பு கனடாவில் வசிக்கும் இந்து வேளாளர் குலத்தை சேர்ந்த Nursing துறையில் தனது University பட்டப்படிப்பை முடித்து தற்பொழுது Toronto Down Town Hospital லில் நல்ல வேலை பார்க்கும் 1985 ஆம் ஆண்டு பிறந்த பெண்ணுக்கு கனடாவில் University முடித்த நல்ல குணமுள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.520.2587

## மணமகள் தேவை

கட்டாரில் பணிபுரியும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1982 ஆம் ஆண்டு பிறந்த உத்தரம், 3ஆம் பாதம் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை கனடா, ஐரோப்பா நாடுகளில் தேடுகின்றனர்.
647.856.7980 / 416.800.0887

## மணமகன் தேவை

உயர் சைவ வேளாளர் குலத்தை சேர்ந்த அச்சுவேலியை பிறப்பிடமாக கனடாவில் Computer Science படித்து வேலை செய்யும் 1984 ம் ஆண்டு தனுசு இராசி மூலம் நட்சத்திரம் உடைய பெண்ணுக்கு நல்ல படித்த வேலை பார்க்கும் மணமகனை தேடுகிறோம்.
தொடர்புகளுக்கு: 647.705.9494

## மணமகன் தேவை

இலங்கையை வசிப்பிடமாகவும் 1981 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றமுடைய மணமகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள்.
403.966.7278 / 416.710.2686

## GTA UNITS FOR LEASE

2 Main floor adjacent units facing the entrance. High traffic area with plenty of parking space. Suitable for stores / shops / offices.
தொடர்புகளுக்கு: Perrii: 416.473.6100

மேலும் பக்கங்கள் 24, 25

## COMPUTER REPAIR



- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்

**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

***TUTORING (WEB DEVELOPMENT)***
***By Experienced Graduate Tutor***
Math 6 - 11, Physics - 11
Data Management - 12
MS Word, MS Excel, MS Access programming with C, Java & Visual Basic. HTMA, ASP, PHP & Mysql. Create web sites cheaply.
தொடர்புகளுக்கு: 416.706.1654

## TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

**அம்மன் மூவிங் & டெலிவெறிஸ்**
Best Price in town.
குப்பை அகற்றுதல்
தொடர்புகளுக்கு: 416.999.9409

## VAN FOR SALE

1998 Mini van for sale. Plymouth voyager. 199K - A/C work. Driving condition.
தொடர்புகளுக்கு: 416.274.9726

## CAR FOR SALE

2005 Honda Odyssey 90k $9900.
2001 Honda CRV $4900
தொடர்புகளுக்கு: 416.575.5055

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## ROOM FOR RENT

## WARDEN & FINCH

சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு அறை தளபாடங்களுடன் (Fully furnished) வாடகைக்கு உண்டு. மாணவர் அல்லது தனி நபர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின்
தொடர்பு கொள்ளவும்: 416.509.6780

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3 பகுதி 25**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

**◊ சி.வி. நாதன் ◊**

2001ம் ஆண்டு மணியன், செழியன், கார்த்திக் மூவரும் மிக ஆர்வமாக தமது பணியில் ஈடுபட்டுக் கொண்டார்கள். ஒரு கிழமையல்ல, முப்பது நாட்களுக்குள் தமது அறிக்கையைத் தருவதாக சானிடம் கூறி அனுமதியும் பெற்றுக் கொண்டார்கள். முதலில் மூவரும் தனித்தனியாக மூன்று நாடுகளுக்கும் போய் தமது தேடுதலை முடித்துக் கொண்டு முப்பதாம் நாளில் ஒரு இடத்தில் சந்தித்து அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம் என முடிவு செய்திருந்தனர். ஆனால் தமது திட்டத்தினை மாற்றி, முதல் 18 நாட்களும் தென்னிந்தியப் பகுதிகளிலும் அடுத்த பத்து நாட்கள் இலங்கையிலும், கடைசி இரண்டு நாட்களும் மாலைதீவுப் பகுதிகளிலும் தமது செயற்பாடுகளை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து கொண்டார்கள். நாசாவின் பிந்திய கணிப்புகள் வட இலங்கையைத்தான் குறிப்பிட்டுக் காட்டிய போதிலும் மற்றப் பகுதிகளுக்குமாக தமது ஆய்வுகளைப் பெருப்பித்துக் கொண்டார்கள். மூவரதும் திறமையில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த நாசா, இவர்களின் அறிக்கைக்காகக் காத்திருந்தது.

மூன்று நாடுகளிலும் மூவருக்கும் எந்தவொரு பிரச்சினையும் இருக்கவில்லை. சகல தரப்பினரும் ஒத்தாசையாக இருந்தார்கள். கிட்டத்தட்ட எல்லாவகையான மனிதர்களையும் அணுகி விபரங்கள் சேர்த்துக் கொண்டார்கள். புத்திசீவிகள் எனப்பட்டவர்களையும், பாமரர்கள் எனக் கருதப்பட்டவர்களையும் எழுந்தமாறாகத் தெரிவு செய்து உரையாடிய போதிலும், எவரிடம் இருந்தும் பறக்கும் தட்டுகள் பற்றியோ அல்லது 'வானின் தழும்பல்' பற்றியோ எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை. வேறும் ஏதாவது வித்தியாசமான தகவலாவது கிடைக்காதா எனத் தேடிய அவர்களுக்கு பறக்கும் தட்டுகள் இல்லாத, முற்றிலும் வித்தியாசமான அந்தத் தகவல் கிடைத்தது யாழ்ப்பாணத்தின் கிராமம் ஒன்றில். அக்கிராமத்தின் சிறுகுறிச்சி 'புதுக்கிணத்தடி' என அழைக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து எட்டுக்கட்டை (எட்டு மைல்) தூரத்தில் தங்களது ஊர் உள்ளது என்கின்றார்கள், அக்கிராமத்தவர்கள். போர்ச் சூழல் இன்னமும் காணப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு சிலர் மட்டுமே அங்கிருந்தார்கள். இருபத்தைந்து வருடங்களின் முன்னர் செழிப்புடன், குளுகுளு எனக் காணப்பட்ட அந்த ஊர் இன்று வரண்டு போய்க் காணப்பட்டது. எங்கும் கடுகுநாவற் பற்றைகள் வீடுகளை மூடி வளர்ந்திருந்தன. ஊரின் குறுக்காக ஓடின தார்த் தெரு தாரில்லாமல், ஒடுங்கி, சிறு பாதை போற் காணப்பட்டது. ஆனாலும் இராணுவ வண்டிகள் ஓடித்திரிந்த அடையா-ளங்கள், அந்த செம்மண்ணில் இன்னமும் தெரிந்தன.

தூர்ந்து போன வீதிக்கு அருகில் இருந்த சிறு பாறைகளின் இடுக்குகளில் உரித்த பாம்புச் செட்டைகள் ஏராளம். பாம்புகளும் தாராளம் போலும் அப்போது. வீதிக்குக் குறுக்காக கரிய காட்டுப் பன்றிகளும் சர்வ சாதாரணமாக ஓடித்திரிந்தன. வீதியின் மருங்குகளில் இருந்த மரங்களில் சில குரங்குகளைக் கூடக் காணக் கூடியதாக இருந்தது. எங்கிருந்து, எப்படி இந்தக் குரங்குகள் வந்தன? ஆட்கள் பாவனையில் இல்லாத கல் வீடுகள் தூர்ந்து போய்க் காணப்பட்டன. சில வீடுகள் ஓடிழந்து, மேற் கோப்பிசம் தொலைந்து, சுவர்களின் யன்னல்களைத் தொலைத்து பத்துப் பன்னிரண்டு வருட மழை, வெய்யில், குளிர் தாக்குப் பிடிக்காத சுவர்கள் ஏதோ பெயர் தெரியாத பச்சைக் கொடிகளால் பாதியாக மூடப்பட்டும் ஊரே சோபையிழந்து பயங்கரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

அந்த ஊரின் சிலர் வெளிநாடுகளுக்குப் போய்விட வேறு சிலர் இராணுவக் கெடுபிடிகள் குறைந்த பகுதிகளுக்குப் போய்விட்டார்கள். இருப்பினும் மண்ணின் மைந்தர்கள் மண்ணுக்கே எனக் கூறிக் கொண்டு ஒருசிலர் அந்த ஊரிலே இன்னமும் தங்கள் தங்கள் வீடுகளில் தங்கியிருந்தார்கள். இவர்களுடன் வேறு ஊர்களில், இராணுவப் பாதுகாப்புப் பகுதிகள் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களில் ஆட்கள் சிலரும் வெறுமையாக இருந்த வீடுகளில் வந்து குடியிருந்தார்கள்.

ஊரின் மத்தியில் இருந்த ஆலமரச் சந்தியில் மட்டும் இன்னமும் அந்த தேனீர்க்கடை இருந்தது. காலை ஒன்பது மணிக்குத் திறந்து, பின்நேரம் மூன்று மூன்றரைக்கெல்லாம் கடையை மூடிவிடுவார்கள். இராணுவ ரோந்து நடக்கும் நாட்களில் மட்டும் கடைக்கு மூடுவிழா. வாரத்தின் மூன்று நாட்கள் ஆகிலும் கடை முழுநாட்களாக மூடிக்கிடக்கும். வியாபாரம் என ஏதாவது நடக்குதோ இல்லையோ, ஊரில் இருந்த சில முதியவர்கள் கடை திறந்திருக்கும் நாட்களில், கடையடிக்கு வந்து, ஆலமர நிழலில் இருந்து கொண்டு புதினங்கள் கதைப்பார்கள். இளைஞர் ஒருவரும் வருவதில்லை. எந்த நேரமும் இராணுவம் வரலாம். வந்தால் அவர்களுக்குப் பிரச்சனைதான். பெண்கள் என வெளியிலே காண்பது அருமை. இந்த ஊரில் பெண்களும் இருக்கிறார்களோ என எண்ணத் தோன்றும். ஆட்களின் தோற்றம், ஏதோ காட்டுவாசிகள் போல் தெரியத் தொடங்கியது. சவரம் செய்யாத முகங்கள், (சந்தியில் இருந்த சலூனும் காணாமற் போயிருந்தது.) கசங்கிய, ஏதோ அணிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அணிந்து கொண்ட கசங்கிய மேற்சட்டைகளைச் சிலர் போட்டிருப்பார்கள். சிலர் வேட்டி கட்டியிருப்பார்கள். சிலர் வெறுமனே சாரங்கள் அணிந்திருப்பார்கள். ஆனாலும், அந்தத் தமிழ்: இன்னமும் அவர்களிடம் இருந்து மறையவில்லை. செம்மண்ணில் கலந்த செந்தமிழ் அவர்களது வாயில் இருந்து இன்னமும் இனிப்பாகத்தான் வந்து கொண்டிருந்தது. அந்த ஊரில், அந்த தேனீர் கடையடியில், ஆலமரத்தின் கீழ்த்தான் மணியனுக்கு அந்த விசித்திரமான செய்தி தற்செயலாக கிடைத்தது.

-இன்னமும் வரும்


**Sitham Sam Shanmugam** *(Sales Rep)*

**HomeLife/GTA Realty Inc.**

Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.

•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $299,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

8 beds senior or retired home. Monthly income $16,000.

Metal scrap yard for recycling and car sales with house office.

detached brand new home Ontario in London. Near university of Weston.

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000

**வெளிவந்துவிட்டது!**



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# மன இறுக்கம்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

விரிப்பின் மேல் உட்கார்வது நல்லது. முதுகுப்பகுதியை கூனாமல் நேராக நிமிர்த்தி வைத்திருக்கவும். ஆரம்பத்தில் கண்களை மூடிக் கொண்டுதான் பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும். பின் மெதுவாகத் திறந்தபடியும் செய்யலாம்.

### மூச்சு ஐம்புலன் உணர்வு

பத்துத்தடவை மூச்சை நன்கு கவனித்து இழுத்து விட வேண்டும். அந்த மூச்சானது உள்ளே செல்வதையும் வெளிவருவதையும் நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நிலை தொடரும்போது மூச்சு நன்கு ஆழமாகிக் கொண்டுபோகும். பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், தொடு உணர்ச்சி ஆகிய ஐம்புலன் உணர்வுகளைக் கவனிக்க வேண்டும். நமது உடல் எதனைத் தொட்டுக் கொண்டு இருக்கிறது. ஏதாவது சுவை வாயில் தெரிகிறதா? ஏதாவது மணம் மூக்கினால் உணரப்படுகிறதா? மூடியிருக்கும் கண்ணுக்குள் என்ன தெரிகிறது. என்னென்ன சத்தங்கள் கேட்கின்றன என்பதை கவனிக்க வேண்டும்.

### தலைமுதல் கால்வரை தளர்ச்சியுறச் செய்தல்

இப்போது தலையில் தொடங்க வேண்டும். எனது தலை தளர்ச்சியடைந்திருக்கிறது என்று மனதிற்குள் சொல்ல வேண்டும். இவ்வாறு தலை, நெற்றி, புருவம், மூக்கு என்று உடலிலுள்ள அனைத்து பகுதிகளிலும் ஒவ்வொன்றாக கவனத்தை செலுத்தி கால் பாதங்கள்வரை சென்று முடிக்க வேண்டும். இவ்வாறு ஆல்ஃபா தியானத்தில் முதல் நிலை முடிவடைகிறது. இந்த நேரத்தில் மனமும் தானாகவே தளர்வு நிலைக்கு வந்து விடுகிறது. இந்தப் பயிற்சியை தினமும் பழகிவர சில நாட்களில் மனம் தூய்மையடைந்து கொண்டே போகின்றது. அதன் பாரங்கள் குறைகின்றன. சஞ்சலங்கள் மெல்ல மெல்ல நீங்குகின்றன.

### சந்தோஷமான நினைவுகள்



இப்போது உங்கள் வாழ்வில் நடந்த ஏதாவதொரு சந்தோசமான நிகழ்ச்சியை பற்றி நீங்கள் திரும்பத்திரும்ப நினைத்துப் பார்க்க வேண்டும். அது எந்த இடத்தில் நடந்ததோ திரும்ப அங்கு சென்று பார்க்க வேண்டும். அது ஒரு சினிமாவாகவோ, உணவாகவோ அல்லது ஆடை அணிகலன்களாகவோ இருந்தால் அதை மறுபடியும் ஒரு தடவை அனுபவித்து பார்க்க வேண்டும். எல்லாம் கற்பனையில் தான் செய்ய வேண்டும்.

### ஆசைகள் நிறைவேறுகிறது.

இப்போது உங்கள் மனம் அமைதியாக ஆனந்தமாக இருக்கிறது. இதை அப்படியே விட்டுவிட்டால் மறுபடியும் கவலைகளும் சஞ்சலங்களும் பற்றிக் கொள்ளும். அதை வரவிடாமல் நமக்கு வேண்டியதை மட்டும் மனத்தில் போட வேண்டும். இவை ஆழ் மனத்தில் (Subconscious Mind) அப்படியே பதிந்து விடுகிறன. இதுநாள்வரை எந்த ஆசைகள் நிறைவேறவில்லையோ எதை நினைத்து ஏங்கினீர்களோ அதை நீங்கள் அடைவதாக அந்த ஆழ்மனதில் திரும்பத்திரும்ப பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேற்கூறிய தியானப் பயிற்சியை தினமும் முடிந்தால் காலையிலும், மாலையிலும் செய்து வந்தால் குறைந்தது மூன்று வாரத்தில் Stress, Depression, Anxiety போன்றவற்றிலிருந்து முற்றிலும் விடுபட முடியும். அத்துடன் ஒரு புதிய வாழ்வை ஆரம்பிக்க வழி பிறக்கும்.


### நினைத்ததை அடைய

மேற்கூறப்பட்ட ஆல்ஃபா தியான முறைகள் மிகவும் சுலப-மானது. பிரபஞ்ச ஆளுமைக்குட்பட்ட அதிர்வுகளைப் பயன்படுத்தியே இந்த பயிற்சி அமையும் போது உடல், உள்ளம் ஆன்மா என்ற மூன்றும் பிரபஞ்ச சக்தியுடன் இணைவதால் பஞ்ச பூத சக்திகள் மனிதனுக்கு இசைவாக அமையும்போது அவன் நினைத்த காரியங்கள் அனைத்தையும் அடைய முடிகிறது.

இதைப் பற்றிய மேலதிக தகவலைப் பெற விரும்பினால் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.


மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி
ஜோதிடம்
பண்டித் மகேந்திரன் சுவாமிகள்






ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி
ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்

மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித்
அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள்
அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும்
பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





100% உங்கள் பிரச்சினைகளுக்கு
தீர்வு

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

Tel: 647-919-5846

Office
5210 Finch Ave. East Unit # 1
Scarborough, ON M1S 4S4
(Inside of Golden Bakery)
Beside the Meenadchi Temble

Home
100 Winggaraden # 1713
Scarborough, ON. M1B 2P4
(Neilson & Finch)
Close Intersection

# மூட்டுவலியும் உணவும்


## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## Join pain

நமக்கு ஏற்படும் மூட்டுவலிக்குப் பல காரணங்கள் உண்டு. எலும்புகள் தேய்வதினால் அதிகமாக மூட்டுவலி ஏற்படுவதுண்டு. இந்த மூட்டுவலி பெரிஆத்தரைட்டிஸ் (Periarthritis) நோயினாலும், அல்லது ரூமற்றெலிட் ஆத்தரைட்டிஸ் (Rheumetodarthritis) ஆலும் தசைகளில் ஏற்படும் நோயினாலும் வருவதற்கு இடம் உண்டு. இந்த எலும்பு மூட்டுக்கள் நமது உடம்பில் இருப்பதை நன்கு அறிவோம். உ+ம் கால், கைகளில், தோள்பட்டை, இடுப்பு போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். மற்றும் இந்த மூட்டுக்களைச் சுற்றியுள்ள தசைகளில் ஏற்படும் சில நோய்களினாலும் மூட்டுவலி வருவதற்கு இடம் உண்டு.

தோள்மூட்டுவலி, தசைப்பகுதி இறுகிய நிலையிலும் வரலாம். மேலும் மதுமேக வியாதியால் பீடிக்கப்பட்டு இருப்போருக்கும் வரச்சந்தர்ப்பம் உண்டு. எனவே மதுமேகம் எம்மை வந்து தாவாதபடி எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதற்கு உணவுமுறை முக்கியமாகும். அதாவது நார்ச்சத்து உணவுகளை நாளாந்தம் எடுக்கும் உணவுடன் எடுத்துவந்தால் இந்நோய் எம்மை அணுகாவண்ணம் பாதுகாக்கமுடியும். இவ்வுணவுள்ள மரக்கறி வகை, கீரைவகை, பழவகைகள் போன்றவற்றில் அதிகம் உண்டு. மதுமேக (நீரிழிவு) நோய் இருந்தால் அதனைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருதல் வேண்டும். தங்கள் வைத்தியரிடம் சென்று மருந்துகளை முறையாகப் பெற்றுக்கொள்வதுடன் உணவு முறையையும் கைக்கொள்ள வேண்டும்.

எனவே இந்தத் தோள்மூட்டுவலி காணுமிடத்து கைகளினால் வேலைகள் செய்யமுடியாத நிலை ஏற்படும். இவ்வலி, மாதக்கணக்கில் நீடிக்கலாம். இது முதுகு வலியும், பின் தோள்பட்டை மூட்டுவலியுடன் அசைக்க முடியாமலும், பின் நாளடைவில் விறைப்புத் தன்மையும் ஏற்பட்டு வரலாம். இதற்கு நீண்ட நாட்கள் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்படலாம். இதற்கு தங்கள் வைத்தியரிடம் சென்று ஆரம்ப நிலையில் தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். கவனிப்பு குறைந்தால், மூட்டைச் சுற்றியுள்ள தசை நார்கள் பலம் குறைந்து சோர்வுநிலை நிகழ்ந்து, நிரந்தர பாதிப்பும் ஏற்படலாம். இதற்குத்தங்கள் நிலைக்கு ஏற்ப பயிற்சி எடுப்பது மிக நன்று. மேலும் தோள்பட்டைவலிக்கு பல காரணங்கள் இருப்பதினால் தனிய மூட்டுவலிகளோடு ஒப்பிட்டுப்பாராமல் தங்கள் வைத்தியரின் ஆய்வுகளின்படி நோயை நிர்ணயித்து சிகிச்சை பெறுவது



உத்தமமாகும். பெரும்பாலும் தோள்பட்டை வலி ஏற்படும்போது அவ்விடத்தில் நோய் ஏற்பட்டு வரலாம் அல்லது இருதய ஈரல் நோய், வயிற்றுவலி, உதரவிதான நோய்களினாலும் வரலாம். இருதய நோய் ஒருவருக்கு இருக்குமானால் தோள்பட்டை யின் இடது பக்கத்தில் வலி பெரும்பாலும் காணப்படும். வலது தோள்பட்டையில் வலி இருந்தால் ஈரல் வியாதியால் வந்ததாக இருக்கலாம். இவை தவிர தோள்பட்டையில் அசைவு ஏற்படும்போது வலிநிலை காணப்பட்டால் அது தோளில் ஏற்பட்ட நோயால் வரலாம். காயங்களினால் ஏற்பட்ட வலியுடன் வீக்கநிலையும் காணப்படும். எனவே இதனை நன்கு ஆய்வு செய்து சிகிச்சை பெற வைத்தியர்களின் பார்வை முக்கியமாகும்.

நாம் பாவிக்கும் உப்பில் உள்ள சோடியம் குளோரைட் எலும்புகளிலும், மூட்டுக்களிலும் உள்ள பசைப்பொருளான மச்சையை (எலும்பில் உள்ள) அழிக்கும் தன்மை உடையதினால் மூட்டெலும்புகள் ஒன்றோடு ஒன்று முட்டும்போது வலி ஏற்படும். எனவே உப்பை எடுக்கும்போது குறைந்தளவு எடுப்பது அல்லது தவிர்ப்பது நன்று.

மேலும் அதிகம் கொழுப்புள்ள உணவுப் பொருட்களை அதிகம் எடுப்பது நன்றன்று. கொழுப்பு பொருட்களை நாம் உணவுடன் உட்கொள்ளும் போது உடல் எடை அதிகரித்து மூட்டுவலி ஏற்படலாம். உடல் அசைவு வேலைகள் செய்யாமல் விட்டாலும் அல்லது ஒரே இடத்தில் இருந்து வேலை செய்வோருக்கும், T.V நித்தம் நிலையாக இருந்து பார்ப்போருக்கும் மூட்டு வலி ஏற்படலாம். எனவே இந்நிலைகளை மாற்றிக் கொள்வது மிகநன்று.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909







# நவராத்திரி நாயகி

அம்மா! என்று அழைக்காத உயிரே இல்லை. அம்மாவை வணங்காமல் உயர்வும் இல்லை. நமக்கு ஒரு தாய். உயிர்கள் அனைத்திற்கும் ஒரு தாய். உமையம்மை மூன்று எழுத்து சொல்லில் தமிழில் எழுதப்பட்ட காவியம் தான் அம்மா. அன்பு, தயை, அபரிதமான கருணை, இரக்கம், பரோபகாரம், தியாகம், சேவை இவற்றின் கலவை தான் அம்மா. 'தாயாகித் தாங்குகின்ற தயாபரன் இறைவன் என்று குறிப்பிடப்படுவதிலிருந்து தாய்மையின் தனித்துவம் விளங்குகின்றது. சக்தி பீடங்கள் அறுபத்து நான்கு என்றாலும், தாயின் கர்ப்பப்பையும் ஒரு சக்தி பீடமேயாகும். நாம் உண்டாகி வாழ்ந்து மறையும் இப்பூமியும் பராசக்தியின் - அம்பிகையின் கர்ப்பப்பை என்றுதான் சாத்தம் கூறுகின்றது. எனவேதான் அம்பிகை ஸ்ரீமாதா என சிறப்பிக்கப்படுகின்றாள்.

சிவனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி. அவன் தேவிக்கு ஒன்பது ராத்திரிகள் நவராத்திரி. இதனால் தேவியின் தேசசும் அருள்வளமும் ஆற்றலும் விளங்கும். "சொல்லுக்கடங்காவே பராசக்தி சூரத்தனங்களெல்லாம்" என்று பாடினான் பாரதி. "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்று பாடினார் மணிவாசகர். எனவே சக்தியை பக்தி செய்வதால் முக்தியும் வாய்க்கும் எனலாம். வல்லமையும் வளங்களும் வாய்க்கருளும் வடிவாம்பிகையை வணங்கவும் வாழ்த்தவும் அமைந்த நாட்களே நவராத்திரி நாட்களாகும். வீர உணர்வும், கல்வி நலனும், செல்வவளமும் விழுமிய வாழ்விற்கு அடிதளம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் மலைமகளும், கலைமகளும், திருமகளும் கூட்டாக ஒரே இடத்தில் இருக்க மாட்டார்கள் என்றும் கூறப்படுவதுண்டு.

போர்க்களத்தில் நெஞ்சிலே வேல்பட்டு மாய்ந்து கிடக்கும் மகனைக் கண்டு



மனம் மகிழ்கிறாள் ஒரு வீரத்தாய். வீரத்தின் விளைநிலமான வீரனை ஈன்றதனால் ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கின்றாள் மறவர் குடியைச் சேர்ந்த மாது. இது ஒருவகை வீரம். அசைவறு மணத்தை கொண்டிருப்பதும் ஒருவகை வீரம். அதுதான் கலங்காத மணம். தாழ்ந்தவரிடத்தும் தோல்வியை விரும்பி ஏற்றுக் கொள்ளுதல் ஒருவகை வீரம் என்பார் வள்ளுவர். "நிராயுதபாணியாகி நிற்கும் எதிரியிடம் இன்று போய் போர்க்கு நாளை வா" என்று கூறிய இராமனின் வீரம் வீரத்தின் சுடராக மிளிர்கின்றது. இருந்தும் தன்னை நிலைப்படுத்தவும் பகையை தகர்க்கவும் வீரம் வேண்டியுள்ளது. எனவே தான் வீரலட்சுமியை - துர்க்கையை முதல் மூன்று நாட்களிலும் துதிக்கின்றனர்.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. என்றாங்கு பணம் இல்லாவிட்டால் வாழ்க்கை வண்டி ஓடாது. எனவே பணம் வாழ்க்கைக்கு மிக மிக அவசியம். செல்வம் இல்லாதவன் செல்லாக் காசு. அவனது வார்த்தை அரங்கு ஏறாது. இல்லானை இல்லாளும் வேண்டாள். ஈன்றெடுத்த தாய் வேண்டாள். செல்லாது அவன் வாயிற் சொல். செல்வம் ஒரு இடத்தில் நிலைத்து நில்லாது. ஆறிடும் மேடும் பள்ளமும் போல ஆகும். செல்வம் செல்லும் தன்மை உடையது. எனவே தான் அதற்கு செல்வம் எனப்பட்டது போலும். குடைநீழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓர் உணர்நண்ணினும் நண்ணுவர் என்பதற்கேற்ப செல்வம் சேர்ந்த போது தானம் தருமம் செய்திட வேண்டும். ஊழையும் உட்பக்கம் காண்பதால் செல்வம் சேரும். கொள்ளையடிப்பதால் செல்வம் சேரும். அதிஷ்டலாபச் சீட்டால் செல்வம் சேரும். கோயில் புதையலால் செல்வம் சேரும். மூதாதையர் தேட்டத்தால் செல்வம் சேரும். செல்வம் உடையவர் தமது செல்வத்தை போட்டு வைக்கும் சிறந்த இடம் பசித்தவர் வயிறு எனப்படுகின்றது. எனவே தானத்தில் சிறந்தது அன்னதானமாகும். திரு என்றால் செல்வம். அதற்கு அதிபதி திருமகள். கொள்ளக் கொள்ள குறையா நிதியின் குவை வேண்டாம். அல்லல் இன்றி நல்லபடியாக வாழ்வதற்கு அளவான செல்வம் வேண்டி செந்தாமரைப் பூவில் செம்மாந்திருக்கும் தேவியை தொழுவோம்.

கல்வி கண் போன்றது.
"எண் என்ப ஏனை எழுத்தெனப் இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு". என்றார் வள்ளுவர்.
கேடு இல்லாத விழுச் செல்வம் கல்வி. கல்வி கண்ணோட்டத்தை (இரக்கத்தை) ஏற்படுத்த வேண்டும். கண்ணோட்டம் இல்லாதவன் ஏட்டுப்படிப்பு படித்திருந்தாலும் கல்லாதவனே யாவான். ஆறே நாட்களில் அரன் அடி அடைந்த கண்ணப்பன் ஏட்டுக்கல்வியை எட்டிப்பார்க்காதவன். தன்னை இழந்து பரம் பொருளில் ஒன்றி விடுவது தானே கல்வியின் நோக்கம். எனவே தான் 'கலை மலிந்த சீர் நம்பி' என்று கண்ணப்பனை பாடினார் சுந்தரர். அவன் பெற்ற இறை நிலையை, உயர் நிலையை யார் பெறுவார்.? 'கற்றும் அறிவில்லாத மூடருக்கு என் செய்வேன்' என்று பாடினார் தாயுமானவர். இதனால் தான் கல்லாத பேர்களே நல்லவர்கள் எனப்பட்டது போலும். கற்றது கைமண் அளவு. கல்லாதது உலகளவு என்பதற்கேற்ப கல்விச் செருக்கு, தருக்கு கொள்ளாமாலும் இருக்க வேண்டும். ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர், இவர்களே அகன்ற ஞாலத்தின் ஒளிவிளக்குகள். கல்விக் கடவுள் சரஸ்வதி, கல்வியும் கலைகளும் வளர்க்கும் கலைவாணியை இறுதி மூன்று நாட்களிலும் கை கூப்பித் தொழுகின்றோம். பவானி அம்மையை போற்றித் துதிக்கும் தனி விழாவே நவராத்திரி ஆகும்.

மகா நவமி அன்று எல்லோரும் புத்தக பூஜை, ஆயுத பூஜை என்பவற்றை சிரத்தையோடு செய்வார்கள். பத்தாம் நாள் விஜயதசமி ஆகும். இது வெற்றித் திருநாள். இத்தினத்தில் புதிய கருமங்களை செய்ய ஆரம்பிப்பார். பராபரையின் மீது கொண்ட பக்திப் பரவசத்தினால் பட்டர் பாடிய அந்தாதி பாடல் இது. அம்பிகையின் அடிக் கமலங்களே நமக்கு அரணாக அமைவன.

நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கி என்று
ஆயகி யாதி உடையாண் அரண் நமக்கே.



நா. க. சிவராமலிங்கம்

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# “எம்.ஜி.ஆரை போல என்னையும் தொப்பியோடேயே அடக்கம் செய்துடுவார்களோ!”

## நேர்காணல்: இயக்குனர் பாலுமகேந்திரா

உங்களுடைய நண்பரும் இயக்குனருமான கெ.ஜி.ஜார்ஜ், ஷோபா - பாலுமகேந்திராவின் உறவை வைத்து எடுத்த ‘ஜலேகயுடை மரணம் ஒரு ஃப்ளாஷ்பேக்’ என்ற படத்தைப் பார்த்திருக்கிறீர்களா?

“இந்த நிமிடம் வரை பார்க்கவில்லை. அந்தப் படத்தில் ஷோபாவைக் கொலை செய்தவனாகத்தான் என்னைச் சித்தரித்திருக்கிறார்கள் என்று பலரும் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். (தற்கொலை ஒரு விதத்தில் கொலை தானே?) ஜார்ஜ் எனக்கு மிகவும் நெருக்கமானவன். இருந்தும் அப்படி ஒரு படத்தை அவன் எடுத்தபோது எனக்குக் கோபம் வரவில்லை. மறுப்பு சொல்லவும் தோன்றவில்லை. அதனால், பலரும் எனக்குக் குற்றவுணர்ச்சி இருக்கிற தென்று நினைத்திருக்கலாம். என்னுடன் இருப்பார்கள் என்று மனதளவில் உணர்ந்த பலரும் என்னைத் தனிமைப்படுத்தினார்கள். அதெல்லாம் என்னை இப்போது கூட சங்கடப் படுத்தவில்லை. ஷோபாவின் இறந்த உடலைப் பார்க்க நானும் போயிருந்தேன். அப்போது நான் அனுபவித்த வேதனை எத்தனை ஆழமானது என்று சொல்ல முடியாது (சிறிதுநேரம் நிசப்தமனான அவரின் இமைகளில் ஈரம் படர்ந்தது) ‘இன்னக்கி இருந்திருந்தாங்கன்னா மிகப் பெரிய நடிகையாயிருப்பாங்க...நிஜம்...”

இது ஒரு பாவமன்னிப்பு வேண்டுதலா?

“எதற்காக? நான் தவறு செய்திருந்தால் தானே! ஷோபாவிடம் ஒருபோதும் நான் தவறாக நடந்து கொண்டதில்லை. ஷோபாவிடம் மட்டுமல்ல, எந்தப் பெண்ணிடமும் நான் தவறாக நடந்து கொண்டதில்லை. சில நட்சத்திரங்களைப் பார்த்திருக்கிறோ மில்லையா. அதீத பிரகாசத்துடன் அவை வானில் மின்னி மறையும் அதுபோலத்தான் ஷோபாவும். குறைந்த காலங்களே வாழ்ந்து உயரங்களைத் தன் வயப்படுத்தி கீழடக்க அவளால் முடிந்திருந்தது. நான் எடுத்த ‘மறுபடியும்’ என்ற படத்தில் இந்தப் பேரிழப்பைப் பதிவு செய்தேன். அறம் பாடுதல் என்பது போல. ஆனால், என் வாழ்க்கையில் என்னை ஆகர்ஷித்த, என்னை நானாக்கிய ஒவ்வொரு பெண்ணுக்கும் நான் அந்தப் படத்தைச் சமர்ப்பிக்கிறேன்.”

மலையாளப் படங்களை இப்போதும் பார்க்கிறீர்களா?

“என்னுடைய ஆரம்பம் மலையாளத்தில் இருந்துதான். ராமு காரியத், பரதன், வி.என்.மேனோன், பத்மராஜன் போன்ற திறமைசாலிகளான எத்தனையோ இயக்குனர்கள் மலையாளத்தில் இருந்தார்கள். அவர்கள் தங்கள் படத்தில் வாழ்க்கையை உள்ளடக்கிய கதைகளை எடுத்திருந்தார்கள். ஆனால், இன்றைய மலையாள சினிமாவின் வடிவமும் பாவமும் மாறிப் போயிருக்கிறது. தமிழ், தெலுங்குப் படங்களில் பார்க்கிற அதே அடர்ந்த நிறமும் டப்பாங்குத்தும் ஆக்ஷனும் அப்படியே மலையாளப் படத்திலும் பறித்து நடப்படுகிறது. இந்த மாற்றம் மலையாள சினிமாவிற்கு ஏற்றதல்ல. நாம் பார்த்ததும் கேட்டதும் அறிந்ததுமான கலாசாரப் பிரதிபலிப்பு அல்ல இன்றைய மலையாள சினிமா. ஒரு வருடம் கேரள மாநில விருதுகள் தேர்ந்தெடுக்கும் நடுவராக இருந்தபோது இதைச் சுட்டிக்காட்டினேன். கடந்த 10 வருடங்களில் பார்த்ததில் எனக்கு மிகவும் பிடித்த மலையாளப் படங்கள் ஷ்யாம பிரசாத்தின் ‘ஒரே கடல்’, எம்.டி.யின் ‘நீலத்தாமரை’ மட்டுமே.”



சந்திப்பு: அஸ்வதி கிருஷ்ணா
மலையாளத்திலிருந்து தமிழில்: கே.வி. ஷைலஜா

உங்கள் படத்தின் அழகான கதாநாயகிகளைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

(சத்தமிட்டுச் சிரிக்கிறார்) “அழகு என்று நான் நினைப்பது, பார்க்கக் கிடைக்கிற அழகை அல்ல. அது மனதின் எண்ணம் என்றுகூடச் சொல்லலாம். என்னுடைய படங்களின் கதா நாயகிகள் எல்லாம் திறமைசாலிகளாக இருந்தார்கள். ஷோபனா, பூர்ணிமா, அம்பிகா, ஸ்ரீதேவி, மாதவி, ஷோபா, ரேவதி, ரோஹிணி, அர்ச்சனா என எல்லோரும். அவர்களுடன் நல்ல நட்பு எனக்குண்டு. ஒரு இயக்குனர் என்ற நிலையில் மட்டும் பழகினால் அது ஆர்ட்டிஸ்ட்டுகளுக்கு மத்தியில் அனாவசியமான ஒரு இடைவெளியை ஏற்படுத்தும். அதில்லாமல் ஒரு நண்பனாய் சமீபிக்கும்போது அதில் இன்னும் சௌகரியமாக இருக்கும். என்னுடைய கதாநாயகிகளைப் பற்றி நினைத்துப் பார்க்கும்போது மனதிற்கு மிகவும் நெருக்கமானவர் ஸ்ரீதேவிதான். ‘மூன்றாம் பிறை’ எடுக்கும் போது ஸ்ரீதேவியைக் கதாநாயகி ஆக்கியதற்காகப் பலரும் என்னைக் குற்றம் சொன்னார்கள். ஏனென்றால், ஸ்ரீதேவி அப்போது தமிழ் மக்களின் ரதி பிம்பம். மூன்றாம் பிறையில் என் கதாபாத்திரமோ ஆறு வயது குழந்தையுடைய குறும்புத்தனங்கள் நிறைந்ததாக இருந்தது. கண்களில் ஆச்சரியமும் குறும்பும் ஒளித்து வைத்த பெண். சிணுங்கும்போது பாவாடை முனையைக் கடிக்கும் பெண் பருவமடைந்த ஓர் ஆணின் வாழ்க்கையில் அவள் நுழையும்போது ஏற்படும் ருசிகரமான அனுபவங்கள்தான் கதை. அந்தப் பெண் அழகியும் உடல்வாகுள்ளவளுமாக இருக்கும் பட்சத்தில் ஆணின் இதயத்துடிப்பு அதிகரிக்கும். இங்கே ஸ்ரீதேவியும் கமலஹாசனும் தான் இந்தப் பாத்திரங்களைச் செய்திருந்தார்கள். படப்பிடிப்பு தொடங்கிய ஆரம்ப நாட்களில் ஸ்ரீதேவியால் இந்தக் கதாபாத்திர மாய் மாற முடியவில்லை. அதற்கு முன்பு அப்படியொரு கதாபாத்திரத்தில் அவர் நடித்ததில்லை என்பதுதான் அதற்குக் காரணம். அந்தக் கதாபத்திரத்தில் நடிக்க, தான் மிகவும் சிரமப்படுவதாக ஸ்ரீ என்னிடம் பகிர்ந்துகொண்டார். அதற்குப் பிறகு நாங்கள் நிறைய நேரம் கலந்து பேசினோம். கதாபாத்திரத்திற்கான மாற்றத்தை நான் புரியவைத்த போது ஒரு குழந்தையைப் போல அதைப் புரிந்துகொண்டார். அதன் பிறகான ஸ்ரீயுடைய நடிப்பு பிரமாதமாக இருந்தது. கமல், “பாலு இதை எப்படி சாத்தியப்படுத்தினீர்கள்” என்று கேட்டார். இப்போதும் அந்த ரகசியம் கமலஹாசனுக்குத் தெரியாது. மூன்றாம் பிறையின் ஸ்ரீதேவியாகத்தான் நான் ஷோபாவைப் பார்க்கிறேன். அனுபவத்தால் பக்குவமடைந்த என்னுடைய வாழ்க்கைக்குள், தெரிந்து கொண்டே எனக்குள் உட்புகுந்த ஒரு சாதுவானப் பெண்.”

ஒரு சினிமாவின் வெற்றிக்கு ‘சூப்பர் ஸ்டார்ஸ்’ அவசியந்தானா?

“நான் அப்படி நினைக்கவில்லை. சினிமா கவனிக்கப்பட வேண்டியது அதன் அழுத்தமான கதையினால் தான், நடிகர்களின் ஈர்ப்பினால் அல்ல. என் படங்களில் நான் அதிகமாக பயன்படுத்தியது புதுமுகங்களைத்தான். அதே சமயம் ரஜினிகாந்த், கமலஹாசன், மம்முட்டி என முக்கியமான நடிகர்களும் என் படங்களில் நடித்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் இயக்குனர் என்ற நிலையில் நான் மட்டுமே முக்கியமானவனாக இருந்திருக்கிறேன். ‘யாத்ரா’ படத்தில் ரஜினி தான் நடிப்பதாக இருந்தார். தமிழில்தான் அப்படத்தை எடுக்க வேண்டும் என்று இருந்தேன். கதை ரஜினிக்கு மிகவும் பிடித்திருந்தது. யாத்ராவில் மம்முட்டிக்கு தலை மொட்டை அடிக்க வேண்டிய ஒரு காட்சி இருந்தது ரஜினியால் அப்போது மொட்டை அடித்துக்கொள்ள முடியவில்லை. அப்படி செய்தால் ரசிகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் போன்ற நியா யங்களைச் சொன்ன போது, நான் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை. வேண்டுமானால் ரஜினி ரசிகர்களை திருப்திப்படுத்தி ‘யாத்ரா’வை தொடர்ந்திருக்கலாம். ஆனால், படத்தின் ஜீவன் தொலைந்து போயிருக்கும். அப்படித்தான் ‘யாத்ரா’வுக்கு மம்முட்டி நாயகன் ஆனார். அந்தப் பாத்திரத்தோடு மம்முட்டி மிகவும் பொருந்தியிருந்தார். படம் வெளியானவுடன் ரஜினி பார்த்துவிட்டு, “பாலு எனக்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பு இது” என்று வேதனைப்பட்டார்.”

இயக்குனர், கேமராமேன், எழுத்தாளன் இதில் மிகவும் பிடித்த ரோல் எது?

“எழுத்தாளன் என்று தீர்மானமாகச் சொல்லுவேன். பதினாறு வயதில் நான் எழுதிய கதை ஸ்ரீலங்காவின் ஒரு பத்திரிகையில் வந்திருந்தது. ‘வஸிங்ஹல்’ என்பது தான் கதையின் பெயர். ஒரு சின்னப் பையனுக்கும் பருவமெய்திய பெண்ணுக்கும் இடையிலான உடல்ரீதியான உறவைப் பற்றிய கதை அது. அவளுக்கு ஒரு காதலும் உண்டு. ஒரு விடுமுறை நாளில் அவளை அக்கா என்று கூப்பிடும் அந்தப் பன்னிரெண்டு வயது சிறுவன் வீட்டிற்கு வருகிறான். அவர்களுக்கிடையில் ஒரு உறவு ஏற்பட்டிருந்தாலும் அது அவர்களுக்குத் தவறாகத் தோன்றவில்லை. ஏனென்றால், மற்ற எல்லா உணர்வுகள் போலவும் திருப்திபடுத்த வேண்டியதுதான் காமமும். ‘வஸிங்ஹல்’ என்றால் வெட்டிக் குறைத்தல் என்று தான் அர்த்தம். அணையில் நீரை தேக்கி நிறுத்துவோம் இல்லையா? அது நிறையும் போது ஷட்டரைத் திறந்துவிட வேண்டும். இல்லையென்றால் மிக மோசமான சேதம் ஏற்படும். அதுபோல தான் காமமும். அந்தக் கதைக்கு என் வாழ்வுடன் மிகுந்த நெருக்கமிருந்தது. கதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. என் படங்களுக்கு எல்லாம் கதை எழுதியது நான்தான். என் கதை பூர்த்தியாகும்போது என் சினிமாவும் பூர்ணமாகும் என்பதுதான் நிஜம்.”

முதுமை உங்களை மிகவும் மாற்றியிருக்கிறது. ஆனால், என்றும் அந்தத் தொப்பி உங்களுடைய தலையில் அதேபோல நிலைத்திருக்கிறது. தொப்பியோடு அத்தனை அளவு கடந்த உணர்வுபூர்வமான பந்தமென்று ஏதேனும் இருக்கிறதா?

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

## பங்ஷன் ஜங்ஷன்

# ஏர்டெல் சூப்பர் சிங்கர் 3 இறுதிப்போட்டி

## விழா துளிகள்

உலகம் முழுக்க, எல்லா நாடுகளிலும் தமிழர்களால் விரும்பிப் பார்க்கப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், விஜய் டிவியின் ஏர்டெல் சூப்பர் சிங்கர் போட்டியும் ஒன்று என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஏர்டெல் சூப்பர் சிங்கர், ஏர்டெல் சூப்பர் சிங்கர் ஜூனியர் நிகழ்ச்சிகளைப் போலவே, கடந்த ஜூலை 2010இல் தொடங்கிய ஏர்டெல் சூப்பர் சிங்கர் 3 சிறந்த பாடகருக்கான தேடல் நிகழ்ச்சியும் பார்வையாளர்களை தன் பிடியில் கட்டிப்போட்டது. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு வாரமும் இந்த நிகழ்ச்சிக்காக காத்திருந்தவர்கள் ஏராளம். ஏர்டெல் சூப்பர் சிங்கர் 3 நிகழ்ச்சியின் இறுதிப் போட்டி கடந்த வாரம் சென்னையில் நடைபெற்றது. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் இருந்து சில துளிகள்...

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமல்லாமல் கனடா, சிங்கப்பூர், நோர்வே போன்ற நாடுகளில் இருந்தும் பலர் ஏர்டெல் சூப்பர் சிங்கர் 3 போட்டியில் கலந்துகொண்டு பாடினர். பல்வேறு கட்டங்களைத் தாண்டி, இறுதிச் சுற்றுக்கு முன்னேறியவர்களில், அதிக வாக்குகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சத்யபிரகாஷ், பூஜா, சாய்சரண், சந்தோஷ் நான்கு போட்டியாளர்களும் இந்த இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இந்த நிகழ்ச்சியை விஜய் டிவியின் தொகுப்பாளர்களான சிவாவும் திவ்யாவும் தொகுத்து வழங்கினார்கள். சென்னை நந்தம்பக்கத்தில் உள்ள டிரேடு செண்டரில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் முன்னிலையில் 23 செப்ரெம்பர் 2011 அன்று போட்டி நடத்தப்பட்டது. விஜய் டிவியில் இந்த நிகழ்ச்சி நேரடியாகவும் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இறுதிப் போட்டியின் நடுவர்களாக தமிழ் சினிமாவின் பிரபல பின்னணி பாடகர்கள் பி.பி.ஸ்ரீனிவாஸ், எம்.எஸ்.விஸ்வநாதன், எல்.ஆர்.ஈஸ்வரி உள்ளிட்ட அந்தக்கால பாடகர்களும், மனோ, உன்னிமேனன், அனுராதா ஸ்ரீராம், சுதா ரகுநாதன், ஸ்ரீனிவாஸ், சுஜாதா, உன்னிகிருஷ்ணன் உள்ளிட்ட இந்தக்கால பாடகர்களும் இருந்தனர். மிகவும் விறுவிறுப்பாக நகர்ந்துகொண்டிருந்த ஒவ்வொரு சுற்றிலும், போட்டியாளர்கள் நான்கு பேருமே ஒருவரை ஒருவர் மிஞ்சும் வகையில் பாடி அசத்தினர். யாரைத் தேர்வு செய்வது என்பது நிச்சயம் நடுவர்களுக்கு பெரிய சவாலாக இருந்திருக்கும்.



**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

இந்த இறுதிப் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக 'மயக்கம் என்ன' படக் குழுவினர் கலந்துகொண்டனர். நடிகர் தனுஷ், இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ், இயக்குநர் செல்வராகவன், அவரது மனைவி ஆகிய நால்வரும் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இருந்து இறுதிவரை (அதிகாலை 1.30 மணி) ஆர்வமாக பார்த்தது, நிகழ்ச்சி எவ்வளவு சுவராஸ்யமாக இருந்திருக்கும் என்பதற்கு சாட்சி. "மிக நீண்ட நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கிறோம் என்ற உணர்வே இல்லை. அவ்வளவு எண்டர்டைனிங்காக ஒவ்வொரு நிகழ்ச்சியும் இருந்தது" என்றார் தனுஷ்.

பொதுவாகவே, 'டைமிங்'காக பேசுவதில் விஜய் டிவி தொகுப்பாளர் சிவா மன்னன். ஆனால், இந்த நிகழ்வில் அவரையே நடிகர் தனுஷ இரு முறை வாரியபோது பார்வையாளர்கள் ரசித்து ஆர்ப்பரித்தனர்.

தனுஷ், 'மயக்கம் என்ன' படத்திலிருந்து தானே எழுதி, பாடிய பாடலை ஜி.வி.பிரகாஷுடன் இணைந்து பாடினார். அதில், 'பொண்ணுங்க வாழ்க்கையில் சாபம்' என்ற வரி வந்ததும் பார்வையாளர்களில் ஆண்கள் விசில் அடித்து தனுஷுக்கு ஆதரவு தெரிவித்தனர். தனுஷை பாடல் முடிந்தவுடன், விஜய் டிவி தொகுப்பாளினி திவ்யா, "ஏன் சார் இப்படியெல்லாம் பொண்ணுங்கள பத்தி பாட்டு எழுதுனீங்க?" எனக் கேட்க, தனுஷ் உடனே, "அது என்னோட கருத்து இல்லை. கதையோட தேவைக்காக அப்படி தேவைப்பட்டது. ஆதலால்..." என்று சமாளித்தார். "ஆனால், இந்த வரிக்கு கிடைத்த கைதட்டல், எத்தன பேர் பொண்ணுங்களால பாதிக்கப் பட்டிருக்காங்கன்னு காண்பிக்குது" என்று திவ்யாவை மடக்கினார்.

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் கடந்த கால வெற்றியாளர்களான நிகில் மேத்யூ, அஜிஷ், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பல பாடல்களை பாடினர். கடந்த சூப்பர் சிங்கர் ஜூனியரின் வெற்றியாளரான அல்கா, பாடகி பார்வதியுடன் இணைந்து பல பாடல்களை பாடினார். அல்காவைப் பார்த்ததும் கூட்டத்தில் கரகோச மழை. அல்கா பாடியதும் "எங்கள் அம்மா ஞாபகம் வந்தது" என்றார் தனுஷ்.

இறுதியாக பரிசுக்கான பெயர்களை அறிவிக்கும் வேளையில், சிவா மீண்டும் மீண்டும் ஒவ்வொரு பங்கேற்பாளராக "எப்படி ஃபீல் பண்ணுறீங்க? டெனஷனா இருக்கா?" என தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருக்க, ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த தனுஷ், "போதுங்க விடுங்க! டென்ஷனாத்தான் இருக்கும். அதையே ஏன் திருப்பித் திருப்பி கேக்குறீங்க" என்று மேடையிலேயே கோபமானார். சிவா உடனே, "இல்லேன்னே, இப்படி கேட்கலைன்னா என் வேலை காலியாயிடும்!" என்றதும், அதை ரசித்து சிரித்தார் தனுஷ்.

நாலு போட்டியாளர்களுமே இரண்டாவது சுற்றில் ஏ.ஆர்.ரஹ்மான் பாடல்களையே பாடினார்கள்.

இறுதியில் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பானது. பார்வையாளர்களின் அதிக வாக்குகளைப் பெற்ற சாய்சரண் 'ஏர்டெல்

40ஆம் பக்கத்தொடர்ச்சி




விஜயதசமியை முன்னிட்டு *(Oct 06, 2011)*
புதிய பரதநாட்டிய வகுப்புக்கள் ஆரம்பம்
*NIRUTHYA KALAKSHESTHIRA DANCE ACADEMY*



*Ajax (Taunton & Middlecote) *Middlefield & Finch
*Markham & Elson *Mclevin & Neilson
*14th Ave. & 9th Line *9th Line & HooverPark
* Staines & Season Dr.
ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார், பரதநாட்டிய கலைமணி, பரதகலாவித்தகி
யாழ். நுண்கலைப்பீடம், வட இலங்கை சங்கீதசபை
416.278.5345 / 416.754.9047

# மேலைத் தேசத்தில்
# கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

# குவாண்ரம் பிறந்த கதை


## நுண்ணுலகியல் 19

சென்ற தடவையில் போற்ஸ்மானின் முடிவுபற்றிக் கூறியிருந்தேன் அல்லவா! அவரது இம்முடிவுக்கான காரணத்துடன் இனித் தொடர்வோம்.

அவரது அற்புதமான தர்க்க முறையில் அமைந்த புள்ளிவிபரவியல் முறையானது ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற விரக்தியே அவரது முடிவுக்குக் காரணம் எனச் சிலரால் கருதப்படுகின்றது. அவ்வளவு தூரத்திற்கு புள்ளிவிபரமுறையில் அவர் நம்பிக்கை வைத்திருந்தார் ஆனாலும், அவர் கடுமையான கபாலவலியினாலும் பார்வைத் தொந்தரவினாலும் வேறும் பல வருத்தங்களினாலும் அவதியுற்று இறுதியில் அந்த முடிவிற்கு வந்தார் எனக் கூறுகின்றார்கள் ஆய்வாளர்கள் சிலர். இந்நாட்களில் குவாண்ரம் உலகின் பெரும்பாலான முடிவுகள் புள்ளிவிபர முறையில் நிறுவப்பட்டு அல்லது தெளிவு படுத்தப்பட்டுப் பின்னராக பரிசோதனை முடிவுகளால் சரி பார்க்கப்படுகின்றன என்பது உண்மையில் போற்ஸ்மான் புகுத்திய உத்திதான். ஆயினும் தனது உத்தியின் வெற்றியை அவரால் பார்க்க முடியவில்லை. ஒருவேளை டிமோக்கிரசிஸ் தனது அணுக் கொள்கை தூக்கி எறியப்பட்டாலும் சிரித்துக் கொண்டே இருந்த மாதிரி போல்ற்மானும் இருந்திருந்தால் தனது உத்தியின் வெற்றியை அனுபவித்திருப்பாரே என்னவோ. ஆனால் டிமோக்கிரசிஸ் கருத்துக்கள் ஏற்புடையதாக வருவதற்கு 2200 ஆண்டு காலம் எடுத்ததால் அவராலும் தமது அணுக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதை …….

## மெண்டலீவ்

குவாண்ரம் பிறந்த கதையில் அடுத்துக் குறிப்பிட விரும்புவது டிமெற்றி மெண்டலீவ் (Dmitriy Mendeleev) என்ற ரஸ்சியாவின் இரசாயன விஞ்ஞானியை. மெண்டலீவ் என்றதுமே இரசாயனம் படித்தவர்களுக்கு, படிப்பவர்களுக்கு ஆவர்த்தன அட்டவணை யின் ஞாபகம் வரலாம். ஆம், அதே மெண்டலீவ் பற்றித்தான் குறிப்பிட விரும்பு கின்றேன். இவ்விரசாயன விஞ்ஞானியும் அணுக் கொள்கையை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியிருந்தார். அந்நாட்களில் ஐதரசன், சோடியம், லிதியம் போன்ற தனிமங்கள் சில (மூலகங்கள்) விஞ்ஞானி களினால் இனம் காணப்பட்டிருந்தன. இவற்றினை அவற்றின் இரசாயன இயல்புகளுக்கு ஒத்ததாக ஒழுங்கு படுத்திப் பார்த்தார். மிகவும் பாரம் குறைந்த ஐதரசனின் அடிப்படையில், தனிமங்களின் பாரம், இரசாயன இயல்பு என்பவற்றினை தொடர்புபடுத்தி தனிமங்களை ஒழுங்கு செய்து பார்த்த போதில் ஒரு ஆச்சரியமான ஒழுங்கமைப்பினைக் கண்டார். இதுவே ஆவர்த்தன அட்டவணையாக உருவெடுத்தது. மெண்டலீவின் ஆவர்த்தன ஒழுங்கில் சில



இடங்கள் அப்போது வெற்றிடங்களாக இருந்தன. அவ்விடங்களை நிரப்பக் கூடிய தனிமங்கள் இருக்க வேண்டும் எனவும், அவை இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் கூறிய மெண்டலீவ், அத் தனிமங்களின் பாரத்தையும், அவை கொண்டிருக்கக் கூடிய இரசாயன இயல்புகளையும் கூறினார். சில வருடங்களுக்குள் கலிலியம், ஜேர்மனியம் என்ற இரண்டு தனிமங்கள் இனம் காணப்பட்டு மெண்டலீவின் அட்டவணையில் நிரப்பப்படாது இருந்த இடங்களில் நிரப்பப்பட்டன. இந்த முறையானது பொருட்கள் அணுக்களினால் ஆனவையாக இருந்தால் மட்டுமே பொருத்தமானதாக இருக்கும் எனவும் காட்டப்பட்டது. இருப்பினும் இன்னமும்தான் அணுக்கள் உள்ளன என்பது திடமானதாக்கப்படவில்லை.

## இலத்திரன்கள்

இந்நாட்களின் அறிவியலின் அபரிமிதமான வளர்ச்சிக்கு இலத்திரன்களின் கண்டுபிடிப்பே காரணம் என்றால் அதனை மறுக்கமுடியாது. இந்த இலத்திரன்களின் பிரயோகமானது எங்கள் எல்லோருக்குமே தெரியும். 19ம் நூற்றாண்டில்தான் இலத்திரன்களும் இனம் கண்டு கொள்ளப்பட்டன. மிகவும் புத்திக் கூர்மையுடைய பிரித்தானிய விஞ்ஞானியான ஜே. ஜே. தொம்சன் என்பவர் இதனைத் தமது அயராத முயற்சியினால் இனம் கண்டு கொண்டார். இவரது முயற்சியினை மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

அக்காலத்தில் மின்சாரம், மின்லூட்டம் என்பன அறியப்பட்டு இருந்தன. இவை பற்றி சிறி தளவில், எமக்குத் தேவையான அளவிற்குத் தெரிந்து கொள்வோம். இலகுவான விளக்கத்திற்காக மின்கலங்களில் இருந்து பெறப்படும் மின்னோட்டத்தை எடுத்துக் கொள்ளுகிறேன். மின்னானது மின்கலம் (பற்றறி) ஒன்றின் இரு முனைவுகளில் ஒன்றான நேர்முனைவில் இருந்து எதிர்முனைவிற்கு ஓடுகையிலேயே மின் ஓட்டம் பெறப்பட்டு, மின்சார சக்தி கிடைக்கின்றது என நம்பப்பட்டு, அதற்கான குறியீட்டு வடிவங்களையும் கொடுத்திருந்தார்கள். மின்கலத்தின் இரு முனைவுகள் பற்றிக் கூறியிருந்தேன் அல்லவா, அம்முனைவுகளுக்கு இடையிலே உள்ள மின்அழுத்த வித்தியாசம் காரணமாகவே மின் நேர் முனைவில் இருந்து எதிர் முனைவுக்கு தொடுக்கப்பட்ட கம்பியின் ஊடாக வருகிறது என்று விளக்கமும் கொடுக்கப்பட்டிருந்தது.

தொம்சன் என்ன செய்தாரெனில், ஒரு கண்ணாடிக் குழாயை எடுத்து அதனை வெற்றிடமாக்கினார். பின்னர், அக்குழாயின் இரண்டு முனைகளுக்கும் இடையே உயர் மின் அழுத்த வித்தியாசத்தினைக் கொடுத்தார். அப்பொழுதுதான் அந்த அதிசயத்தைக் கண்டார். எதிர் முனையில் இருந்து வெற்றிடமான கண்ணாடிக் குழாயின் உள்ளாக நேர் முனைவை நோக்கி ஒரு கதிர் செல்வதை அவதானித்தார். இதுதான் இலத்திரன்களை இனம் கண்டு, பிற்காலத்தின் விஞ்ஞான வளர்ச்சிக்கு அடிகோலிய திருப்பு முனையாக இருந்தது. இக்கதிர்களுக்கு பீற்றாக் கதிர்கள் எனப் பெயரிட்ட தொம்சன், அந்தக் கதிர்களை மேலும் முனைப்பாக ஆராய்ந்தார். அவ்வாய்வுகளின் விளைவாக, பிற்றாக் கதிர்களுக்குக் காரணம், அதாவது பிற்றாக் கதிரில் இருப்பவை ஐதரசன் அணுவினையும் விடக் கிட்டத்தட்ட 2000 மடங்கு பாரம் குறைந்த, எதிர் மின்தன்மையுள்ள சின்னஞ் சிறிய துணிக்கைகள் என்பதனைக் கண்டு கொண்டார். அவற்றிக்கு இலத்திரன்கள் எனவும் பெயரிட்டார். இதுதான் இன்று எமது உலகினை ஆட்டிப் படைக்கும் இலத்திரன்களின் வரலாறு. இலத்திரன்கள் இனம் காணப்பட்டதும் துரிதமாக அது தொடர்பான விபரங்கள் ஆய்வாளர்களினது ஆய்வுகளின் ஊடாகப் பெறப்பட்டன. அதன் அடிப்படையில் தொம்சனால் அணுவிற்கு, டால்ரனின் திருத்திய வடிவமான ஒரு அணுவமைப்பினைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அது பற்றிய விபரங்களை அடுத்த தடவையில் பார்ப்போம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 96**



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

LICENCE IN 3 WEEKS
(IF QUALIFIED)




Free 1st Lesson for beginners Only

Learn To Drive Safely By Licenced Instructor.

Package A $95
1 Lesson + Car Rental for G2 Road Test

Package B $115
2 Lesson + Car Rental for G2 Road Test

Package C $165
4 Lesson + Car Rental for G2 Road Test

Package D $130
2 Lesson + Car Rental for G2 Road Test

$25 Lesson for G2
$30 Lesson for G

Call: Vicky - 647.284.5373

# கோபத்தைச் சமையலில் காட்டக்கூடாது! சமயத்திலும் காட்டக்கூடாது!

36

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள் நலம்பெறப் பிரார்த்திக்கிறேன். “யாரைத்தான் நம்புவது பேதை நெஞ்சம்” என்று ஒரு திரைப்படப்பாடல் கேட்டிருப்பீர்கள். ‘நம்ப நட நம்பி நடவாதே’ என்றும் நமக்குள் ஒரு உரையாடல் உண்டு. ‘வந்த நாள் முதல் இந்த நாள் வரை வானம் மாறவில்லை. வான்மதியும் மீனும் கடல் காற்றும், மலரும், மண்ணும், கொடியும், சோலையும் நதியும் மாறவில்லை. மனிதன் மாறிவிட்டான். மதத்தில் ஏறிவிட்டான்’ என்று பாடிய கவிஞர் கண்ணதாசனும் மனிதர்களைப் பற்றி நன்றாகச் சொல்லவில்லை. இறைவன் மனிதனுக்கு இந்த புத்தியைக் கொடுத்ததால் தான், பொய்யும், புரட்டும் திருட்டும் கலந்து அவன் பூமியைக் கெடுத்தான் என்றும் கண்ணதாசன் வருத்தப்பட்டார்.

நண்பா!
நல்லபடி வாழவேண்டும். பிறரையும் வாழவைக்க வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கு வரும் இடையூறுகள் பற்றி அறிந்திருப்பாய். இப்படியானவர் களுக்கு வரும் தடை, எதிர்ப்பு, வசைமொழி எல்லாம் எங்கிருந்து வருகிறது? கண்ணதாசன் சொன்னவர் களிடம் இருந்தே வருகிறது. ‘வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா!’ என்றார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இந்த இரு கவிஞர்களில் ஒருவர் நாத்தீகராய் இருந்து ஆத்தீரகராய் மாறியவர். ஒருவர் பொது உடைமைவாதியாய் வாழ்ந்தவர். இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே என்று ஆன்மீகத் தளத்தில் நின்று பாடி ஆதீனகர்த்தரான குன்றக்குடி குருமகாசந்திதானத்தையே கண்கலங்க வைத்தவர் இரண்டாம் மலரான பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

இந்த இரு கவிஞர்களும் மனிதர்களில் மதம் பிடித்த மனிதர்களை மாற்றி இதமான பிறவிகளை வாழச் சொன்ன கவியரசர்கள். மனிதர்களில் நம்பிக்கை வைக்காது போனால் வாழ்க்கை என்னாகும்? நம்பிக்கைதானே வாழ்க்கை. சந்தேகம் நரகவேதனையல்லவா? ‘தன்னைத்தானே நம்பாதது சந்தேகம் என்றான்’ இன்னொரு கவிஞன். நம்மை நாம் நம்பவேண்டும். நமக்குள் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். பிறரை ஆராய்ந்து பார்த்து நம்ப வேண்டும். ஆராய்ந்து நம்பிக்கை வைத்த பின்பு சந்தேகப்படுவதும் துன்பத்தை தரும் என்றார் திருவள்ளுவர்.

‘தேரான் தெளிவும், தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்’
என்பது அவர் சொன்ன திருக்குறள்.



இது குடும்பவாழ்க்கை, கூட்டுவாழ்க்கை, சமய வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை அனைத்துக்கும் தேவையானது. அரசியல் வாழ்க்கை எப்படி என்று கேட்கிறாயா? அதனை இனிக் கடவுளோடு விட்டுவிட வேண்டியது தான். நடக்கும் என்பார் நடக்காது. நடக்காது என்பார் நடந்து விடும். என்ற இரண்டும் கெட்டான் நிலை தானே இன்றைய உலக அரசியல். ஆட்சிக்கு வருபவர்கள் நல்லவர்களாய் இருக்க வேண்டும். இல்லையேல் மந்திர தந்திரங்களாலாவது அவர்களை நல்லவர்களாக்க வேண்டும் என்று சோக்கிரட்டீசின் சீடன் பிளாட்டோ சொன்னது நினைவிருக்கிறதா? எல்லாம் வல்ல இறைவனே அதையும் நீயே பார்த்துக்கொள் என்று விட்டுவிட வேண்டும். நமது கடமை, பங்களிப்பு, உரிமை முதலியவற்றைப் பேணுவோம். நிற்க!

நம்மை நாம் நம்புவதற்கும், நம்மோடு சேர்ந்தவர்களை நம்புவதற்கும் நமக்கு உதவக்கூடிய ஒரே ஒரு உண்மை கடவுள் தான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். இடரினும், தளரினும் நமது நோய் தொடரினும் அவன் திருவடிகளை நாம் நம்பித்தான் ஆக வேண்டும். கடவுளை நம்பியவர்களில் பலர் துன்பப்பட்டார்களே! துன்பப்படுகிறார்களே! என்ற கேள்வி பிறக்கிறது. உண்மைதான். இதற்கு கடவுளை நியாயம் கேட்கலாம், திட்டலாம், பேசலாம். நம்பிக்கை கொள்ளும் நமக்கு இந்த உரிமையும் உண்டு. மூன்று கண்ணுடையாய் என் கண்கொள்வது நீதியோ? என்று சுந்தரர் கேட்டார். நீ யாருடைய அடியான் என்று என்னை எவராவது கேட்டால். உத்தரகோசமங்கை என்னும் அரசுக்கு அரசனான உன் அடியான் எனச் சொல்லி, உன்னைச் சந்தி சிரிக்க வைப்பேன்’ என்று சிவபெருமானைப் பேசினார் மாணிக்கவாசகர். நம்முடைய நம்பிக்கை என்னும் உணர்வைச் செழுமைப் படுத்தவே, சமயம், கடவுள், வழிபாடு, தொண்டு, அன்புநெறி என்பதெல்லாம் உருவாகின.

நண்பா!
சமயம் என்பது உள்ளத்தைச் சமைக்கும் ஒரு சாதனம். அரிசி சமைந்தால் சோறாகிறது. காய் சமைந்தால் கறியாகும். உண்ண முடியாத அரிசியும், காயும் உணவாய் மாற உதவுவது சமையலல்ல. சமைத்த உணவு பசியை ஆற்றும். உடலுக்கு ஊட்டமும் கொடுக்கும். உடல் இயக்கத்திற்கு சக்தியாகி வாழ்க்கையை உடலுறு வாழ்க்கையை அனுபவிக்க உதவும். இது போன்றே சமயமும் உள்ளத்தைச் சமைக்கிறது. உணர்வுகளைப் பதமாக்குகிறது. மனத்தினைப் பக்குவம் ஆக்கி, பயனுறவாழ்ந்து மகிழ உதவுகிறது.

மனவாழ்க்கையே, உடல் வாழ்க்கைக்கும், உலக வாழ்க்கைக்கும் ஊன்று கோலாய் அமைவது. மனநிலை சரியாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தாலேயே, உடலியக்கமும் சரியாய் நடக்கும். மனிதனுக்குத் தேவையானவற்றை வரிசைப்படுத்திய நமது ஆன்மீகச் செல்வர்கள் அவனுடைய தேவைகளில் முதன்மைப்படுத்த வேண்டியது சமய வாழ்க்கையே என்று சாற்றினர்.


வாழ்க்கையை இலகுவாக்குவது சமயம். மகிழ்வு, திருப்தி, வெற்றி, பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிமுறைகள், அனுதாபம் அன்பு, சகிப்பு, மன்னிக்கும் மனநிலை, நியாயமான சிந்தனை, நீதியான தீர்ப்பு இத்தனைக்கும் சமய வாழ்வே வழி வகுக்கிறது. நமது சைவ சமயத்திலே எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் நினைப்பு, இன்பமே சூழ்க என்னும் விருப்பம், எல்லோரும் வாழ்க என்னும் இலட்சியம், சைவநீதி என்னும் நினைப்பு அத்தனையும் கோட்பாடுகளாய் கொள்ளப்படுகின்றன.

மனிதனைச் சரியாக வாழவைக்க வேண்டும் என்ற உரத்த உயர்ந்த சிந்தனையின் வெளிப்பாடே ‘சமயம்’ என்றசொல்லாய் வெளிப்பட்டது. மதம் என்னும் பதம் சைவம் சார்ந்து வந்த சொல் இல்லை. மதம் ஆணவத்தின் அலை. யானைக்கு கன்ன மதம், கபோத மதம் என்று வந்தால் கவலைக்குரிய காரியங்களைச் செய்யும். தமிழ் சைவநெறியின் சொல்லாக்கம் அவசரப் பொங்கல் அல்ல. ஆழ்ந்து அகன்று அடங்கிய கொள்கைச் சான்றாண்மையின் சமையல். நிற்க! சமயம் நம் உணர்வுகளைச் சமைப்பதோடு மட்டுமல்லாது சைவசம்பந்தமுடைய சிவபெருமான் நமக்காகச் சமைப்பதையும் சுட்டி நிற்கின்றது. சிவபெருமான் நமக்காகச் சமைப்பதும் சமயமே. நாம் மட்டும் சமயியல்ல, நமது குடிமுழுதாளும் சிவனும் ஒரு சமயியே. ‘சைவா போற்றி!’ என்கிறது திருவாசகம்.

சைவசமய வாழ்வை நாம் மேற்கொண்டதும் சமயியான சிவனும் நமக்கு வேண்டியதைச் சமைக்கத் தொடங்குகிறான். சிவன் நமக்காகச் சமைப்பான் என்பது உண்மை. முக்காலும் உண்மை. ஆனால் அவன் என்ன சமைக்கிறான் என்பது நமக்குத்தெரியாது. கல்விக் கூடத்தில் இருந்து படிக்கும் பிள்ளைக்கு வீட்டிலிருக்கும் தாய் சமைப்பாள். இந்த நம்பிக்கையும் பிள்ளைக்கு இருக்கும். ஆனால் தனது தாய் என்ன சமைப்பாள் என்பது தெரியாது. பசிவந்து பள்ளிக்கூடம் விட்டு, வீடு வந்து சாப்பிட உட்கார்ந்ததும் தான், தாயின் சமையல் எது? எது? என்பது பிள்ளைக்குத் தெரியும்.

சிவபெருமானின் சமையலும் சிவனடியார் களின் வாழ்வும் இத்தகையதே. சிவபெருமான் சமைத்த சமையல் நமக்கு கிடைக்காது போதலும் உண்டு. தாய் சமைத்த சமையல் பிள்ளைக்கு கிடைக்காமல் போகும் நிலைகளும் வீடுகளில் உண்டு. நண்பா! இங்குதான் கடவுள் அருளின் நுட்பத்தை புரிந்து கொள்ள வேண்டும். ‘வேண்டும் பரிசு உண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே’ என்று திருவாசகம் குறிப்பிடும் திருவருள் சித்தம் வியப்பானதே.


அன்னை சமைத்த



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

# தமிழரின்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

பதிலாக ஒருவர் வயலின் வாசித்தார். வாசித்தவர் ஒரு சாதாரணமான கனடாப் பிரஜையல்ல. அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வயலின் வித்துவான் திரு. முல்லைவாசல் சந்திர மௌலி. அவரைப் பற்றிக் கனடாத் தமிழருக்கு அதிகம் தெரியாது என்றே நினைக்கிறேன். அவரைப் பற்றி அறிவது நல்லது என எண்ணுகிறேன். இவர் தஞ்சாவூர்க்காரர். பல இசை மேதைகளைத் தந்த மாவட்டம். இவர் காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்துவான். பல பிரபல பாடகர்களுக்குப் பக்கவாத்தியம் வாசித்த பெருமைக்குரியவர். 2௦ வருடங்களுக்கு மேலாகப் பல நாடுகளில் தனிக் கச்சேரிகள் செய்து புகழ் பெற்றவர். இத்துடன் இவர் இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரியின் பட்டதாரி (ITT) . இவர் ஆர். கே. வெங்கடராம சாஸ்திரி, வீ.வீ. சுப்பிரமணியம் ஆகியோரின் மாணவர்.

நான் மண்டபத்துக்குள் நுழைந்தபோது 'சிந்திவிநாயகம்' என்ற சண்முகப்பிரியா இராகத்திலமைந்த தெய்வீகப் பாடலை அவர் வாசித்துக் கொண்டிருந்தார். வயலின் நாதம் மண்டபம் யாவும் நிறைந்திருந்தது. கணீரென்ற கம்பீர இசையில் சபையோர் மெய்மறந்திருந்தனர். மிருதங்க வாசித்துக் கொண்டிருந்தவர் அன்றைய விழா நாயகன் அரவிந் குகேந்திரன். தந்தை குகேந்திரனை கால்நூற்றாண்டுக்கு மேலாக அறிவேன். ஆனால் மகனைச் சிறுவனாகப் பார்த்தபின் அன்றுதான் ஒரு இளைஞனாகப் பார்த்தேன். அதுவும் ஒரு கலைஞனாகப் பார்த்தேன். அவரது வாசிப்பிலிருந்து அவர் ஒரு கைதேர்ந்த கலைஞராகி விட்டதை நன்கு உணர முடிந்தது. அவரது புன்சிரிப்பும் மிருதங்கத்தை லாவகமாக வாசித்ததும் அவர் ஏற்கெனவே பலமேடைகளில் வாசித்து பண்பட்டவர் போலத் தோன்றினார். பொதுவாக ஒரு பிரபல வித்துவானுக்கு வாசிக்கின்றோமே என்ற பயமெதுவுமின்றிப் புன் சிரிப்போடு, அவரது முகபாவனைகளைப் புரிந்து கொண்டு வாசித்தமை பாராட்டுக்குரியது. வயலின் வாசித்த திரு. சந்திரமௌலியையும் பாராட்டாமல் இருக்க முடியாது. வித்துவான்களுக்கு வழக்கமாகவுள்ள செருக்கோ, பந்தாவோ எதுவுமின்றி, பக்கவாத்தியக்காரரும் இளைஞர், மிருதங்கம் வாசிப்பவரும் இளைஞர் என்றதை மனதில் கொண்டு தனது வாசிப்பை மெருகூட்டும் வகையிலும் தாளம் பிழைக்காமல் இருக்க அவர்களைப் பார்த்து முகபாவனையால் வழிநடத்திச் சென்ற விதம் அவரின் பண்பட்ட மனதைப் பெரிதும் வெளிப்படுத்தியது. பக்க வாத்தியக்காரரைத் திணறடிக்கும் வகையில் இராகங்களையும் ஆலாபனைகளையும் அடுக்கடுக்கே வைத்துப் பாடிக் கரகோசம் பெற்ற பல வித்துவான்களின் கச்சேரியை சென்னையிலுள்ள பல சங்கீத சபைகளில் பார்த்துப் பழக்கப்பட்ட எனக்கு, இவரது பண்பு பாராட்டக்கூடியதாய் இருந்தது.

மேலும் அன்றைய அரங்கேற்றத்துக்கு ரொறொன்ரோவிலுள்ள பல கலைஞர்கள் வந்திருந்தனர். அவர்களையுமறியாமல் அவர்களது கைகள் தாளம் போடுவதைக் காணக்கூடியதாய் இருந்தது. எது எப்படி இருந்தாலும் தமிழ் நாட்டுக் கலைஞர்களுக்கு நம்மவர் ஈடுகொடுக்கும் நிலை வருமா என்பதைக் காலந்தான் பதில் சொல்ல வேண்டும். அன்று பக்கவாத்தியம் வாசித்த கலைஞர்களில் இருவர் வாசு மாஸ்ரரின் மாணவர்களாகவும், குரு சுஜீந்தர் தர்மலிங்கமும் அவரது மாணவராகவும் இருந்தார்கள். சங்கீத ஞானம் இல்லாத பலருக்கு இந்த எண்ணமே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் கௌரவவிருந்தினர் கணபதியும் ஒரு புகழ் பெற்ற மிருதங்கவிற்பன்னர். அவர் பேசும்போது அரங்கேற்றத்தின் போது பாடகருக்கு வாசிப்பதே மிகவும் கஷ்டமானது. இங்கே வயலின் இசைக்கு மிருதங்கம் சிறப்பாக வாசித்த அரவிந்தை மனதாரப் பாராட்டினார். அரவிந்த இரு மோதிர விரல்களால் குட்டு வாங்கிய பெருமைக்குள்ளாகின்றார். ஒன்று திரு கணபதி மற்றையது திரு. சந்திரமௌலி.

அடுத்தது அரவிந்தின் குரு சுஜீந்தர் பற்றியும் கூறித்தான் ஆகவேண்டும். அவர் விடாமுயற்சி, கடவுள் பக்தி, கலையார்வம், எடுத்ததைச் செவ்வனவே செய்யும் ஆற்றல் யாவற்றிற்கும் இலக்கணமாகித் திகழ்கிறார். அவரது குடும்பம் பற்றி நன்கறிவேன். குறிப்பாக அவரது தாயாரின் கடும் உழைப்பும் தியாகமும் பாராட்டுக்குரியவை. அடுத்து குகேந்திரனும் அவரது மனைவி மாலாவும் கொடுத்து வைத்தவர்கள். நல்ல அழகாக கலையார்வமும் கடவுள் பக்தியுமுள்ள பிள்ளைகளைப் பெற்றவர்கள். அவர்கள் யாவருக்கும் ஆண்டவன் அருள் எப்போதுங் கிடைக்கும்.




இவர்கள்தான் எமது கலையின் வருங்காலக் காவலர்கள் என்பதில் ஐயமில்லை.

அன்றைய கச்சேரிக்குப் பிரதமவிருந்தினராக பிரபல வயலின் வித்துவான் திருமதி. மித்திரதேவாவும், கௌரவவிருந்தினர் திரு. கணா எஸ். கணபதியும், விசேட விருந்தினராக திரு. தம்பையா சிறீபதியும் கலந்து கொண்டனர். வழக்கம் போல சிறீபதி அவர்கள் வெண்கலக்குரலில் அழகாகப் பேசினார். அவரது பேச்சிலிருந்து ஒரு வசனம் என் கவனத்தைக் கவர்ந்தது. உலகளாவிய புகழ்பெற்ற 'சுப்பர் சிங்கர் 3' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்த பின்புதான் சினிமாப் பாடல்களும் சாஸ்திரிய சங்கீதத்தைக் கொண்டுள்ளன என்பதை அறியமுடிந்தது என்றார். நானும் சினிமாப் பாடல்களை 'டப்பாங் கூத்திசை' ஒன்றும் சங்கீத அடிப்படை இல்லாதவை என்றும் அந்நாட்களில் எண்ணியிருந்தேன். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தான் உண்மை நிலையை எனக்குணர்த்தின.

பொதுவாக எம்மவர் நிகழ்வுகளில் நேரத்துக்கு நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பதும் முடிப்பதும் பெரிய குறையாக உள்ளது. நிகழ்ச்சியின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு கணித்திட்டமிடுவது நல்லது. மொத்தத்தில் ஒரு நிறைவான அரியதோர் கலை நிகழ்ச்சியைப்பார்த்த மன நிறைவோடு சிலர் இடைவேளையோடு செல்லப் பலர் இறுதி வரைக்கும் இருந்தனர். வாழ்க அரவிந்தன்.

**GTA ACCOUNTING SERVICES**

**For your Accounting Needs & Tax Return :**
*Whether It Is Personal Or Business*

**For Business We Do:**
- ✓ Pay Roll
- ✓ GST/HST
- ✓ Book Keeping - Up dated Monthly
- ✓ Yearly Tax Return

**Revenue Canada**
**படிவங்களை உரிய நேரத்தில் சமர்பிக்க**
- ❖ GST / HST படிவங்கள்
- ❖ PAYROLL செய்து, Remittances அனுப்ப
- ❖ வருட கணக்குகளை உரிய நேரத்தில் முடித்து, வருடாந்த வரிப்பத்திரத்தை (Annual Tax Return) யை பரிசீலனை செய்து (Revenue Canada ) க்கு அனுப்ப
- ❖ குடும்ப GST உரிய நேரத்தில் கிடைக்க வழி செய்ய
- ❖ பிள்ளைகளின் OSAP பத்திரங்களை தாமதம் இன்றி சமர்பிக்க வழி செய்ய

எல்லாவற்றிக்கும் மேலாக ஒரு முழு நேர கணக்காளரின் சேவையினை உடன் பெற்று கொள்ள

**RAJ . V . RAJENTHIRAM**

தொலை பேசி : 416-887-5351; Email ID GTA.ASERVICE@GMAIL.COM

If the delay is on our part, Service is Free.
Some Conditions Apply.

**யாழ் இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா பெருமையுடன்**

**அளிக்கும் கலையரசி**

சனிக்கிழமை, ஒக்ரோபர் 08, 2011, மாலை 5.31 மணிக்கு *Chinese Cultural Centre, 5183 Sheppard Avenue East, Scarborough - (Sheppard Ave E & Progress Ave)* இல் நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் நலன் விரும்பிகளையும் தமது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

231

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஒக்ரோபர் 6 விசயதசமி வாழைவெட்டு
கல்வியா? செல்வமா? வீரமா?
பல விடயங்களை நாம் மறந்துவிட்டோமா?
உலகர் தனது மனதுக்குள்ளேயே நினைத்துப்பார்த்தார்.

சரஸ்வதி பாமாலை ஆகக்கூடிய சத்தத்தில் ஒலித்துக்கொண்டிருந்தது. அதாவது ரூபன் வீட்டிலில் இல்லாவிட்டால்தான் உலகரின் குரலும் பழைய ரேடியோவும் பெலத்துச்சத்தம் கேட்கும். ராசம்மா கையில் பேப்பரும் பென்சிலுமாக நினைத்து நினைத்து எழுதிக்கொாண்டிருந்தா.

அவல் சுண்டல் கற்கண்டு கரும்பு மாம்பழம் மாதாளம்பழம் விழாம்பழம்…
என்ன ராசம்மாக்கா ஏதேன் மறந்து போனியளே..என்று செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்க.. செல்லம்மா கனபேர் நவராத்திரியையே மறந்துபோச்சினம் ராசம்மாக்கா சரஸ்வதி பூசைக்கு ஒண்டு ரண்டு சாமான் மறந்தா என்று சிரித்துக்கொண்டு சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.



எல்லா கோயில்களிலும் 6ம் திகதி ஏடு தொடக்கினம். தாய் தேப்பனுக்கு நேரம் இருந்தால்தானே பிள்ளையளைக் கூட்டிக்கொண்டுபோக என செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல...

ஆட்டிலறி அன்னம்மா சிரிச்சுக்கொண்டு சொன்னா உலகண்ணை தமிழ் தமிழ் எண்டு வாராவாரம் விழாக்கள் பேச்சுப்போட்டி நடனம் நாடகம் சங்கீதமெண்டு கொஞ்சப்பேரெண்டாலும் கஸ்டப்படுறதாலைதான் கனடாவிலையிருந்து சுப்பசிங்கர் நிகழ்ச்சிக்கு கொஞ்சப்பேர் தமிழ்நாட்டிலை போய் பேரெடுத்துக்கொண்டு வந்திருக்கினம் எனச்சொல்லி ஒரு வெற்றிப்பெருமூச்சுவிட்டா.



புரட்டாதிச்சனி கோயில்கள் எல்லாம் எள்ளெண்ணை தீபம். காகங்களுக்கு சோறு வைப்பவர்களில்லை. சோறு சாப்பிட காகங்களுமில்லை. மக்களில் பலரும் திவசம் திதி மாளையம் போன்றவற்றை மறந்துவிட்டனர். பறவைக-ளான காகங்களுக்கு எங்கே தெரியப்போகிறது.
பெரியோரைக் கனம்பண்ணு!



உலகண்ணை! எங்கடை பிள்ளையள் கல்லூரி முடிந்து யூனிவசிற்றி செல்ல குறிப்பிட்டளவு சமூகசேவை செய்திருக்க வேண்டும். (வொலன்ரியர் வேக்) எல்லோரும் அதனை முடித்தபின் தான யூனிவசிற்றிக்கு போயினம் என்று ஆவேசத்துடன் தொடங்கிய ஆட்டிலறி அன்னம்மா. ஆனால் கோயில் குளத்திலையோ பொது நிகழ்ச்சிகளிலோ முதியவர்கள் கைத்தடியுடனோ தள்ளிச்செல்லும் வண்டில்களுடனோ நின்றால்கூட பல இளம் சந்ததியினர் விட்டுக்கொடுப்பதோ உதவும் மனப்பான்மையுடன் முன்வந்து உதவுவதில்லை என கன முதியவர்கள் மனதுக்குள் புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி முடிக்கமுன்...

இப்ப சொந்த பிள்ளையளே தாய் தேப்பனைக் கவனிக்கிறேல்லை என்று சொல்லவும் முருகேசர் கண்ணீர் வடிந்தபடி உலகரைத் திரும்பிப்பார்த்தார். முருகேசர் இதுவரையில் 4 தடவை அம்புலன்சில் ஹொஸ்பிற்றலுக்கு சென்று வந்துவிட்டார். மகனுக்கும் மகளுக்கும் ரெலிபோன் செய்தும் இன்றுவரை ஒருவரும் வரவில்லை.



உலகங்கிள் ஏதன் சீரியஸ் என்றால் மட்டும் அடியுங்கோ. சும்மா அடிக்கடி அம்புலன்சிலை போனதுக் கெல்லாம் அடிக்காதேங்கோ. சீரியசெண்டால் மட்டும் அடியுங்கோ என்பதின் அர்த்தம் உலகருக்குத் தெளிவாகப்புரிந்தது.

ரெலிபோனை வைக்கும்போது, அடிக்கடி அம்புலன்சிலை போய் வீணா சனத்தின்ரை ராக்ஸ் காசை வீணாக்கிறதுதான் சில பெரிசுகளின்... என்று முருகேசரின் மகன் முணுமுணுத்தது உலகருக்கு தெளிவாகப்புரிந்தது.
நல்லவேளை உலகர் அதனை முருகேசருக்குச் சொல்லவில்லை

மகன் தந்தைக்காற்றுமுதவி??????
வாழ்ந்தவர் கோடி மடிந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர் யார்?

### ஞாபகம் வருகிறதா! ஒக்ரோபர் மாதம்



2. கருமவீரர் காமராஜர் நினைவு தினம்.
3. சரஸ்வதிபூசை ஆரம்பம்.
5. ஆயுத பூசை
6. விஜயதசமி - வாழைவெட்டு.
6. ஓவியர் ரவிவர்மா நினைவு தினம்.
8. இணுவையூர்- வீரமணி ஐயர் நினைவுதினம் (2003)
10. Thanksgiving Day - Holiday
15. புரட்டாதி கடைசி சனி




# கோபத்தை...

## 36ஆம் பக்கத்தொடர்ச்சி

சமையலை உண்ண முடியாத நிலையில் பிள்ளை நோய்வாய்படுவதைக் காண்கிறோம். தாயின் விருப்பமும் பிள்ளையின் தேவையும் கைகூடாமைக்கு ‘நோய்’ காரணமாகிறது. நோய் மாறிய பின்பே தாய் சமைத்த உணவைப்பிள்ளை உண்ண முடியும். தாயான ஈசன், சிவன், நமக்காகச் சமைத்த சமையலை நாம் அனுபவிக்காமல் தடுப்பது ‘விதி’ என்னும் நோயே.

விதியை ஊழ் என்றும் கூறுவார்கள். ஆ கூழ், போ கூழ் என்று ஊழும் இரு வகைப்படும். ஆக்கும் விதி போக்கும் விதி என்று பொருள் கூறலாம். நமக்குப் போகூழ் உண்டானால் இறைவனின் சமையல் கைக்கு எட்டினாலும் வாய்க்கு எட்டாது போய் விடும். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற எம்மவர் பழமொழி கேட்டிருப்பாய். உனக்கும் எனக்கும் கைக்கு வந்து வாய்க்குப் போகாமல் நழுவியவற்றினை நினைத்துப்பார். ஆகூழ் இருந்தால் இறைவனின் சமையல் நமக்குக் கிடைக்கும். இறைவனுடைய சமையலை வாரி விழுங்கிய பொழுது விக்கல் வந்து தடுத்தமையை மணிவாசகப்பெருமான் ஆராமையோடு அழுதிருக்கிறார். ‘உன் அருளாளர் அமுதத்தை வாரிக் கொண்டு விழுங்கினேன், விக்கினேன், வினையேன் என்விதியின் மையால்’ என்று வெதும்பினார். கைக்கு வந்து வாய்க்குள் போய் கழுத்தில் சிக்கிக் கொண்ட ஆ கூழ் போ கூழாகிய தலை எழுத்துக்கள் எத்தனை. விக்கலை விலக்க என்ன வழி? கடவுளிடமே மன்றாடுவது தான் வழி. ‘தண்ணீர் தந்து உய்யக் கொள்’ என்று மணிவாசகர் கேட்டார், பெற்றார்.

அன்பு செய்யும் இறைவனே அருளுக்கும் உரியவன் அன்பு இல்லாத இடத்தில் அருளுக்கு வழி ஏது? அருள் என்னும் குழந்தையை ஈன்று புறம் தருவது அன்பு என்னும் தாயே என்பார் திருவள்ளுவர். அன்பே ஆன சிவனே விருப்போடு நமக்குச் சமையல் செய்வான். வாரி வழங்குவான். உண்க! உண்க! என்று ஊட்டுவான். நமக்கு விக்கல் வரவேண்டும் என்பது அவன் விருப்பமா? இல்லை விக்கல் என்பது தாய் விரும்பாத தடை. அத்தடை உடைக்க தண்ணீர் பருக்கும் தயா, இரக்கம் தாய்க்கு உண்டு. தாயினும் சாலப்பரிவுடைய சிவன் நமக்கு இருக்கும் விக்கலை விதியை அறியாதவனா? அறிவான். அதனை விலக்க அருளும் செய்வான். மணிவாசகரின் விதி விக்கலை நீக்கி உய்யக் கொண்ட பெருங்கருணை சிவனுடையது.

சமையல் செய்வது முதற்காரியம். அதனைச் சாப்பிட்டுப் பயனாக்குவதே உச்சகாரியம். உண்ணாத சமையல்களில் உதரத்திற்கும் பயன் இல்லை. உலகத்திற்கும் பயன் இல்லை. உண்ணாத சமையலாலே தான் உலகம் தடம் புரள்கிறது. ஏன்? வீடுகளில் கோபித்துக் கொண்டு, சமைத்த சமையலை உண்ணாது உபத்திரவப்படுபவர்கள் எத்தனை பேர். கோபத்தை சமையலில் காட்டக்கூடாது. கோபத்தை சமயத்திலும் காட்டக்கூடாது. இறைவன் சமைத்த அருள் உணவை உண்ணும் வாய்ப்புக்கும் அவனருளே வேண்டும். உண்பதற்கு முன்பு நம்மவர்கள் ‘அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்’ என்ற அப்பர் தேவாரத்தைப் பாடிய பின்பே உணவினை உண்டகாட்சி நினைவிருக்கிறதா? நண்பா!

இப்பொழுது பாடுவதற்கு நேரம் இல்லைதான். உணவைத் தந்த இறைவனை ஒரு கணம் நினைத்துக் கொண்டு உண்டாலே போதும். நினைப்பவர் மனம் கோயிலாய் கொள்வான். விதி விலக, நல்லூழ் கைகூட, பயன்கள் கிடைக்க நமக்காகச் சமைக்கும் இறைவனை நினைப்போம். வீட்டில் நமக்காகச் சமைக்கும் தெய்வ மணிக்கைகளைப் பாராட்டுவோம், மதிப்போம், பேணுவோம். நம்பினோர் நலிவதில்லை.

வேறு என்ன பிறபின்பு.

# A Time...

## 39ஆம் பக்கத்தொடர்ச்சி

கழுவர்’ (Death on a Full moon day) என்ற சிங்களப் படம். இதனை நெறியாள்கை செய்திருப்பவர் பிரசன்ன விதானகே. இப்படத்தில் வயது வந்த முதிர்ந்தவராக நடித்திருப்பவர் அண்மையில் இறந்து போன ஜோ அபேவிக்ரம. சிவாஜியைப் போன்று அதீத நடிப்பு இவருக்கு தெரியாது. இயல்பான நடிப்பால் பல விமர்சகர்களின் பாராட்டையும் விருதையும் பெற்ற நல்லதொரு கலைஞர் ஜோ.

இரத்தினபுரிக்கு அருகில் உள்ள லிலோபிட்டிய என்ற கிராமத்தில் பிறந்து கிராமிய சூழலில் வளர்ந்தார். 1940ல் கொழும்பில் நவஜீவனா தியேட்டரில் வேலைக்குச் சேர்ந்த இவர் தொடர்ச்சியாக ஏற்பட்ட தொடர்புகளால் முதன் முதலில் தேவசுந்தரி என்ற படத்தில் நடித்தார். அதன் பின்னர் பல படங்களில் பல்வேறு பாத்திரங்களில் நடித்தார். சிங்கப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில் 1988ல் சிறந்த ஆசிய நடிகராக பரிசு பெற்றார். நகைச்சுவை நடிகராக திரையுலகில் புகுந்த இவர் ஒரு சிங்கள சூப்பர் ஸ்ராக மாறினார். அதற்காக பல வில்லன்களை ஒரே தடவையில் அடித்து நொருக்கியும் ஐம்பது வயதில் 18 வயது பெண்ணுடனும் டூயட் பாடவில்லை. இவர் நடித்த பாத்திரங்கள் இவரை அந்தளவிற்கு உயர்த்தியுள்ளது. றோபர்ட் டி நீரோ, மாலன் பிராண்டோ போன்ற சிறந்த நடிகர்களுடன் ஒப்பிடும் அளவிற்கு சிறப்பாக நடித்துள்ளார். இவரும் சிங்களத் திரையுலகும் ஒரே நேர் கோட்டில் வளர்ந்தாக சிங்கள விமர்சகர்கள் கூறுவார்கள். மிகவும் தன்னடக்கமும் திறனும் கொண்ட இவரது இழப்பு சிங்களத் திரையுலகிற்கு ஈடுகட்ட முடியாதது. ‘மகா பம்புட்ட முகுணு தேகை’ (Maha Bambata Muhunu Dekai) என்ற நாவலையும் எழுதியுள்ளார்.

# A Time...

19 ஆம் பக்கம் தொடர்ச்சி

தயங்கும். காரணம் கடும் குளிர். இவற்றை நடப்பிக்க குதிரைகளுக்கு வொட்கா மதுபானம் கொடுக்கப்படும். அயூப் பல கடினங்கள் மத்தியில் தனது குடும்பத்தை வழிநடத்துகின்றான் இந்த 12வயது சிறுவன். இந்நிலையில் மாடி யை பரிசோதிக்க அவ்வப்போது இக்கிராமத்துக்கு வரும் ஒரு வைத்தியரே ஆறுதல். அவர்கள் கூறும் ஆலோசனைப்படியே அயூப் மாடியை பராமரிக்கின்றான். திடீரென ஒரு நாள் வைத்தியர் குண்டு ஒன்றை தூக்கிப் போடுகின்றார் 'அயூப்பை எல்லைக்கப்பால் உள்ள வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும். இல்லையேல் அவனது வாழ்வு ஒரு மாதம் தான்'. அயூப் சத்திர சிகிச்சைக்கான பணத்தை திரட்ட பல சிரமங்களை மேற்கொள்கின்றான். மிகவும் கடினமான வேலைகளைச் செய்யவும் துணிகிறான். அயூப்பின் மாமா அயூப்பின் தங்கைக்கு திருமணம் செய்து கொடுப்பதன் மூலம் பெறும் பணத்தைக் கொண்டு மாடிக்கு வைத்தியம் செய்யலாம் என அறிவுரை கூறுகின்றார். சம்பந்தி பகுதி பணத்திற்கு பதிலாக கழுதை ஒன்றைக் கொடுக்கின்றனர். கழுதையை விற்க அயூப் படாத பாடுபடுகின்றான். கண்ணி வெடிகள் உள்ள பகுதியினூடாக ரயர்களைக் கூட கடத்திவருகின்றான். உண்மையில் இந்த சத்திரசிகிச்சையால் மாடி இன்னமும் எட்டு மாதங்கள் அதிகமாக உயிர்வாழலாம். இதனைத் தெரிந்து கொண்டும் அயூப் எடுக்கும் முயற்சிகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன. மாடிக்கு ஒவ்வொரு நாளும் மாத்திரைகள் கொடுக்கப்படவேண்டும். ஒரு தடவை எல்லைப் பகுதியில் மாத்திரை கொடுத்த போது எல்லை அதிகாரி துரத்துகின்றார். மாத்திரை கொடுத்த பின் குடிக்க தண்ணியில்லை. பனியே தண்ணியாகவும் கொடுக்கப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் வெளிவந்த சிறந்த நவ-யதார்த்தவாதப் படத்திற்கு இது ஒரு நல்ல உதாரணம். இதனை யதார்த்த விவரணப் படவகையில் (realistic documentary style) கூடச் சேர்க்கலாம். ஏனெனில் இது அப்பகுதியில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களை மையமாகக் கொண்டது. இவர்களது மன உறுதியையும் வறுமையையும் பதிவு செய்துள்ளது. வறுமை இங்கு ஒரு கருவாகவில்லை. மாறாக வாழ்வாக உள்ளது. இதனால் தான் பார்வையாளர்களும் இந்த வாழ்வை உணருகின்றார்கள். இப்படம் உலகை பல கேள்விகள் கேட்கின்றது. இங்கு அரசியல் எதுவும் இல்லை, அதைப்பற்றிய விமர்சனங்களும் இல்லை. ஆனால் பார்வையாளர்கள் இக்கிராமத்தின் நிலைக்கு அரசியல் தலைவர்களையே தேடுவார்கள். அதன் பாதிப்பை இங்கு காணலாம். இக்கிராமம் அதன் வெளிப்பாடே. படத்தை ஆய்வு செய்பவர்கள், பார்வையாளர்கள் அனைவருக்கும் எழும் முதல் விமர்சனம் அரசியல் வெளிப்பாடாகவே இருக்கும். படத்தில் நடித்தவர்கள் அனைவரும் திரையுலகிற்கு புதியவர்கள். இயல்பாக நடித்துள்ளார்கள். கான்ஸ் திரைப்படவுலகில் மிகச் சிறந்த புதுமுக இயக்குனர் விருதைப் பெற்றுள்ளார் Bahman Ghobadi.

இப்படத்தின் இயக்குனர் Bahman Ghobadi க்கு இது முதலாவது படம். இதனை முதலாவது குர்டீஸ் படமெனவும் கூறலாம். இயக்குனர் ஒரு குர்டீஸ். இதே கிராமத்தைச் சேர்ந்தவர். 1969ல் பிறந்த இவர் பல பிரபல இயக்குனர்களிடம் பயிற்சியாளராக பணிபுரிந்துள்ளார். Life in Fog என்ற இவரது குறும்படம் மிக பிரசித்தமானது.

கடந்த காலங்களில் பல ஈரானியப் படங்கள் சிறுவர்களின் யதார்த்த உலகை வெளிப்படுத்தியுள்ளன. Children of heaven. The Color of Paradise, White Balloon, Turtles Can Fly, Where Is the Friend's Home? போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவ்வரிசையில் இப் படமும் உள்ளது.

# ஜோ அபேவிக்ரம

## (22 June 1927 - 21 September 2011)

புலர்ந்தும் புலராத ஒரு காலைப் பொழுதில் ஒரு வயது முதிர்ந்தவர் கிடங்கு ஒன்றை வெட்டிக் கொண்டிருந்தார். கிழவனுக்கு கண்கள் தெரியாது. அப்படி என்ன அவசரம்? கிடங்கு வெட்டுவதற்கு. அங்கு அவரது மகனின் உடல் அடங்கிய பிரேதப் பெட்டி புதைக்கப்பட்டிருந்தது. மகன்



இறந்திருக்கமாட்டான் என்பது அவரது நினைவு. விதானையார் பிரேதப் பெட்டியை திறந்து பார்க்க அனுமதி கொடுக்கவில்லை. அயலவர்கள் கூடி விட்டார்கள். இறுதியில் பிரேத பெட்டியை திறந்த போது அங்கு இருந்தது ஒரு வாழைக் குத்தி. இக்காட்சி இடம் பெற்ற படம் 'புர கண்ட

தொடர்ச்சி 38ஆம் பக்கம்



# பங்ஷின்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி


சூப்பர் சிங்கர் பட்டம்' பெற்றார். சந்தோஷ், 'ரன்னர் அப்'பானார். நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சத்யபிரகஷும் பூஜாவும் மூன்றாவது மற்றும் நாலாவது இடத்துக்கு தள்ளப்பட்டனர். வெற்றிபெற்ற சாய்சரனுக்கு 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான பூஜாவுக்கு ஒரு லட்சம் ரூபாயும் பரிசாக வழங்கப்பட்டது. ஆனால், இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ மேடையிலேயே, "நான்கு பேரில் சத்யப்ரகாஷ் தான் என்னுடைய ஃபேவரிட்" என சொன்னது, சத்யபிராகஷுக்கு பெரிய ஆறுதலாக இருந்திருக்கும்.



அபார்ட்மென்ட வீடு ஒன்று பரிசாக வழங்கப்பட்டது. இரண்டாவது வெற்றியா-ளரான சந்தோஷ்க்கு டாடா விஸ்டா காரும், 3வது வெற்றியாளரான சத்யபிரகாஷ்க்கு 3 லட்சம் ரூபாயும், 4வது வெற்றியாளரான வெற்றிபெற்ற சாய்சரணுக்கு மற்ற போட்டியாளர்கள் மேடையிலேயே வாழ்த்துகள் சொல்லியது நெகழ்ச்சியாக இருந்தது.

# "எம்.ஜி.ஆரை...

32ஆம் பக்கத்தொடர்ச்சி



"சில வருடங்களுக்கு முன்பு சினிமா சங்கங்களின் வேலை நிறுத்த போராட்டம் நடந்த காலத்தில் நான் தொப்பி அணிவதை நிறுத்தியிருந்தேன். அப்போது என்னைப் பார்த்த பாரதிராஜாவும் கமலஹாசனும் ரஜினிகாந்த்தும், "பாலு, தொப்பி இல்லாத நீங்க முழுமையடையாம இருக்கீங்க. நாமெல்லாம் இருப்பது ஒரு கிளாமர் உலகத்தில்தான். இங்கே நீங்கள் ஷோமேன் மட்டுமே. அதனால் தொப்பியை எடுக்கக்கூடாது" என்று சொன்னார்கள். இயக்குனராக இயங்கிய போது வெயிலிலிருந்தும் தூசியிலிருந்தும் என்னை காப்பாற்றிக் கொள்ளவே தொப்பி அணிய ஆரம்பித்தேன். பிறகு, முடி கொட்ட ஆரம்பித்த போது அதுவே அதை மறைக்க பயன்பட்டது. நான் இப்போது பயப்படுவதெல்லாம் எம்.ஜி.ஆரை போல என்னையும் என் மரணத்திற்கு பிறகு தொப்பியோடேயே அடக்கம் செய்து விடுவார்களோ என்றுதான்."

சிரித்தபடியே உரையாடலை நிறைவு செய்கிறார், பாலு மகேந்திரா.





